# தமிழரசு

ஜூலை 1 1973 40 காசு






# சிறு தொழிலுக்கோர் உறுதுணை...... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH L&T Switchgear

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**

P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1,
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

## நான்காம் ஆண்டில் நமது நடை

"அரசுத்துறை ஏடு இது என்றால்....நம்ப முடியவில்லையே! ஏனைய பத்திரிகைகளுடன் போட்டியிடும் அளவுக்குச் சிறப்புடன் வெளி வருகிறது"—இப்படிப் பலர் பாராட்டுக் கூறியுள்ளார்கள்.

"அரசு செய்யும் சாதனைகளைத் தெளிவாகச் சொல்லி, விளக்கிவரும் உங்கள் ஏடு நல்ல தொண்டு செய்து வருகிறது"—இப்படிச்சிலர் தெரிவித்துள்ளார்கள்.

இவ்வாறு தமிழகத்து மக்களின் நெஞ்சங்களில் இடம் பெற்றிருக்கும் 'தமிழரசு' ஏட்டுக்கு இன்று நான்காம் வயது பிறக்கிறது. சிறப்பாக வெளிவரும் 'தமிழரசு' விரைவில் மிகச் சிறப்பாக வெளி வரும் என்ற நற்செய்தியை வழங்குகிறோம்.

'தமிழரசு' இதழுக்கென்று தனியே உருவாகியுள்ள அச்சகம் செயல்படத் தொடங்கியுள்ளதால் இன்னும் பொலிவுடன் 'தமிழரசு' வெளி வரும் என்பதைத் தமிழகத்து மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.


# தமிழரசு

மலர் 4.. இதழ் 1.

1-7-'73

# நன்றி எதிர்பாராது நல்லவை செய்வோம்!

கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபாய்க்கான 'மதிப்பீட்டில் ஒரு கட்டடத்தைத் திறந்து வைப்பதற்கு முதலமைச்சர் வர வேண்டுமா என்ற ஐயம் எழுந்த நேரத்தில், நகர்மன்ற உறுப்பினர், நண்பர் பார்த்தசாரதி, இப்படிப்பட்ட மாநகராட்சி ஆற்றுகிற பணிகளை நான் பாராட்டினால், மாநகராட்சியிலே பணியாற்றுகிற உறுப்பினர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையிலே நான் வருவது பொருத்தம் உடையது என்று கூறினார்.

இந்தப் பகுதியிலே இருக்கிற ஆயிரக் கணக்கான மக்களை இந்தச் சாக்கிலே சந்திக்கலாமே என்ற எண்ணத்தில்தான் நான் இதற்கு ஒப்புக்கொண்டேன்.

ஆகவே உங்களை நான் சந்திப்பதும், நீங்கள் என்னைச் சந்திப்பதும் எவ்வளவு மகிழ்ச்சியானது என்பது உங்களுடைய கரகோஷத்திலிருந்து தெரிகிறது. ஆகவே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள இது போன்ற சந்திப்புகள் தேவைப்படுகின்றன.

அதைத்தான் குடிசை மாற்று வாரியத் தலைவர் வெகு அழகாக, எவ்வளவு காரியங்களைச் செய்தாலும் அவைகளை மக்களிடத்தில் எடுத்துச் சொல்கிற அந்தக் காரியத்தை நாம் நிறைவேற்றிடத் தவறிவிட்டால், இடையில் யார் யாரோ வந்து புகுந்து கொள்கிறார்கள், என்று குறிப்பிட்டார். அப்படிப் புகுந்து கொள்கிறவர்கள் என்னென்னவோ பேசுகிறார்கள்.

ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு சோடை சொல்ல முடியும். சகோதரர் அரங்கண்ணல், மாநகராட்சி மன்றத்தின் சாதனைகள் எல்லாம் ஒவ்வொன்றாகக் கோடிட்டுக் காட்டினார். ஒவ்வொன்றும் நல்லவர்களால் பாராட்டப்படுகின்ற சாதனை தான்.

நல்லவர்கள் தமிழ்நாட்டில் மாத்திரமல்ல, வெளி மாநிலங்களிலும், வெளி நாட்டிலும் இருக்கிறார்கள். அதற்கு அடையாளமாகத்தான் வெளி நாட்டிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் வருகிறவர்கள், ''நாங்கள் பத்தாண்டுக் காலத்திற்கு முன்பு வந்தபோது பார்த்த சென்னைக்கும் இப்போதுள்ள சென்னைக்கும், நிறைய வேற்றுமை இருக்கிறது. அப்படியே மாநகரின் தோற்றத்தையே மாற்றியிருக்கிறீர்களே'' என்று கேட்கிறார்கள். அந்த அளவிற்குச் சென்னை நகரத்தின் முகத்தில் இருந்த மருக்கள், பருக்கள் எல்லாம் இன்றைய தினம் குறைக்கப்பட்டுச் சென்னை பொலிவோடு விளங்குவதை நாம் பார்க்கிறோம்.

ஆனால் இதைப் பார்த்து மனம் பொறாதவர்கள், இந்த மாநகராட்சி உறுப்பினர்கள் எல்லாம் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறார்களே, இவர்களை நாம் பாராட்டி ஊக்கப்படுத்தி விட்டால், தொடர்ந்து இந்தக் காரியங்களைச் செய்வார்களே, அதனால் மக்கள் இவர்கள் பக்கமே இருப்பார்களே, இப்படியே இருந்து தொண்டுபோனால், நாம் எப்போது உள்ளே நுழைவது என்கிற பயம் அவர்களுக்கு இருக்கிறது.

இதிலே அக்கறை உள்ள சிலர் பாராட்டுவதற்குப் பதிலாக, எப்படியெப்படி இதில் சொத்தை சோடை சொல்லலாம் என்பதில் தங்கள் காலத்தைச் செலவழித்து வருகிறார்கள்.

ஒரு காரியத்தைப் பாராட்டவும் செய்யலாம். அதே நேரத்தில் பத்துப்பேருடைய உள்ளத்தில் விஷ விதையை ஊன்றவும் செய்யலாம். எப்படியென்றால், இந்த நிகழ்ச்சி முடிந்து திரும்பிச் செல்கிற நேரத்தில், 'இலட்சம் ரூபாய்க்கு கட்டடம் கட்டியிருக்கிறார்கள். எல்லோரும் வந்தார்கள், விழா நடந்தது, உண்மைதான், ஆனால் பார்த்தசாரதி எவ்வளவு கமிஷன் அடித்தான் தெரியுமா? 5,000 ரூபாய் அடித்திருப்பான்' என்று சொல்லிக் கொண்டு போனால், அப்போது இந்தப் பள்ளிக் கட்டடம் மறைந்துபோய் விடுகிறது. பார்த்தசாரதி பட்டபாடு மறைந்துவிடுகிறது. படிக்கவரும் உங்கள் வீட்டுச் செல்வங்களின் கல்வி மறைந்துவிடுகிறது. எல்லா நன்மையும் மறைந்து, 'பார்த்தசாரதி–கமிஷன்–அடித்தான்' என்பது மாத்திரம் தான் – அந்தப் பொய் மாத்திரம் தான் – அனைவருடைய மனத்திலும் தங்குகிறது.

இதைத்தான் சிலர் சுலபமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

கூவம் இன்று மணக்கிறது; அந்த நாற்றமே இன்று இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது என்று அரங்கண்ணல் சொன்னார். நான் அந்தப் பகுதியிலே காரில் போகும்போதெல்லாம் கூவத்தின் இரு புறத்தையும் பார்க்கிறேன். பெருமூச்சு விடுகிறேன். பக்தர்கள் பாஷையிலே சொன்னால் எனக்கு நானே ஆத்மதிருப்திப்பட்டுக் கொள்கிறேன். என்னதான் நம்மைத் திட்டினாலும், இந்த அரசை விட்டு நாம் போய்விட்டாலும், என்றைக்காவது ஒரு காலத்தில் இந்தக் கூவத்தைப் பற்றிப் பேசும்போது, என்னுடைய பெயரை இணைத்துப் பேசாமலா போய்விடுவார்கள்? இந்த அரசைப் பற்றி, நமது ஆட்சியைப் பற்றிப் பேசாமலா போய்விடுவார்கள்?

ஆகவே அதை நினைத்து, இன்றைக்கு இருக்கிற சங்கடங்களை மறந்துவிடுவோம் என்று கருதிக் கொள்கிறேன். ஐந்தாண்டுக் காலத்திற்கு முன்னால் இந்தக் கூவத்தைப் பார்க்காதவர்கள், அதன் நாற்றத்தை நுகராதவர்கள் சென்னையில் இருக்க முடியாது. ஆபாசமாக எழுதுவதையோ, பேசுவதையோ ஒப்பிடுவதற்கு அவன் கூவத்தைப்போல் பேசுகிறான், எழுதுகிறான் என்றெல்லாம் ஐந்தாண்டுக் காலத்திற்கு முன்பு சொல்லப்பட்டது. இன்னும் பத்தாண்டுக் காலம் போனால், நல்ல விஷயங்களுக்கு உதாரணமாகப் பயன்படும் அளவிற்கு இன்று மாறியிருக்கிறதென்றால் அதைப் பாராட்டாமலா போய்விடுவார்கள்?

அந்தக் கூவத்தின் கரையோரத்தில் நம்முடைய அண்ணனின் கல்லறை, இன்று தமிழ்நாட்டு மக்களுடைய புனித யாத்திரைத் தலமாக இருக்கிறது. நல்லவர்களும், அதே நேரத்தில் அண்ணாவின் பெயரைச் சொல்லி ஊழல் புரிந்து கொண்டிருப்பவர்களும், அங்கே சென்று இன்று வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் யார் யார் அண்ணாவின் கல்லறையை அங்கே கட்டுவது தவறு என்று சொன்னார்களோ, யார் யார் அண்ணாவின் கல்லறைக்கு ஐந்து இலட்சம் ரூபாய் செலவா, என்று சட்டசபையில் கேட்டார்களோ, அப்படிக் கேட்டபோது, நான் எழுந்து, ''ஐந்து இலட்ச ரூபாய் அல்ல, எங்களுடைய தலைவனின் கல்லறைக்காக 'உலகமே வியக்கும் அளவிற்குக் கட்டிட இந்த அரசாங்கம் 50 இலட்சம் ரூபாய் வேண்டுமானாலும் செலவு செய்யும்'' என்று சொன்னேன்.

அப்படிச் சொன்ன நேரத்தில் ''செலவு செய்வதைப் பார்த்துக் கொள்கிறேன்'' என்று யார் யார் சொன்னார்களோ அவர்கள் இன்றைக்கு அண்ணாவின் கல்லறைக்குப் பூமாலை வைக்கப் போகிறேன் என்று சொல்கிறார்கள்.

உலகத்தில் அனைவரும் காணத் தகுந்த கல்லறை கென்னடியினுடையது என்று சொல்வார்கள். அதையும் போய்ப் பார்த்தேன். அங்கே என்றைக்கும் அணையாத ஒரு விளக்கு எரிந்துகொண்டே இருக்கிறது. அதுதான் அதிசயம். அந்தக் கல்லறையைவிட நூறு மடங்கு சிறந்ததாக இன்று உலகத்திலேயே எந்தத் தலைவனுக்கும் இல்லாத அளவிற்கு ஞாபகச் சின்னம் உருவாக்கியிருக்கிறோம் என்றால், அது அண்ணாவிற்கு நாம் எழுப்பியிருக்கிற ஞாபகச் சின்னம்தான். இன்றைக்கு என்னுடைய ஆசை, கென்னடியின் கல்லறையில் எரிந்து கொண்டிருக்கிற அணையா விளக்கைப்போல், இங்கேயும் ஏற்படுத்தத் திட்டமிட்டு, அதை நிறைவேற்ற இப்போது ஆணையிட்டிருக்கிறேன். அதுவும் விரைவில் நிறைவேறவிருக்கிறது.

இதுபோன்ற இடங்கள் நினைவுச் சின்னங்களாக இருப்பது மாத்திரமல்ல. இன்று ஏராளமாக மக்கள் பஸ்களிலும் லாரிகளிலும் ஏறிச் சென்னைக்கு வருகிறார்கள் என்றால், அதன் மூலம் அவர்கள் சென்னையின் வருமானத்தைத் தங்களை அறியாமல் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். சென்னையின் பொருளாதாரம் அவர்களையும் அறியாமல் ஒரு வகையில் வளர்ந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட இடத்தை நாம் உருவாக்கி இருக்கிறோம். நம்முடைய இதயத் தெய்வம் அங்கே உறங்கிக் கொண்டிருக்கிறது. நமக்குச் சங்கடங்கள் வரும்போதெல்லாம் அங்கே போகிறோம். கவலையைப் பரிமாறிக் கொள்கிறோம்.

நாம் இந்தக் காரியத்தைச் செய்து கொண்டே இருப்போம். அதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் எண்ணிப் பார்க்கிறவர்கள் பார்க்கட்டும் என்ற திடமான மனத்துடன் செய்கிறோம். அண்ணாவின் கல்லறைக்குப் பக்கத்தில்தான் இன்று நாம் நீச்சல் குளத்தை உருவாக்கியிருக்கிறோம்; படகுகளை விடுகிறோம். ஹாலே நகரத்திலிருந்து கொடுக்கப்பட்ட 250 அடி உயரமுள்ள நீரூற்று வைக்கப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் ஒரு மாநகரத்தை அழகுபடுத்த எடுத்துக் கொள்ளப்படுகிற முயற்சிகள்.

நகரத்தை அழகுபடுத்தும் முயற்சிகளை மாத்திரம் எடுத்துக் கொண்டோம். உலகத்தில் எந்தப் பகுதியிலும் சென்னை ஞாபகத்திற்கு வந்தவுடன் 'மவுண்ட் ரோடு' தான் அடுத்த ஞாபகத்திற்கு வரும். இன்று அந்தப் பெயர் மாற்றப்பட்டு, 'அண்ணா சாலை' என ஆனது. தமிழ்நாட்டிலேயே இன்று மிக முக்கியமான சாலையாக அது விளங்குகிறது. அந்தச் சாலை மேலும் அகலப்படுத்தப்பட்டிருக்கிறது. ஜெமினிக்கு அருகில், இந்தியாவில் வேறு எங்கும் காண முடியாத வகையில், பம்பாயில் உள்ளதை விட மிக எழில் வாய்ந்ததாக, 'ப்ளை ஓவர் பிரிட்ஜ்' நாம் கட்டியிருக்கிறோம். அண்ணாசாலையில் குறுக்கே கடக்கச் சுரங்கப் பாதைகளை உருவாக்கியிருக்கிறோம். இவ்வளவையும் செய்திருக்கிறோம். சென்னையின் எதிர்கால வளர்ச்சியைக் கணக்கிட்டுத்தான் இன்று இவைகளை ஆற்றியிருக்கிறோம்.

. சென்னை 76-வது வட்டத்தில் மாநகராட்சித் தொடக்கப் பள்ளியைத் திறந்து வைத்து, முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.

நகரத்தை அழகுபடுத்துவது மாத்திரம் போதுமா? ஏழை எளிய மக்களைக் கவனித்தீர்களா என்று கேட்டால், இந்த அரசு ஆனாலும் சரி, மாநகராட்சி மன்றமானாலும் சரி, ஏழையெளியவர்களுக்காகத்தான் பாடுபடுகிறது. அதற்கு அடையாளம்தான் குடிசை மாற்று வாரியத்தின் கட்டடங்கள். அதிசயத்தோடு, அண்ணாந்து பார்க்கிறார்கள். கடற்கரையில் இருக்கிற குடிசை மாற்றுவாரியக் கட்டடங்களைப் பார்க்கிறேன். அதைப்பார்க்கும் நேரத்தில் ஒரு பக்தன் சொர்க்கத்தில் எவ்வளவு இன்பத்தை அனுபவிப்பானோ, அந்த இன்ப உணர்ச்சியை என்னால் உணர முடிகிறது. ஒரு காலத்தில் நாயுடன் போட்டி போட்டுக் கொண்டு, நடைபாதையில் படுத்துறங்க வேண்டிய அவசியத்தில் இருந்த மனிதன், என்றைக்கு இப்படி உயர்வான் என்கிற கேள்வி எங்கள் உள்ளத்தைக் குடைந்தது. இன்று அவை செயல் வடிவம் எடுக்கிற காட்சியைப் பார்க்கிறோம்.

கூவத்திற்குச் சொன்னதைப் போலக் குடிசை மாற்று வாரியத்திற்கும் சொல்கிறார்கள். அதிலே கொள்ளை அடிக்கிறார்கள், என்று சொல்கிறார்கள். நல்ல நல்ல சாதனைகளை இப்படி ஓரிருவர் எதையாவது சொல்லிக் கேவலமாக ஆக்கிவிட முடியும். பாமர மக்கள் எதையும் நம்புவார்கள் என்பதை வைத்துக்கொண்டே இன்று உங்களிடம் பேசுகிறார்கள்.

நல்ல காரியங்களுக்கு ஊனம் வந்துவிடாமல் காப்பாற்றவேண்டிய பொறுப்பு உங்களுக்கெல்லாம் இருக்கிறது. நல்ல காரியங்களை, நாங்கள் நன்றியை எதிர்பார்த்துச் செய்யவில்லை. நாங்கள் பிறவி எடுத்தது மற்றவர்களுக்குப் பணியாற்றிட! ஏதோ பதவிகளை வகிக்கவேண்டும் என்பதற்காக அல்ல. பதவி, இடையில் வந்தது. நாங்கள் பார்த்து வேண்டாமென்று சொன்னாலும் போயிற்று. நீங்களே பார்த்துத் திரும்ப அழைத்துக் கொண்டாலும் போயிற்று. ஆகவே நன்றி வேண்டும் என்பதற்காக இந்தக் காரியங்களைச் செய்யவில்லை. எங்களுடைய கடமைகளைச் செய்கிறோம். அந்த வகையில் நாங்கள் பெருமை அடைகிறோம்!

## முதல்வர் கலைஞர்



# அறிவுப் பிரச்சாரம் அவசியம்

## வேலூரில் அம்பேத்கார் சிலை திறப்புவிழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரையில் சில பகுதிகள்

இங்கே எங்களைப் பொறுத்தவரை கடவுளைப் பற்றிய கொள்கைகளை நாம் பொது மக்களிடத்தில் எடுத்து வைக்கிற நேரத்தில் குறிப்பாகச் சில முக்கியமான சமயங்களில் நான் ஒன்றைக் குறிப்பிட்டு வந்திருக்கிறேன். கடவுள் நம்மை ஏற்றுக்கொள்கிறாரா? கடவுளை நாம் ஏற்றுக்கொள்கிறோமா — என்கின்ற கேள்விக்கு நாம் காண்கின்ற பதில்—கடவுள் என்று ஒருவர் இருப்பாரேயானால் அவர் நம்மை ஏற்றுக்கொள்கிற அளவுக்கு நாம் நடந்து கொள்கிறோமா? என்பது தான் முக்கியம் என்று நான் சில சமயங்களிலே குறிப்பிட்டிருக்கிறேன்.

கல்லிலே கடவுள் இல்லை. செம்பிலோ, மற்ற உலோகத்திலோ கடவுளில்லை—என்று சொல்லப்பட்ட ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள்.

இதைத்தான் நம்முடைய சித்தர் — சிவவாக்கியர் — ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே ஒரு பாட்டாகவே தமிழ்நாட்டில் பாடி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்.

''நட்ட கல்லைத்
தெய்வம் என்று
நாலு புஷ்பம் சாத்தியே
சுற்றி வந்து
மொணமொணவென்று
சொல்லும் மந்திரம்
ஏதடா—
நட்ட கல்லும் பேசுமோ
நாதன் உள்ளிருக்கையில்''

என்று சிவ வாக்கியர் தமிழ்க் கவிதையாகவே எழுதி வைத்திருக்கிறார்.

ஆனால் நம் நாட்டிலுள்ள வைதீகர்கள் சொல்லுவார்கள்; சித்தர்கள் அப்படிச் சொல்லலாம்; அவர்களெல்லாம் மிகப் பெரியவர்கள். நாம் அப்படிச் சொல்லலாமா? அவர்கள், கடவுளை உருவங்களில், சிலைகளில், பொம்மைகளில்,—இன்ன இடத்திலே இருக்கிறார் என்று சுட்டிக்காட்டி, தாங்கள் வாழ, மற்ற மக்களை ஏமாற்றிக்கொண்டிருந்தார்கள்.

இந்தத் தொடர்கதை இன்னும் முடிவடையவில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ''ஒன்றே குலம்! ஒருவனே தேவன்'' என்று எடுத்துரைத்தார்கள். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ''உண்டென்பார் சிலர்! இல்லையென்பார் சிலர்—எனக்கில்லை கடவுள் கவலை'' என்று சொன்னார்.

இன்றைக்கு நம்முடைய நண்பர் மைசூர் அமைச்சர் பசவலிங்கப்பா அவர்களுடைய பேச்சிலே நாம் கண்டோம்.

''இருக்கிறாரோ இல்லையோ—ஆனால் அந்தக் கடவுளைப் பற்றிச் சிந்திப்பதற்கு எனக்கு நேரமில்லை'' என்று வெகு அழகாக அவர் குறிப்பிட்டார்.

பசவலிங்கப்பா சொன்னார்—எங்கே பிறக்கவேண்டும் என்கிற உரிமை, பிறக்கின்ற குழந்தைகளுக்குத் தரப்பட்டால், நான் ஒரு மகாராஜாவின் வீட்டைத் தேர்ந்தெடுத்திருப்பேன். ஒரு மகாராணி எனக்கு மாதாவாக வரவேண்டும் என்று தேர்ந்தெடுத்திருப்பேன்—என்றார்.

நானுங்கூடக் கற்பனை செய்து பார்த்தேன். அப்படி ஒரு உரிமை, பிறப்பதற்கு முன்பு நமக்கெல்லாம் அளிக்கப்பட்டு; எங்கே பிறக்க வேண்டுமோ அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள் என்று சொன்னால் பசவலிங்கப்பா மட்டுமல்ல: நாமெல்லாருமே ஆளுக்கு ஒரு மகாராஜாவின் வீட்டைத்தான் தேர்ந்தெடுத்திருப்போம்!

மிகச் சுலபமாக நாட்டிலே சமதர்மம் வந்திருக்கும்.

''எல்லாருமே மகாராஜா வீட்டிலே பிறந்தால் அவர் ஆண்டி ஆகி அரசமரத்தடிக்கு எப்போதோ வந்திருப்பார். சுலபமாகச் சமதர்மம் வந்திருக்கும்.

ஒவ்வொரு கால கட்டத்திலும் நம் நாட்டு மக்களுக்கு ஒரு கவர்ச்சி இருக்கிறது.

ஒரு காலத்தில் கடவுள் கவர்ச்சி; இன்னொரு காலத்தில் புராணக் கதைகளில் கவர்ச்சி; இப்படிப்பட்ட கவர்ச்சிகளால் நம்முடைய நாட்டு மக்கள் தங்கள் கருத்தழிந்து திறனிழந்து—நாம் இப்படி வாழத்தான் பிறந்தோம். இதுதான் நமது பழைய ஜென்ம பலன்'' என்று பழைய ஜென்மத்தை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் இடங்கொடாத ஒரு காலம் உருவாகிட வேண்டும். அது அறிவுப் பிரச்சாரத்தின் மூலம்தான் நடைபெற்றாக வேண்டும்.

அந்த அறிவுப் பிரச்சாரம்—அண்ணா அடிக்கடி கூறியது போல யாரையும் புண்படுத்தாத பிரச்சாரமாக ஒவ்வொரு உள்ளத்தையும் பண்படுத்துகின்ற பிரச்சாரமாக நடைபெறுவதற்கு நாம் வழி வகுத்தாக வேண்டும்.

அந்த உறுதியை இன்று அனைவரும் எடுத்துக் கொள்ள வேண்டும்!

# பொதுப் பணித்துறையின்

## போற்றத்தக்க சாதனைகள்

சுந்தர்...

பொதுப் பணித் துறைக்காக 64,32,79,500 ரூபாய்க்கான மானியக் கோரிக்கைகளை இந்த மன்றத்தில் அனுமதியைக் கோரி மன்றத்தின் முன்னால் வைத்திருக்கிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் பேச ஆரம்பிக்கும் போதே கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டமும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்ற குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். அது மாத்திரமல்லாமல் கோவை மாவட்டம், இராமநாதபுர மாவட்டம், தஞ்சை மாவட்டம் ஆகிய மாவட்டங்களுக்குச் சிறப்பான இடத்தைத் தந்திருக்கிறார்களே தவிர, கன்னியா குமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்திற்கு உரிய இடம் தரப்படவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது அப்படி இல்லையென்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும்.

நம்முடைய நண்பர் ஜேம்ஸ் அவர்கள் பேசும் போது எஸ். எம். ஐ. பி. ஸ்கீமில் இந்த இரண்டு மாவட்டங்களும் சரியானபடி கவனிக்கப் படவில்லை என்று சொன்னார்கள். எஸ். எம் ஐ. பி. ஸ்கீமுக்காகப் பணம் ஒதுக்கி இருப்பது பின் வருமாறு:

கோவை மாவட்டத்திற்கு 44,64,500 ரூபாய்.

தஞ்சை மாவட்டத்திற்கு 68,35,000 ரூபாய்.

இராமநாதபுர மாவட்டத்திற்கு—49,12,000 ரூபாய்.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு—64,07,000 ரூபாய்.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு—6,54,000 ரூபாய்.

என்று ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது திருநெல்வேலி மாவட்டத்திற்கு இராமநாதபுர மாவட்டத்தை விட, கோவை மாவட்டத்தை விட, அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது, ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். கன்னியாகுமரி மாவட்டம் மிகச் சிறிய மாவட்டம். கணக்குப் பார்க்கும் போது ஒரு டிவிசன் அளவுக்குத்தான் இருக்கிறதே தவிர, பெரிய மாவட்டமாக அதனை ஏற்றுக் கொள்ள இயலாது.

திருநெல்வேலி மாவட்டத்தில் எஸ். எம். ஐ. பி. அண்டு டி. சி. ஆர். ஸ்கீமுக்கு, மேஜர் அண்டு மீடியம் ஸ்கீம்களுக்கு, 20 திட்டங்களுக்கு 615 இலட்சம் ரூபாய் ; கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மூன்று திட்டங்களுக்கு 684 இலட்சம் ரூபாய் செலவழிக்கப் பட்டிருக்கிறது. அரசாங்கத்துடைய ஆய்வில் இருக்கும் திட்டங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் 70 திட்டங்கள் 1,236 இலட்சம் ரூபாய் ; கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஐந்து திட்டங்கள் 14 இலட்சம் ரூபாய், ஆக இந்த அளவுக்கு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



மாண்புமிகு
பொதுப்பணித்துறை அமைச்சர்
எஸ். ஜே. சாதிக் பாட்சா

டாக்டர் ஹண்டே அவர்கள் பேசும் போது ஜெமினி ஃபிளை ஓவர் பற்றிச் சொன்னார்கள். பொன்னப்ப நாடார் அவர்களும் சொன்னார்கள் . வெளிநாட்டு நிபுணர்கள் ஜெமினி ஃபிளை ஓவர் சரியாக அமைக்கப் படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், ஜெமினி ஃபிளை ஓவர் பற்றி இதுவரையில் வெளிநாட்டு நிபுணர்கள் எவரும் குறை கூறியதாகக் கருத்துக் கொண்டு வரப்படவில்லை. அப்படி யாராவது கொண்டு வந்தால், அதைப் பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேம் பாலம் 48 அடி அகலப்படுத்தப்பட்டிருக்கிறது. கோபதி நாராயணன் செட்டித் தெருவிற்குத் தனி வழி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இவையெல்லாம் அந்த டிசைனில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாற்றங்கள். இவையெல்லாம் ஜெமினி மேம்பாலம் பற்றியது.

திருநெல்வேலி மேம்பாலத்தைப் பற்றி, பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். திருநெல்வேலி மேம்பாலத்தைப் பொறுத்த வரையில் இரயில்வே துறையிடமிருந்து அனுமதி பெறக் காலதாமதம் ஆயிற்று. அது வெகு விரைவில் வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டது. இரயில்வேயிலிருந்து அனுமதி வந்து விட்டது. இந்த வேலையும்

இந்த ஆண்டுக்குள் முடிந்து விடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதைக் கட்டுவதில் ஆரம்பக் கட்டத்தில் பிரச்சினை இருந்தது. லேண்ட் அக்குவிசேஷனில் தகராறு ஏற்பட்டது. சிலர் ஹைகோர்ட் வரை சென்றார்கள். அதனால் கால தாமதம் ஏற்பட்டது, இப்போது எல்லாம் முடிந்து விட்டது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக இந்த வேலை முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் ஹண்டே அவர்கள் எப்போதுமே 2—3 பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவார். கூவம், வீராணம் பற்றிப் பேசுவார், மற்ற பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவார் என்று எதிர்பார்த்தேன். அவர்கள் அதிகமாகக் கட்மோஷன்கள் கொடுத்தார்கள்.

Discuss employment of engineers', to discuss revision of scales of pay of Junior Engineers

இப்படி நிறையக் கொடுத்து அவர்கள், அவைகளைப் பற்றிப் பேசுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அவர் எப்போதுமே பேசிப் பேசிப் புளித்துப் போன வீராணம் திட்டம், கூவம் திட்டத்தைப் பற்றித்தான் பேசினார்கள். இப்போது புதிதாக, செம்பரம்பாக்கம் விட்டு விட்டீர்களா என்று கேட்டார்கள். அந்தத் திட்டத்திற்கு அனுமதி கொடுப்பதற்கு முன்னாலேயே புகார் சொன்னார்கள். பத்திரிகைகளில் பார்த்தேன். திட்டம் அரசாங்கத்தின் அனுமதிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. இப்போதே என்ன புகார் என்றால் அந்த வேலைகள் யாருக்கோ கொடுக்கப்பட்டுவிட்டன என்று புகார் சொன்னார்கள். அந்தத் திட்டம் எந்த அளவில் இருக்கிறது என்று புள்ளி விவரம் கூறுங்கள் என்று டாக்டர் ஹண்டே அவர்கள் கேட்டார்கள். டாக்டர் ஹண்டே அவர்கள் கேட்டதற்குப் பின்னாலே, அவர் சட்டமன்றத்தில் இல்லாவிட்டாலும், அவற்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ரூ. 64 இலட்சம், 4 கட்டமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று முடிவு செய்துள்ளோம்.

வடிகால் திட்டங்களைப் பொறுத்த வரையில் 6·8 கோடி ரூபாய்க்குத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, வடிகால் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**குறிப்பாக, காவேரி மாடர்னேசேஷன் பற்றி விவாதத்தில் சொல்லப்பட்டது.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததுபோல, உலக வங்கியின் உதவி நமக்குக் கிடைக்க இருந்தாலும், மத்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைக்காததால், திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. அதற்கான காரணங்களை அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். ஆகவே, அதை மீண்டும் சொல்ல வேண்டியதில்லை என்று கருதுகிறேன். மத்திய அரசாங்கத்தின் அனுமதியோடு உலக வங்கியின் உதவியைப் பெற்றுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாவிட்டாலும், காலத்தைக் கடத்தக்கூடாது என்ற நோக்கத்தோடு, நம்முடைய அரசாங்கம் ரூ. 1,298·3 இலட்சம் ரூபாய்க்கு அதாவது 12 கோடி ரூபாய்க்கு மேல் திட்டம் போட்டு, 4 ஆண்டுகளுக்குள்ளாக இந்தத் திட்டம் நிறைவேற வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த 1973–74-க்கு 301 இலட்ச ரூபாய் இந்தத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### கருக்கலைப்பு

குடும்ப நலத் திட்டத்தின் கீழ், கருக்கலைப்பு, சட்டபூர்வமாக்கப்பட்டு, அது அரசினர் மருத்துவமனைகளில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு கருக்கலைப்புச் செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை வருமாறு :

| | |
|---|---|
| மராட்டியம் | —4,500 |
| மேற்கு வங்கம் | —2,300 |
| தமிழ்நாடு | —2,100 |
| டில்லி | —1,500 |

அடுத்து, இங்கே காவிரி டிஸ்பியூட் பிரச்சினை பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லையே என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்கள் வருத்தப்பட்டார்கள். கொடுக்கப்பட்டிருக்கின்ற புத்தகத்தில் காவிரி பற்றி அரசாங்கத்தின் நிலைமை தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், காவிரிப்பிரச்சினையில் ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. டில்லியில் நடந்த பேச்சு வார்த்தையில் மாண்புமிகு திரு. கே. எல். ராவ், திரு. தேவராஜ் அர்ஸ் திரு. அச்சுதமேனன், நமது முதலமைச்சர் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது என்னவென்றால் பிரச்சினையைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தார்கள். இப்படிப் பேசித் தீர்த்துக்கொள்ள அடிப்படை வேண்டுமென்பதற்காக ( Fact finding committee ) நியமிக்கப்பட்டு, அதன் ரிப்போர்ட்டைப் பெறலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவின் அடிப்படையில் காவேரி ( Fact finding committee) தமிழ் நாட்டிற்கு வந்தது. அதேபோல் கேரளத்திற்கும், மைசூர் மாநிலத்திற்கும் சென்றது. பாண்டிச்சேரி மாநிலத்திற்கும் சென்றது. அங்கெல்லாம் சென்று அந்தக் கமிட்டி ஓர் அறிக்கையைத் தந்திருக்கிறது. அந்தக் கமிட்டியின் அறிக்கை என்னிடம் இருக்கிறது. அதை வெளியிடுவதற்கில்லை என்ற காரணத்தால் இங்கே கொடுக்கவில்லை. கமிட்டியின் ரிப்போர்ட் வந்தபிறகு மத்திய அரசு நமது மாண்புமிகு முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். '' ரிப்போர்ட் வந்திருக்கிறது. மீண்டும் பேசித் தீர்க்கத் தேதி நிர்ணயிக்க வேண்டும் '' என்று கேட்டிருக்கிறார்கள். முதலமைச்சரவர்கள் தேதி நிர்ணயிக்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 'கிரவுண்ட் வாட்டர்' பற்றிப் பல உறுப்பினர்கள் பேசினார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா மாவட்டங்களிலும் இருக்கிற நில நீரை ஆராய்ச்சி செய்து விரிவான அறிக்கை ஒன்றைக் கொடுப்பதற்காக, கிரவுண்ட் வாட்டர் டிவிசன் ஒன்றை அமைத்திருக்கிறோம். தஞ்சை மாவட்டம், பாலாறு பேசின், மணலி ரிஃபைனரி ஆகிய இடங்களில் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் இதுபோல் ஆராய்ச்சி செய்து ஒரு விரிவான திட்டத்தைத் தயாரிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அதற்காக மத்திய அரசிடமிருந்து 5 இலட்சம் ரூபாய் எதிர்பார்த்திருக்கிறோம். அதுமட்டுமல்ல ; 11 கோடி ரூபாயில் ஒரு திட்டத்தைத் தீட்டி மத்திய அரசுக்குக்கொடுத்திருக்கிறோம். அதன் அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் நிலத்தடி நீரைப்பற்றி ஆராய்ச்சி செய்து புள்ளி விவரங்களைச் சேகரித்து **அரசுக்கு அனுப்புவார்கள் ; அதன் பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.**

பொன்னேரி உறுப்பினர் திரு. நாகலிங்கம் அவர்கள் கூட, கிரவுண்ட் வாட்டர் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய பகுதியில் 'கிரவுண்ட் வாட்டர் இயக்குநரகம்' கிணறுகள் வெட்ட அனுமதிக்கவில்லை என்று சொன்னார்கள். அதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. அங்கே உள்ள தொழில் நிறுவனங்களுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் தண்ணீர் வழங்குவது பற்றி அரசாங்கம் ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறது. அந்த ஒப்பந்தத்திற்கு அரசாங்கம் கட்டுப்பட்டிருக்கிறது. எனவே, அவர்களுக்குப் பாதகம் ஏற்படாதபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் குறைகளைப் போக்குகின்ற வகையில் நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகள் மூலம் பரிசீலனை செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1972—73-ல் பொதுப்பணித் துறை நெடுஞ்சாலைப் பிரிவு ரோடுகள் போடுவதற்காக 2·43 கோடி ரூபாயும், பாலங்கள் அமைப்பதற்கு 75 இலட்சம் ரூபாயும் செலவிடப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அரசாங்க ஊழியர்கள் குடியிருப்பதற்கு வீடு கட்டிக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். வீடு கட்டி வருகிறோம். இந்த ஆண்டு நம்முடைய அரசு 10 இலட்சம் ரூபாயை அதற்காக ஒதுக்கி இருக்கிறது. அரசாங்க ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான ஆரம்பத் திட்டமாக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய திட்டங்கள் பற்றிக் கேட்டார்கள். இன்று பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்; பல திட்டங்கள் ஆய்வில் இருக்கின்றன. பாலாறு பொரந்தலாறு திட்டம் 281·80 இலட்சம் ரூபாய்; பரப்பலாறு திட்டம் 39.12 இலட்சம் ரூபாய்; சின்னாறு திட்டம் 123·90 இலட்சம் ரூபாய்; தண்டரையாறு திட்டம் 87·68 இலட்சம் ரூபாய்; நந்தன் திட்டம் 72·11 இலட்சம் ரூபாய். கருப்பா நதித் திட்டம் 154 இலட்சம் ரூபாய்; பொன்னணியாறு திட்டம் 95 இலட்சம் ரூபாய். பிளவக்கல் திட்டம் 186·22 இலட்சம் ரூபாய்; மருதா நதித் திட்டம் 108·30 இலட்சம் ரூபாய்,—ஆகிய திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

பவானியில் வறட்டுப்பாளையம் ரிசர்வாயர் திட்டம் 60 இலட்சம் ரூபாய். சாத்தனூர் அணைக் கட்டு ரைட் சைடு சானல் 202 இலட்சம் ரூபாய். குண்டரைப் பள்ளம் திட்டம் 46 இலட்சம் ரூபாய். செங்கோட்டைத் தாலூகா குண்டர் ரிசர்வாயர் திட்டம் 37 இலட்சம் ரூபாய். செங்கோட்டைத் தாலுகா ஆதவினார்கோவில் திட்டம் 149 இலட்சம் ரூபாய்; வட்ட மலைக் கரைத் திட்டம் 70 இலட்சம் ரூபாய். வரதமா நதித் திட்டம் 103·50 இலட்சம் ரூபாய். குதிரையாறு திட்டம் 57 இலட்சம் ரூபாய், அரக்கன் கோட்டை சானல் 19·20 இலட்சம் ரூபாய், நல்லதங்காள் ஓடைத் திட்டம் 56 இலட்சம் ரூபாய், காஞ்சிபுரம் தாலுகாவில் பாலாறு அணைக்கட்டுத் திட்டம் 190 இலட்சம் ரூபாய், தும்பலஹல்லி திட்டம் 66·50 இலட்சம் ரூபாய், பாம்பாறு திட்டம் 91 இலட்சம் ரூபாய், கொல்லி மலைத் திட்டம் 319 இலட்சம் ரூபாய், குடகனாறு திட்டம் 212 இலட்சம் ரூபாய் - ஆகிய திட்டங்கள் ஆய்வில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோன்று இன்றையத் தினம், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திற்கு இவ்வளவு பணம் செலவழித்திருக்கிறோம். ஆனால் அதைப்பற்றி ஒன்றும் பேசவில்லை என்று குறிப்பிட்டார்கள். பேச்சு வார்த்தைக்குப் பிறகு இன்று அப்பர் நீருற்றுத் திட்டத்திற்கு அனுமதி கொடுத்து விட்டார்கள் கேரளத்தில். ஆனால் லோயர் நீருற்றுத் திட்டத்திற்கு இன்னும் அனுமதி வழங்கவில்லை. கேரள அரசு சில விவரங்களைச் சொல்லிக் கொண்டு காலதாமதம் செய்து கொண்டு வருகின்றார்கள். இப்போது அரசு மட்டத்தில் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. எனவே, இந்தத் திட்டங்களையெல்லாம் உரிய நேரத்தில் முடிக்கக் கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### கம்ப்யூட்டர் பிறந்தது எப்போது ?

எல்லாத் துறைகளிலும் மனிதர்களின் அலுவல்களை எளிதாக்குவதற்கு உதவி செய்யும் கம்ப்யூட்டர் என்னும் கணக்கிடு பொறி எப்போது பிறந்தது தெரியுமா?

1946-ஆம் ஆண்டில்!

அதனை உருவாக்கியவர் புகழ்பெற்ற கணித மேதை ஜான்வான் நியூமன் ஆவார்.

அமெரிக்காவிலுள்ள பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில்தான் கணக்கிடு பொறி முதன் முதலில் உருவாக்கப் பெற்றது.

தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்தினைப் பொறுத்தமட்டில் நமது அரசின் காரணமாக எந்தவிதமான கால தாமதமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அடுத்து 'பை-பாஸ்' சாலைகள் பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தேசிய நெடுஞ்சாலை என்ற முறையில் சென்னை-நெல்லூர், சென்னை-பெங்களூர், சென்னை-திருச்சி ஆகிய சாலைகளில் 'பை-பாஸ்' பாதைகள் அமைப்பதற்கு ரூ. 75 இலட்சம் செலவில் இப்போது வேலைகள் நடந்துகொண்டு இருக்கின்றன. அதுபோல, கோயம்புத்தூர் 'பை-பாஸ்' சாலை போடுவதற்காக 'லாண்ட் அக்விஷஸின்' நடைபெற வேண்டியிருக்கிறது.

மேலும் இங்கே 'செக்ரடிரியேட்'டில் ரூ. 1·25 கோடி செலவில் ஒரு கட்டடம் கட்டுவதற்கான செயல் குறிப்பு இருக்கிறது. அதுபோல டெல்லியிலுள்ள 'தமிழகத்'தை மேலும் சற்று விரிவுபடுத்த வேண்டும் என்று திட்டம் போட்டு, நமது அரசினால் அங்கீகாரம் செய்யப்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

அடுத்த மிக முக்கியத் திட்டமான பாம்பன் பிரிட்ஜ் திட்டம் சுமார் 5 கோடி ரூபாய் செலவில் அங்கீகரிக்கப்பட்டு டெண்டர்கள் கோரப்பட்டு இருக்கின்றன. டெண்டர்ஸ் ஃபைனலைஸ் செய்யப்பட்ட பிறகு வேலைகள் நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரத்தைப்பொறுத்தவரையில் ஜெமினி மேம்பாலம், அடையாறு பாலம், மவுண்ட் ரோடு வெல்லிங்டன் பாலம் ஆகியவற்றைச் சீரமைக்கக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் டி.வி. ஸ்டேஷன் மத்திய அரசால் குறிக்கப்பட்ட இடத்தில் ரூ. 40 இலட்சம் அளவுக்குக் கட்டடங்கள் கட்ட மத்திய அரசு அனுமதி கொடுத்து,

பொதுப் பணித்துறையின் மூலம்-சிப் எஞ்சினீயர்-பில்டிங்ஸ் மூலமாக நிறைவேறிக் கொண்டிருக்கிறது. 150 மீட்டர் உயரத்திற்கு ரிவால்விங் டவர் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு அனுமதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பக்கிங்ஹாம் கேனலைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டேன். அதில் மூன்று பாலங்களைச் சீர்படுத்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. சேமியர்ஸ் ரோடு பாலம், எட்வர்டு எலியட்ஸ் ரோடு பாலங்களை ரூ. 30 இலட்சம் திட்டத்திலே சீர்படுத்த அரசு அனுமதி அளித்திருக்கிறது.

சென்டிரல் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் பார்க் ஸ்டேஷனுக்கும்—மூர் மார்க்கெட்டுக்கும் இடையே சப்-வே கட்ட அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. மேலும், சென்டிரல் ஸ்டேஷனுக்கு முன்புறம் இருக்கிற பாலத்தையும் விரிவு படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ரெயில்வே ஓவர் பிரிட்ஜ்களைப் பொறுத்த வரையில், தென்காசி—மதுரை ரோட்டில் ரூ. 36 இலட்சம் திட்டமும், திருச்சி-நாமக்கல் ரோட்டில் ரூ. 15 இலட்சம் திட்டமும் தூத்துக்குடி - திருநெல்வேலி ரோட்டில் ரூ. 15 இலட்சத்தில் ஒரு திட்டமும், பெரம்பலூர், மானாமதுரை ரோட்டில் ரூ. 15 இலட்சத்தில் ஒரு திட்டமும், கடலூர்-திருச்சி ரோட்டில் ரூ. 25 இலட்சத்தில் ஒரு திட்டமும் அரசினிடம் இருக்கிறது. மதுரை முனிசிபாலிடிக்கு அருகாமையில் ரூ. 40 இலட்சத்தில் ஓவர் பிரிட்ஜ் கட்டுவதற்கு புரபோசல் பெண்டிங்காக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கேங்க் மஸ்தூர் பற்றிச் சொன்னார்கள். நெடுஞ்சாலையில் பணி ஆற்றுகிற கேங் மஸ்தூர்களைப்புரொவின்ஷியலைஸ் பண்ண வேண்டும் என்பது ரொம்ப பழைய காலப் பிரச்சினை. சரித்திரத்தைப் படித்துப் பார்க்கும் போது 1947-ஆம் ஆண்டு நெடுஞ்சாலைகள்டிஸ்டிரிக்ட்போர்டினிடமிருந்து அரசுக்கு மாற்றப்பட்ட காலத்திலிருந்து இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆக இது 30 ஆண்டுக்காலப் பிரச்சினை. சுமார் 11,500 கேங் மஸ்தூர்கள் வேலை செய்கிறார்கள். 5 ஆண்டு, 10 ஆண்டு, 15 ஆண்டு, 25 ஆண்டு என்று சர்வீஸ் செய்திருந்தும்கூட இவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்று நீண்ட நாள் கோரிக்கையாக இது இருந்து வந்தது. மேலவையில் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பொதுப்பணித் துறையின் மானியத்தின்போது இது அறிவிக்கப்படும் என்று திரு. பராங்குசம் ஒரு கேள்வி கேட்டபோது, அந்த முடிவை இப்போது நான் அறிவிக்கவிருக்கிறேன். இப்போது கேங் கூலிகளுக்குத் தரப்படுகிற சம்பளம் - எல்லாம் சேர்த்து ரூ. 127. அவர்கள் சங்கத்தின் சார்பாக என்ன கோரிக்கை வைத்தார்கள் என்றால், ''நாங்கள் அதிகமாகச் சம்பளம் கூடக் கேட்கவில்லை. 20 ஆண்டு, 15 ஆண்டு சர்வீஸ் செய்தவர்களை ரெகுலரைஸ் செய்யுங்கள்'' என்று. அவர்களது கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து, பத்து ஆண்டுகளுக்கும் அதற்கும் மேலேயும் சர்வீசிலுள்ளவர்கள் - அவர்கள் கேட்டது 15 ஆண்டுக்கு மேல்- ஆனால், நாம் 10 வருடம் அதற்கு மேல் சர்வீசில் உள்ளவர்கள் எல்லாம் புரொவின்சியலைஸ் செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்தவர்களின் எண்ணிக்கை 6,500 அவர்களின் சம்பளம் ரூ. 127 என்று இருந்தும், ரெகுலரைஸ் செய்யும் போது ஒரு ஸ்பெசல் பே கொடுப்பது என்று முடிவு செய்து, ரூ. 100 ப்ளஸ் ரூ. 30 என்று கொடுப்பது என்றும் அதற்கும் மேலாக, அவர்கள் இருக்கின்ற இடத்திற்கேற்ப சிடி காம்பன்சேடரி அலவன்ஸ் ஆகியவை கொடுப்பது என்றும் இதனால் 6,500-க்கும் மேற்பட்ட கேங் மஸ்தூர்கள் பயனடைவார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜே. ஈ. க்களைப் பற்றிச் சொன்னார்கள். நிறையப் புள்ளி விவரங்கள் இருக்கின்றன. இவர்களுடைய சம்பள விகிதம்-பே கமிஷன் சிபாரிசு செய்தபடி ரூ. 400—15—20—650. இவர்கள் அனுமலி கமிஷனுக்குப் போன போது, அசிஸ்டன்ட் புரொபசர்களுக்குக் கொடுக்கக் கூடிய ரூ. 425—20—650 ஏன் கொடுக்கக்கூடாது என்று கேட்டு அனுமலி ஒன்றுமில்லை என்று ஒன் மேன் கமிஷன் கூறியிருந்தும் கூட, இவர்களுடைய சம்பள விகிதங்கள் தற்போது மாற்றப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய மாற்றப்பட்ட சம்பள விகிதம் ரூ. 425—20—575—25—650 என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துகளுக்கெல்லாம் நான் இங்கே பதில் சொல்வதற்கு விவரங்கள் வைத்திருக்கிறேன். நேரம் இல்லாத காரணத்தினால் எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல முடியவில்லையே தவிர, அவற்றை எல்லாம் இலாகாவினர் பரிசீலித்துத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசியவர்கள் எல்லாம் இந்த இலாகா இன்னும் துரிதமாகச் செயல்பட வேண்டும் என்றே தெரிவித்தார்கள்.

இன்னும் வேகமாகச் செயல்பட விவரமாகப் பல திட்டங்களை எடுத்துப் பூர்த்தி செய்ய அதிகமான நிதி வேண்டும் என்றேதான் அவர்களும் கோரியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் துறைகளுக்காக ஒதுக்கப்பட்ட மானியக் கோரிக்கைகளின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் வாங்கிக் கொண்டு இவற்றை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

[21—3—1973-ல் தமிழ்நாடு சட்டப் பேரவையில் பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு வழங்கிய பதிலுரையிலிருந்து.]

## கிரிக்கெட் என்றால் என்ன ?

கிரிக்கெட் (Cricket) இன்று புகழ்பெற்ற ஆட்டங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இங்கிலாந்து இதன் பிறப்பிடம். ஆங்கிலேயர் ஆடும் ஆட்டங்களில் இது குறிப்பிடத் தகுந்தது.

கிரிக்கெட் என்ற பெயர் எப்படி வந்தது தெரியுமா? தடி என்ற பொருள்படும் 'Cric' என்னும் நார்டிக் சொல்லிலிருந்து கிரிக்கெட் (Cricket) என்னும் ஆங்கிலச் சொல் பிறந்தது.

# அரிசியின் பெருமை

உலகத்து மக்கள் தொகையில் பாதிப்பேர் (அதாவது 1,800 மில்லியன் பேர்) அரிசி உணவை உண்பவர்கள். அவர்களில் 400 மில்லியன் பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள்.

உலகம் முழுவதும் உற்பத்தி செய்யப்படும் அரிசியில் 90 சதவிகிதம் ஆசியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. உலக உற்பத்தியில் ஐந்தில் ஒரு பாகத்தை இந்தியா உற்பத்தி செய்கிறது. தமிழ்நாடு, உலக உற்பத்தியில் 2.5 சதவிகிதத்தை உற்பத்தி செய்கிறது.

* * *

இந்தியாவைத் தவிர, பிரேசில், ஐக்கிய நாடுகள், மலாகாசி, எகிப்து, இத்தாலி, ஸ்பெயின், அர்ஜன்டைனு, பர்மா, தாய்லாந்து, தைவான் ஆகிய நாடுகளில் அரிசி உற்பத்தியாகிறது.

* * *

தென்மேற்கு ஆசியாவில்தான் முதன்முதலில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இந்தியாவிற்குக் கோதுமை வருவதற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே நெல் வந்துவிட்டது.

* * *

அரிசி உணவை உண்போர் அதிகக் குழந்தைகள் பெறுகிறுர்களா? ஆசியாவின் நதிப் பள்ளத்தாக்கில் இருந்த மிக அதிகமான மக்கள் தொகையை எண்ணிப் பார்த்தால் 'ஆம்' என்றுதான் பதில் சொல்லத்தோன்றும். ஆனல், சத்துணவு விஞ்ஞானிகள் இந்தக் கருத்தை உறுதி செய்வதில்லே. காரணம், ஐரோப்பாவில் கோதுமை உணவு உண்ணுவோர் உள்ள நாடுகளின் மக்கள் தொகை, ஆசியாவில் அரிசி உணவு உண்போர் நாடுகளின் மக்கள் தொகையைவிட அதிகமாக இருக்கிறது. இந்தியாவில்கூட, கோதுமை உணவு உண்ணும் சில மாநிலங்களில் அரிசி உணவை உண்ணும் மாநிலங்களேவிட, அதிக அளவு பிறப்பு விகிதத்தை உருவாக்கி வருகின்றன.

* *

1970–71 கணக்குப்படி, இந்தியாவில் அரிசி உற்பத்தி கிழ்க்கண்ட வகையில் உள்ளது:

| | | | |
|---|---|---|---|
| தமிழ்நாடு | 5,303 | ஆயிரம் | டன் |
| கேரளம் | 1,271 | ,, | ,, |
| ஆந்திரம் | 4,650 | ,, | ,, |
| கருநாடகம் | 1,953 | ,, | ,, |
| மராட்டியம் | 1,663 | ,, | ,, |
| ஒரிசா | 4,383 | ,, | ,, |
| மத்தியப்பிரதேசம் | 3,202 | ,, | ,, |
| பீகார் | 4,539 | ,, | ,, |
| மேற்கு வங்காளம் | 6,105 | ,, | ,, |
| உத்தரப்பிரதேசம் | 3,729 | ,, | ,, |
| அஸ்ஸாம் | 2,016 | ,, | ,, |
| ஜம்மு காஷ்மீர் | 397 | ,, | ,, |
| இமாசலப் பிரதேசம் | 124 | ,, | ,, |
| பஞ்சாப் | 671 | ,, | ,, |
| அரியாறு | 450 | ,, | ,, |
| மணிப்பூர் | 184 | ,, | ,, |
| திரிபுரா | 242 | ,, | ,, |
| இராஜஸ்தான் | 135 | ,, | ,, |
| குசராத் | 598 | ,, | ,, |
| நாகாலாந்து | 74 | ,, | ,, |

தமிழ்நாடு கடந்த ஆண்டில் 55 இலட்சம் டன் அரிசி உற்பத்தி செய்திருக்கிறது.

ஃ ஃ ஃ

அரிசியில் உள்ள புரதம்—ஏனைய தானியங்களில் உள்ள புரதத்தை விட உயர்வானது.

அரிசியில் சுண்ணும்புச் சத்து, பாஸ்பரஸ் சத்து ஆகியவை குறைவு.

நமக்கு நாளொன்றுக்குத் தேவைப்படும் இரும்புச் சத்து 10–லிருந்து 15 மைக்ரோ கிராம்கள் ஆகும். உமி நீக்கப்படாத அரிசி ( Husked Rice ) 19 மைக்ரோ கிராம் தருகிறது. தீட்டப்பட்ட அரிசி 6 மைக்ரோ கிராமுக்கு மேல் தருவதில்லே.

கோதுமையைப் போல 'பி' வைட்டமின் அரிசி தருகிறது.

அரிசியில் இவைமட்டுமல்ல; இன்னும் பல சத்துக்களும் இருக்கின்றன. அவை, க்ளோரின், மெக்னீசியம், சோடியம், பொட்டாஸ், சல்பர், தாமிரம், மாங்கனீசு ஆகியவை. ஆனல், தீட்டுவதன் காரணமாக இந்தச் சத்துக்கள் குறைந்துவிடுகின்றன

—ச. ச.

# காட்டைப் பாதுகாப்போம்

இங்குப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இன்றைக்கு, மழை வளம் குறைந்திருப்பதற்குக் காரணம் மலைப் பகுதிகள் அழிக்கப்பட்டு விடுவதுதான் என்று சொல்லியிருக்கிறார்கள். மலைப்பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மலைப் பகுதிகளில் பல்வேறு நீர் நிலையங்களைக் கட்டி விட்டதன் காரணமாகச் சரணாலயங்களில் மிருகங்கள் இருக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஓரளவு அது உண்மையும் கூட. மேற்குத் தொடர்ச்சி மலையில் குந்தாவில் ஆறு—ஏழு மின்சாரத் திட்டங்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு மின்சாரத் திட்டம், இப்படிப்பல்வேறு திட்டங்களை மலைப் பகுதியில் கட்டியதன் விளைவாகத்தான் இந்த நிலை. ஓரளவுக்கு இந்த மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றியதன் காரணமாகத்தான் தொழில் அபிவிருத்திக்கு முக்கியமான மின்சாரத் தேவையினை நம்மால் பூர்த்தி செய்ய முடிகிறது. மலைப் பகுதியில் இந்த மாதிரித் திட்டங்களை ஏற்படுத்த, புதிய ஊர்கள் ஏற்பட்டு மனித சஞ்சாரம் அதிகமாக இருக்கும் காரணத்தால் நமது மலைப்பகுதியில் உள்ள மிருகங்கள் எல்லாம் அண்டை மாநிலங்களுக்குச் சென்று விடுகின்றன என்பதும் ஓரளவு உண்மைதான். அதை மனத்தில் கொண்டுதான் இன்றைக்கு மத்திய சர்க்கார் ஆலோசனைப்படி மூன்று மாநிலங்களை இணைத்து வன விலங்குச் சரணாலயம் ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு திட்டம் இருக்கிறது. திட்டம் 11 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டு இருக்கிறது.

அது கேரளப் பகுதியிலுள்ள வயநாடு சரணாலயம், மைசூரிலுள்ள பந்திப்பூர் சரணாலயம், தமிழ்நாட்டிலுள்ள முதுமலை சரணாலயம் ஆகிய மூன்றையும் இணைத்துத் தேசியச் சரணாலயமாக அமைக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் ஆலோசனை செய்து அதன்மூலம் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நிதி பெற வேண்டுமென்ற தமிழ்நாடு அரசின் ஆலோசனையை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டு இப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குத் தமிழ் நாட்டிலே இருக்கும் காட்டிலாகா மூலமாக அதிலே கிடைக்கின்ற உப பொருட்களை மூலப் பொருள்களைக் கொண்டு பல்வேறு தொழில்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல் காகிதத் தொழிற்சாலை, தோல் பதனிடும் தொழிற்சாலை, தீக்குச்சித் தொழிற்சாலை ஆகியவை எல்லாம் நடைபெற்று வருகின்றன. அதற்காக, வன இலாகா மூலமாக அவர்களுக்கு வேண்டிய மரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்லாமல் விறகுத் தேவையைப் பூர்த்தி செய்யத் தேவையான அளவுக்கு மலைப் பகுதியில் எந்தெந்த இடங்களில், எவ்வளவு ஆண்டுக்கு ஒருமுறை மரங்களைக் களைய வேண்டுமென்று முடிவு செய்து கூப்புகளுக்கு விடுவதன் மூலம் விறகை எரிபொருளாக மக்கள் ஓரளவு பயன்படுத்தி வருகிறார்கள். ஓரளவு மலை வனப் பகுதியைக் குறைக்காமல் இருக்க நாட்டுப் பகுதியில், தரை மட்டத்தில் ஆற்றுப் பகுதியில், குறிப்பாகத் தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம் தென்ஆர்க்காடு மாவட்டத்தில் சதுப்பு நிலங்களில் எல்லாம் சவுக்குமரம் பயிரிடுவதன் மூலமாக விறகுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடிகிறது.

சவுக்கு மரத்தைக் கூடப் புதிய முறையில் மூங்கிலுக்குப் பதிலாகக்காகிதத் தொழிலுக்குப் பயன்படுத்தலாம் என்று சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்களுடைய தொழிற்சாலைக்கு மிகவும் குறைந்த விலையில் கொடுப்பது நியாயமா? அப்படிக் கொடுக்கத் தேவையில்லை, தொகையை உயர்த்த வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள், பொதுவாக, இதை மனத்தில் கொண்டுதான் இந்த ஆண்டு நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் யோசனைப்படி சின்கோனா இலாகாவையும், காட்டு இலாகாவையும் பற்றி மறு பரிசீலனை செய்து, நாமே தொழில்மயமாக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதற்காகச் சின்கோனா கார்ப்பரேஷன் ஏற்படுத்த வேண்டுமென்று சமீபத்தில் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

அடுத்தாற் போல், இன்று பாரஸ்ட் கார்ப்பரேஷன் என்ற ஒரு கார்ப்பேரஷனை ஏற்பாடு செய்வதற்கு ஆராய்ச்சி செய்ய வேண்டும் அல்லது யோசித்து ஒரு தாக்கீது தரவேண்டும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள். அது வெற்றி பெறுமானால் பாரஸ்ட்டுக்கும் சின்கோனா போன்று ஒரு தனிக் கார்ப்பரேஷன் அமைக்கப்படுமானால் அதன் மூலம் பல்வேறு நிதி நிறுவனங்களில் இருந்து பணம் பெற்று நல்ல தொழிற்சாலைகளை உருவாக்கக் கூடிய ஒரு நிலை ஏற்படும்.

இன்று தரை மட்டத்தில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர்களில் முந்திரிச் சாகுபடி செய்கிறோம். சவுக்குச் சாகுபடி செய்து கொண்டிருக்கிறோம். இவற்றைத் தொழிற்சாலைகளுக்கு உகந்த அளவிற்கு மரங்களாக வளர்க்கும் முறையில் மாற்ற வேண்டுமென்ற நிலை பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். காட்டு இலாகா மூலம் தொழில்கள் வளரும் அளவிற்கு ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படும் என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காட்டு இலாகா தொழிற்சாலைகளை அதிகத் தீவிரமாக ஏற்படுத்த முடியும் என்ற தீவிரக் கருத்தின் முழுமையிலும் உண்மை இல்லை என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

காட்டு இலாகா மூலம் இருக்கிற நிலங்களைப் பாதுகாப்பது, இருக்கக் கூடிய நிலங்

களில் அதிக மரங்களை வளர்ப்பது என்பது நம்நாட்டில் மட்டுமல்ல, உலக நாடுகள் எல்லாம் அந்த ஒரு தத்துவத்தை ஏற்றுக்கொண்டு எல்லா நாடுகளிலும் அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். முன்னேறி இருக்கிற தொழில் மயமான நாடுகளில் கூட, காடுகளை எந்த அளவிற்குப் பராமரிக்கிறார்கள் என்று பார்த்தால் இது நன்கு விளங்கும். யு. எஸ். ஏ. யில் 33 சத விகிதம் காடுகளை நல்ல முறையில் பராமரித்து வருகிறார்கள். கனடாவில் 44 சத விகிதம் காடுகளை நல்ல முறையில் பராமரித்து வருகிறார்கள். பின்லாந்தில் 64 சத விகிதம் காடுகளை நல்ல முறையில் பராமரித்து வருகிறார்கள். யு.எஸ்.எஸ்.ஆர்.-ல் 40 சத விகிதம், மலேசியாவில் 75 சத விகிதம் என்றிருக்கிறது. ஜப்பானில் கூட, அதிக மக்கள் தொகை கொண்ட நாட்டில் கூட 68 சத விகிதம் என்றிருக்கிறது. அந்தந்த நாடுகளில் காடுகளை அழிக்காமல் மலைப்பகுதிகளை வளர்க்கும் ஒரு சூழ்நிலை உள்ளது.

இந்திய நாட்டில் குறைந்தது மூன்றில் ஒரு பங்கு காட்டு நிலங்களைப்பாதுகாக்க வேண்டுமென்று சொல்கிற தத்துவத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, நம் தமிழகத்தில் மட்டும் 16 சத விகிதம் தான் இருக்கிறது என்பதை நாம் உணர்வோம். ஆகவே, காட்டு நிலங்களை வளப்படுத்துவதில் நாம் எல்லாரும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதில் எந்தவிதமான பின்தங்கிய கருத்தும் இல்லை. இன்று காடுகள் பலஇடங்களில் அழிக்கப்படுகின்றன என்று பல இடங்களில் பல குறைகள் சொல்லப்படுகின்றன. அப்படிச் செய்பவர்களைப் பிடித்துத் தருபவர்களுக்கு அல்லது துப்புத் தருகிறவர்களுக்கு எல்லாம் இன்று பரிசுகள் கொடுத்திருக்கிறோம். அது போதாது என்று இங்குப் பேசிய வேலூர் சட்ட மன்ற உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். காடுகளில் வனங்களில் நடைபெறுகின்ற திருட்டுக்களுக்கு அது பற்றித் துப்புத் தந்தால் அதற்குத் தகுந்த சன்மானம் அளிக்கும் அளவில் ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்களும், சென்ற ஆண்டு கூட நம் எதிர்க்கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும், கன்னியாகுமரி மாவட்டத்தில்உள்ள ஒரு பிரச்சினையைச் சுட்டிக் காட்டினார்கள். பள்ளகுளம் எஸ்டேட்டில் உள்ள பல்லாயிரக் கணக்கான மரங்களை வெட்டிச் செல்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் பற்றி நான் ஓரளவிற்கு, நேரம் இல்லாத காரணத்தால், இரண்டொரு வார்த்தைகளில் கூற விரும்புகிறேன். அதை வெட்டக் கூடாது என்பதற்காகத் தடை விதிக்கும்படி சப்-கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கு அவர்களுக்குச் சாதகமாக முடிவாயிற்று. அதைத் தொடர்ந்து வழக்கு உயர்நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கும் வழக்கு அவர்களுக்குச் சாதகமாக முடிவுற்றது. அதைத் தொடர்ந்து சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. சுப்ரீம் கோர்ட்டிலும் கூட அவர்களுக்குச் சாதகமாக முடிவாயிற்று. ஆனால் சுப்ரீம் கோர்ட்டில்வேறு ஏதாவது முறைகள் இருக்கிறதா என்று ஆராயலாம் என்று ஒரு க்ளாஸ் மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் இருக்கிற மரங்களை வெட்டி விடக்கூடாது என்பதற்காக ஒரு ரிசீவரையாவது போட வேண்டுமென்று நம் அரசின் அட்வகேட்ஜெனரல் அவர்கள் டெல்லியில் வாதாடினார்கள். ரிசீவரைப் போடுவதற்கு, சுப்ரீம் கோர்ட் இன்று மறுத்து விட்டிருக்கிறது. ஆக இப்படிச் சட்டச் சிக்கல்கள் இருப்பதால் என்ன செய்வது என்பதை யோசித்து அதற்கு ஒரு மாற்றுச் சட்டத்தால் பெற முடியும் என்று இப்போது அரசு கருதிக் கொண்டிருப்பதால் மாற்று என்ன என்பதைச் சபையில் இப்போது சொல்வது நன்றாக இருக்காது என்பதால் இந்த அளவில் அதை விட்டு விடுகிறேன்.



மாண்புமிகு
மின் துறை அமைச்சர்
ஓ. பி. இராமன்

சின்கோனாவைப் பொறுத்த வரையில் சமீப காலத்தில்வெளி நாடுகளில் அதற்கு மார்க்கெட் கிடைத்துள்ளன. ரஷ்யாவில் இருந்தும், வெஸ்ட் ஜெர்மனியில் இருந்தும், வாங்க முன்வந்திருக்கிறார்கள். இந்தியாவில் இரண்டு மாநிலங்களில், வெஸ்ட் பெங்காலிலும், தமிழ் நாட்டிலும் தான் அவை பாயிராகின்றன. மருந்துப் பொருள்களுக்குப் பயன்படக் கூடிய பொருள் அது மட்டும் அல்ல; ஜெரேனியம், பச்சோலி, வெட்டிவேர் என்ற நம் நாட்டு மருந்துகளுக்குப் பயன்படுபவற்றைப் பயிர் செய்து வருகிறார்கள். வெளி நாடுகளில் இவற்றிற்குக் கிராக்கி ஏற்படுமானால் இதில் நமக்கு நல்ல கணிசமான இலாபம் கிடைக்கும். இந்த ஆண்டு கூட இலாபம்தான் கிடைத்திருக்கிறது. மூவாயிரம் பேர்களுக்கு மேல் இப்போது நாம் வேலை கொடுத்திருக்கிறோம். ஆக இந்தக் கார்ப்பரேஷன் அமைப்பதன் மூலம் தனி நிறுவனங்களிடமிருந்து தனி உதவி பெற்று, அந்தக் கார்ப்பரேஷனை விஸ்தரிக்கிற ஒரு சூழ்நிலை ஏற்படும். அதனால் தொழிலாளர்களுக்கும் பல நன்மைகள் ஏற்படும். இப்போதுகூட நம்தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் வீட்டுவசதி எல்லாம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரியில் உள்ள ரப்பர் தோட்டம் பற்றி திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒவ்வொரு தடவையும் வாதாடுவார்கள். அங்குப் பெரியதொரு ரப்பர்த் தோட்டம் அமைக்க வேண்டுமென்று சற்று ஆவேசமாகச் சொல்வார்கள். போன தடவை சொன்ன ஒரு காரியத்தைச் செய்திருக்கிறீர்கள். ஆகவே, சற்றுக் குறைத்துக் கொள்கிறேன் என்று என்னிடத்திலேயே சொன்னார்கள். ஒவ்வோர் ஆண்டும் சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடையும் விதத்தில் ஓரளவு அவர்களும் திருப்தியோடு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். கிட்டத் தட்ட பத்தாயிரம் ஏக்கரில் ரப்பர் தோட்டத்தை வளர்க்கவேண்டுமென்று மத்திய அரசும் உதவி

தரும் வகையில் இலங்கையில் இருந்து வரும் அகதிகளுக்குக் புனர்வாழ்வு அளிக்கும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பத்தாயிரம் ஏக்கரில் ஒருரப்பர் தோட்டம் உருவாகுமானால் அந்த மூலதனத்திலிருந்துஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய மூலதனமாகும் அது. ஊட்டியில் கூட ஒரு டீ தோட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை அகதிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட அந்தத் தோட்டத்தில் இன்று கிட்டத்தட்ட ஆயிரம் பேர்களை வேலைக்கு அமர்த்தும் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் சம்பளத்தைப் பற்றித்தான் சொல்கிறார்கள். தனியார் தோட்டங்களில் கொடுக்கின்ற சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். தனியார் தோட்டங்களில் நிலையான சம்பள விகிதம் என்று கிடையாது. அரசாங்க நிறுவனங்களில் எந்த அளவிற்கு இலாபகரமாக நடத்த முடியுமோ, அந்த அளவிற்கு இலாபம் வரவரத் தொழிலாளர்களுக்கு நல்லமுறையில் சம்பள விகிதங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வோர் ஆண்டும் கூட உயர்த்தப் பட்டிருக்கிறது. சின்கோனாத் தோட்டத்தைத் எடுத்தாலும் அப்படித்தான், ரப்பர்த் தோட்டத்தை எடுத்தாலும் அப்படித்தான். காட்டு இலாகா மரங்களைப் பாதுகாப்பதில் அத்தனை பேர்களும் காவலர்களாக இருந்து ஒத்துழைப்புத் தரவேண்டும். திருட்டுப் போகிறது என்றால் போன பிறகுதான் சொல்கிறார்கள். அப்படிப்போன பிறகு சொன்னாலும் பல்வேறு இடங்களில் பெரிய பெரிய வழக்குகளை எல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கேரளாவிலிருந்து சந்தன மரம் திருடப் பட்டு ரெயில்வே வாகன்களில் ஏற்றப்பட்ட போது சென்ட்ரல் ஸ்டேஷனில்தான் தமிழகப் போலீஸ்காரர்கள்தான் வாகனிலுள்ள சந்தனக் கட்டைகளை எல்லாம் பிடித்தார்கள். அந்த அளவிற்குத் தமிழ்நாடு போலீஸ் நல்ல கண்காணிப்போடு இருந்து வருகிறது. பிரதான வழக்குகளை எல்லாம் கண்டு பிடித்த போலீஸ் அதிகாரிகளுக்குக் காட்டு இலாகா மூலமாகக் கூடச் சன்மானம் கொடுக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம். பொதுமக்களிலும் துப்புத் தருகிறவர்களுக்கும் சன்மானம் கொடுக்கலாமா என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். இந்த அளவிற்குத் தக்க நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசியவர்களுக்கு நன்றி கூறி, வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருப்பவர்கள் காலப் போக்கில் எல்லாம் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து அவற்றைத் திரும்பப் பெற்று இந்த மானியக்கோரிக்கையை நிறைவேற்றிக் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[24—3—1973-ல் தமிழ்நாடு சட்டப் பேரவையில் வனத்துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு வழங்கிய பதிலுரையிலிருந்து]

---

## தமிழ்நாடு அரசுக்கு குடியரசுத் தலைவரின் பாராட்டு !

நாட்டில் கோடான கோடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் சுகாதார நலம் பேண அரசு முயன்று வருகிறது. அரசின் முயற்சியில் பங்கேற்கும் சேவை உணர்வுள்ள நிறுவனங்கள் வளரவேண்டும்.

குறிப்பாகத் தமிழ்நாடு அரசாங்கம் தமிழகத்தில் பல பகுதிகளில் அமைத்து ஒழுங்குற நடத்திவரும் கண்ணொளி வழங்கும் முகாம்களைப் பற்றி அறிந்து நான் மன நிறைவும் மகிழ்ச்சியும் கொள்கிறேன்.

இதுபோல் தேசத்தின் பல்வேறு இடங்களில் கண்ணின் நோய், குறைபாடுகள் இவற்றை நீக்குகின்ற பணிகளைச் செய்வதோடு, கண்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் அந்தக் கண்ணொளி வழங்கும் முகாம்கள் கல்வியளிக்க வேண்டும்.

—தென்சென்னை அரிமா சங்கச் சார்பில், கண் மருத்துவ நிலையம், மருத்துவ நிலையம் ஆகியவற்றைத் துவக்கிவைத்து இந்தியக் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரையிலிருந்து........

# உலகுக்கு இரண்டு கண்கள்

## டி.என். சுகிசுப்பிரமணியன்

காலம் வகுத்த கனவுகளோடும் கனவுகளைச் சுமந்த இதயத்தோடும் காத்திருந்த ராதையின் காதல், கதையாய், கற்பனையாய் முடிந்து இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன.

மணிவாசகன் - நர்மதா இவர்களின் திருமணம் நடந்து இரண்டு ஆண்டுகள் முடிந்து மூன்றாவது ஆண்டின் தொடக்கம். காலமென்னும் நதிப்பெருக்கில் இந்த இரண்டாண்டுகளுக்குள் கரையில் ஒதுங்கிய செல்வங்கள் செல்வாக்குகள்தாம் எத்தனை எத்தனை ..!

'செண்பகா மில்லின் சட்ட ஆலோசகன் மணிவாசகன் எம்.ஏ.பி.எல்.,

'செண்பகா மில்லின் கம்பெனி டாக்டர் திருமதி நர்மதா மணிவாசகன் எம்.பி. பி.எஸ்.'

—என்ற இரண்டு பெருமைகளையும் சுமந்தபடி அவர்கள் இல்லத்தின் முகப்பில் பெயர்ப் பலகைகள்! அவர்கள் இருவரின் வளத்தை, வளர்ச்சியை வாழ்வின் உயர்வைச் சொல்லும் வண்ணமாக வீட்டின் தோற்றமே கம்பீரத்துடன் எழுந்து நிற்கின்றது. இவற்றுக்கெல்லாம் ஆதாரம் – அடிப்படைக் காரணம் 'ராதை' என்ற கன்னியின் தியாகம் என்பதை நர்மதா மறக்கவில்லை. ஒவ்வொரு கணமும் அவள் இதயம் ராதைக்கு நன்றி சொல்லியபடியேதான் துடித்துக் கொண்டிருக்கிறது ..!

அதிகாலையில் எழுந்து - குளிரையும் பனியையும் பொருட்படுத்தாமல் குளித்துப் புத்தாடை புனைந்து புத்தம் புதுமலராக வந்து நிற்கிறாள் நர்மதா. மணிவாசகனின் தூக்கம் கலைந்தும் சோம்பல் கலையாத சுகமான காலைப் பொழுது ....

ராதை கொடுத்த காபித் தம்ளருடன் மணிவாசகனின் படுக்கையை நோக்கி வருகிறாள் நர்மதா .. கட்டிலில் மல்லாந்து படுத்தபடியே அவளை ஆவலுடன் நோக்குகிறான் மணிவாசகன். பனியில் குளித்துப் பசுமையில் மலரும் பூவைப் போன்ற அவளின் பொலிவு அவன் கண்களுக்குக்

# 1

### குங்குமப்பூ நோயாளி!

குளுமை தருகின்றது. உதகையில், என்றோ ஒரு நாள் .... அவளுடன் குதிரைக்காக நடத்திய வாக்குவாதம், அதைத் தொடர்ந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் அவன் இதயத்துள் நிழற்படமாய் விரிகின்றன.

காபித் தம்ளரை நீட்டிய நர்மதாவின் கரங்களை எட்டிப் பிடித்து இறுக்குகிறான் மணிவாசகன்.

'' உஷ் ... கையை விடுங்கள்... காலை நேரத்தில் இதென்ன கலாட்டா ?'' என்று சிணுங்குகிறாள்.

'' காதல் மயக்கத்துக்குக் காலை மாலை பேதம் கிடையாது நர்மதா !''

'' கணவனும் மனைவியுமாகியே இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன! இன்னும் காதல் மயக்கம் தீரவில்லையாக்கும்..?''

'' உடலுக்கு வயது ஏற ஏற இதயத்தின் வயது இளமையை நோக்கிக் குறைந்து கொண்டே வரும்..''

'' என்றும் பதினாறு என்று இதயத்திற்குச் சொன்னது தானே ?''

இருவரும் நாணத்தால் சிரிக்கின்றனர்.

'' ஆமாம்...... அனுபவத்தில் பிறந்த அமுதவாக்கு !'' நர்மதா இப்போ நீ எப்படி இருக்கிறாய் தெரியுமா ?''

'' உங்களுக்கு ஏற்றவளாக இருக்கிறேன் அப்படித்தானே ?''

'' அன்று மலர்ந்த செந்தாமரை முகத்தில் அப்போது விழுந்த குங்குமம் போல் இருக்கிறாய்நீ! .. உன் புதுமைப் பொலிவுக்கு....புத்தெழிலுக்கு என்ன காரணம் என்று நான் குழம்பித் தவிக்கிறேன்..''

குழப்பமே ''வேண்டாம்.. குங்குமப்பூ தேவைப்படுகிற காலம் எனக்கு....'' என்று கூறி விட்டு அவன் மடியில் முகம் புதைத்துச் சிலிர்க்கிறாள் நர்மதா.

மணிவாசகனின் இதயம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது . . . நர்மதாவின் முகத்தை நிமிர்த்தி அவள் விழிகளை ... விழிகளில் ததும்பும் வெட்கத்தை நெருக்கு

## கவிதையும் கவிஞர்களும்

எல்லா மனிதர்களும்—இதயத்தால் கவிஞர்களே !
—எமர்சன்

நவீன கவிதையை எழுதும் கவிஞர்கள் பேனா மையுடன் அதிக அளவு தண்ணீரைக் கலக்கிறார்கள்.
—கதே

காதலில் ஈடுபடும்போது ஒவ்வொரு மனிதனும் கவிஞன்தான் !
-பிளேடோ

கவிதை - எல்லாக் கலைகளுக்கும் சகோதரி; அநேக கலைகளின் பெற்றோர்
-கங்கிரேவ்

கவிஞர்கள் பொய் சொல்வதற்கு உரிமம் பெற்றிருக்கிறார்கள்.
—பிளினி

என்னைப் பொறுத்தவரை கவிதை ஒரு குறிக்கோள் அல்ல—ஆனால் ஒரு தீவிர உணர்ச்சி !
—போ

உரைநடை இல்லாத அனைத்தும் கவிதை என்ற திருநாமம் பெறுகிறது.
—கிரேடா.

நீதிக்கும் அரசியல் விஞ்ஞானத்துக்கும் துணையாக இருப்பது கவிதை என்று கருதுகிறேன்.
—ஷெல்லி

கவிதையை இசைச் சிந்தனை என்று குறிப்பிடலாம்.
--கார்லைல்.

எல்லா நாடுகளையும் சேர்ந்த பெருங்கவிஞர்களுக்குச் சிறப்புத்தருவது—அவர்களிடம் நிறைந்திருக்கும் நாட்டுணர்வு அல்ல—உலக உணர்வு!
—லாங்பெல்லோ

நேர் பார்த்து ரசித்தபடி, ''டாக்டர்! நீங்கள் எப்போது முதல் குங்குமப்பூ நோயாளி ஆனீர்கள்?'' என்று கேட்கிறான்.

'' குங்குமப்பூ நோய் தந்த குற்றவாளி வக்கீல் சார்! உங்களுக்குத் தெரியாதா இந்த நோய் தொடங்கிய காலம் ?''

'' வக்கீலைக் குற்றவாளியாக்கி விட்டாயே !''

'' டாக்டரை நோயாளியாக்க வில்லையா நீங்கள் !''

'' அது சரி! இந்தக் குற்றவாளிக்குத் தீர்ப்பு வழங்கப்போகும் நீதிபதி யார் ?

'' பிறக்கப்போகும் பையன் !''

'' தீர்ப்பு என்னவாக இருக்கும்? இன்னொரு முறை இதே தவறைச் செய், எனக்கு ஜூனியர் 'வேண்டும்' என்று குட்டி நீதிபதி தீர்ப்புக் கொடுத்துவிடுவாரோ ?''

—கணவன் பேசப்பேச நர்மதாவின் கண்களுக்குள் ஒரு கனவு கூடிக் கலைகிறது....

முத்துப்போல் ஒரு பிள்ளை நீதிபதியாக அமர்ந்திருக்க, நர்மதாவும் மணிவாசகனும் வாதி, பிரதிவாதியாக நீதிமன்றத்தில் கைகட்டி நிற்க, நீதிபதியின் தீர்ப்பைக் கேட்டுப் பாசமும் பரவசமும் பொங்க ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரிக்க....

கற்பனையைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தவள் கலகலவெனச் சிரிக்கத் தொடங்குகிறாள்....

'' என்ன சிரிப்பு நர்மதா....? எதற்காக இந்தச் சிரிப்பு..?'' என்று கேட்கிறான் மணிவாசகன்.

'' ஐயோ பாவம்... குற்றவாளிக் கூண்டிலே நீங்கள் நிற்கும் காட்சி என் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து !

'' என்னை நீதிமன்றத்தில் கொண்டுவந்து நிறுத்துவதில் உனக்கு இத்தனை மகிழ்ச்சியா...?''

'' நமக்குள் ஏற்பட்டிருக்கும் வழக்கில் நியாயம் சொல்லப் போவது நம் குழந்தைதானே அத்தான்....!

கணவனும் மனைவியும் மறுபடியும் கனவுக்குள் லயிக்கத் தொடங்குகிறார்கள்.

நர்மதா...என் கனவிலே நீ எப்படி வருகிறாய் தெரியுமா.?''

'' சொல்லுங்கள்.. ..தெரிந்து கொள்கிறேன் ''

'' நிலவு போல் அழகும்...நித்திய சூரியன்போல் ஒளியும் சத்தியவானுக்கு வாய்த்த சாவித்திரி போல் நெஞ்சுரமும், காளியைப் போன்ற சக்தியும் கொண்டு...'' என்று மணிவாசகன் கூறி முடிப்பதற்குள் நர்மதா குறுக்கிட்டு, '' காளியைப் போல் ஆவேசங் கொண்டவளாக இருக்கமாட்டேன், நான் கனிவும் கருணையும் கொண்ட கனிபோன்றவள்'' என்று சமாதானம் கூறுகிறாள்.

'' நீ காளியைப் போல் பயங்கரியாக மாறியே தீருவாய்..குதிரைச் சவாரி நடை பெற்றபோது எத்தனை பிடிவாதம் பிடித்தாய், காளியாக! பிறகு கொள்கைப் பிரச்சினைகளில் விட்டுக் கொடுப்பாயா என்ன..? இப்போதும் காளியாக மாறுகிறாய்! சொந்தக் குடும்பப் பிரச்சினை வந்தால் மாகாளியாக மாறுவாய் நீ!''

'' ஓ...இது வக்கீலின் தீர்க்க தரிசனமோ?'' என்று பாராட்டிச் சிரிக்கிறாள் நர்மதா.

கன்னி காதலியாகி, காதலி மனைவியாகி, மனைவி அன்னையாகி யிருக்கும் அந்தப் பெண்மையின் நிறைவு குறித்துப் பெருமையுடன் நர்மதாவை நோக்குகிறான் மணிவாசகன். அறிவின் தெளிவும் ஆண்மையின் கம்பீரமுமாகச் சேர்ந்து நிறைகுடமாய் உயர்ந்து நிற்கும் கணவனின் பெருமை குறித்துப் பெருமிதத்துடன் அவனைப் பார்க்கிறாள் நர்மதா.

அந்தப் பார்வை...அந்தப் பரிவு... அந்தப் பாசம்.. அனைத்தும் ஒரிரு கணங்களுக்குள் உலகத்தையே அவர்கள் காலடியில் வீழ்த்திய வெற்றி உணர்வைத் தருகின்றன. உதகைப் பயணத்தில் ஓடைக் கரையில் குழந்தையைக் காப்பாற்ற விரைந்த சமயம் இருவரது இதயங்களும் கண்களால் பேசிக் கொண்ட போது பிறந்த இன்பம் இப்போதும் இந்தக் கணத்திலும் பிறக்கின்றது ...கருத்துக்களைத் தெரிவிக்கத்தானே வார்த்தைகள் தேவை! உணர்ச்சிகளைத் தெரிவிக்கக் கண்கள் போதுமே....!

அமைதியின் அழகு அதிகநேரம் நீடிக்கவில்லை; நர்மதாவே அமைதியைக் கலைக்கிறாள் :

'' அத்தான்...நாம் மகிழ்ச்சியுடன் இருக்கும் இந்த நேரத்தில் நம்மோடு சேர்ந்திருக்கும் மற்றவர்களையும் கொஞ்சம் நினைத்துப் பார்க்கவேண்டும்'' என்கிறாள்.

"இருக்கிறவர்களையா..இல்லே, இனிமேல் பிறக்கப் போகிறவர்களையா?"

"இரண்டு பேரையுந்தான்"

"அப்படி என்றால்...?"

"ராதையின் இதயம் எனக்குத்தான் தெரியும் நர்மதா...அவள் சட்டப் படிப்புப் படித்தால், வழக்கறிஞராக வந்தால் என் மனம் சிறும் என்று அவள் நினைத்துக் குழம்புகிறாள்"...

"உங்கள் மனம் சிறும் என்று அவள் ஏன் நினைக்க வேண்டும்? வக்கீல் தொழிலில் போட்டிதான்

"இதை நான் நம்ப வேண்டும் என்கிறீர்களா"?

"நம்பலாம். தவறில்லே!"

"நான் நம்ப மாட்டேன். அவள் உங்களுக்காகத் தன் படிப்பைத் தியாகம் செய்தாள்; எனக்காக உங்களையே தியாகம் செய்தாள்; தன் தியாகத்துக்கு விலைபேச அவள் விரும்பவில்லே"!

"இதை உணர்ந்த பிறகாவது நீ அவளைப் படிக்க வைக்கும் ஆசையை மறந்தால் சரி..." என்று முத்தாய்ப்பு வைக்கிறான் மணிவாசகன்.




"ராதா சட்டம் படிக்கிறேன், படிக்கிறேன் என்று சொல்லுகிறாளே தவிர...,சட்டக்கல்லூரிக்குப் போக மறுக்கிறாள்..என்னை ஏமாற்றிவிட்டாள்!"

"நான் ஏமாறவில்லே நர்மதா.! என் மாமன் மகள் ராதையைப் பற்றி நான் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறேன்"!

"என்னிடம் சத்தியம் செய்து கொடுத்தாளே, சட்டம் படிக்கப் போகிறேன் என்று?"

"அப்போதுதான் நீ திருமணத்திற்குச் சம்மதிப்பாய் 'என்பதால் தான்!"

"காதலுக்கு வெற்றி, கடமையில் தோல்வியா"? என்று பொருமுகிறாள் நர்மதா.

இருக்குமா? வாரிசுகள் வளர முடியாதா?"

எனக்கு வாரிசு என்பதாக ராதையை நான் ஏற்றுக்கொள்ளலாம். அதற்கு அவள் சம்மதிக்க வேண்டுமே ...!

"இது மட்டுந்தான் உண்மையான காரணமா?"

"ஆமாம்"

எழுந்து செல்ல இருந்தவனைத் தடுக்கிறாள் நர்மதா.

"நான் மறக்கப் போவதில்லே அத்தான்.மாருக, என் மனம் உறுதிப்படுகிறது. ராதையைச் சட்டக் கல்லூரியில் சேர்க்காமல், அவளை வழக்கறிஞராக்கிப் பார்க்காமல் எனக்கு எந்தவித இன்பமும் தேவையில்லே... வாழ்க்கை, வசதிகள் எதுவுமே தேவையில்லே!



நர்மதாவின் குரலில் தெறிக்கும் உறுதி; மணிவாசகனைத் திகைக்கவைக்கிறது. இந்தப் பிரச்சினையின் தீவிரத்தைக் குறைக்க, அல்லது மாற்றியமைக்க ,வழி ஏதும் புலப்படுமா என ஆராய்கிறது அவன் மனம்.

"அத்தான் . . . சட்டக் கல்லூரியில் இந்த வருடமாவது ராதை சேருவதற்கான வழியைப் பாருங்கள் . . . அவளைச் சேர்த்து விடுவது உங்கள் பொறுப்பு . . . இதோ அவள் பூர்த்தி செய்ய வேண்டிய விண்ணப்பத்தாள்..." என அருகிலிருந்த மேசை டிராயரிலிருந்து காகிதம் ஒன்றை எடுத்து நீட்டுகிறுள் நர்மதா.

"இது அபத்தம்"

"நல்ல அபத்தத்தை ஆதரிக்க வேண்டுவது புத்திசாலியின் கடமை".

இது தவறு என்ருல்?"

"தவறு என்னும் எண்ணமே நமது கருத்துக்களின் முரண்பாடு தானே! அவள் சட்டப் படிப்புக்கு விண்ணப்பத்தாள் பூர்த்தி செய்தாக வேண்டும்"

"இதைவிட, பிறக்கப்போகிற தம் பையன் உதகைக் கான்வென்ட்டில் சேருவதற்கான விண்ணப்பத்தாளைப் பூர்த்தி செய்வது பயனுள்ள செயல்" என்கிருன் மணிவாசகன். அவனுக்கு முகம் நிறையச் சிரிப்பு. அவள் முகத்தில் அதன் மறுப்பு பிரதிபலிக்கிறது.

நர்மதாவின் இதயம் அதிர்கின்றது. ஆவேசம் அவள் குரலில் தெறிக்கின்றது. "பசுமையான உங்கள் நெஞ்சுக்குப் பின்னுல் எப்படிப்பட்ட நஞ்சு இருக்கின்றது என்பதை இன்றுதான் புரிந்து கொண்டேன். உங்களுக்கு வாழ்வு கொடுத்தவளின் எதிர்காலம் பெரிதில்லையாம்! வரப்போகிற குழந்தையின் கல்வியும் வளர்ச்சியும் பற்றி அக்கறை கொள்ளவேண்டுமாம்!" என்று சீறுகிருள்.

"பிறரைவிடத் தன்னை, தன் குடும்பத்தைப் பேணுவதில்தான் பெருமை உண்டு....அதுதான் புத்திசாலித்தனம் நர்மதா"

"அந்தப் புத்திசாலித்தனமும் நீங்கள் கொண்டாடுகிற அந்தப் 'பெருந்தன்மை'யும் ராதைக்கு இருந்திருந்தால், நீங்கள் பி.ஏ. பி.எல். படித்திருக்க முடியாது; வக்கீல்மணிவாசகனுகியிருக்க முடியாது;....நானும் திருமதி மணிவாசகனுக ஆயிருக்கவும் முடியாது!

"வீண் பேச்சு ஏன் நர்மதா..? ராதையின் படிப்புக்குச் செலவாகும் பணத்தில் புது வீடே வாங்கி விடலாம். இரட்டைப் போர்ஷன் அமைப்புக் கொண்ட பெரிய பங்களா பார்த்திருக்கிறேன்... வலது பக்கம் 'வக்கீல் மணிவாசகன் ஆபீஸ் அறை; இடது பக்கம் டாக்டர் நர்மதாவின் கிளினிக்; எதிரும் புதிருமாக, வெள்ளையும் சிவப்புமாகத் தனித் தனியே இரண்டு கார்கள்..! ஒன்று வக்கீலுக்கு, மற்ருென்று டாக்டரம்மாவுக்கு.." மணிவாசகன் சொல்லச் சொல்ல நர்மதாவின் முகம் கோபத்தால் இறுகிக் கனக்கிறது.

"போதும் நிறுத்துங்கள்" என்று சீறுகிருள் நர்மதா.

"ஏன்?"

"உங்களுக்கு உதவி செய்த தியாகக் கரங்களை வெட்டிச் சாய்த்துவிட்டு உங்கள் உல்லாச வாழ்க்கை பற்றிப் பேசுகிறீர்கள்"!

"ராதை படிக்கப் போக மாட்டாள்"

"நாம் நினைக்கிறபடி ஒருவர் நடக்க மறுத்தால் நாம் நடக்க எண்ணுகிறபடி, அவளை நினைக்கும் படித் தூண்டுதல் செய்யலாம்".

"என்னுல் செய்ய முடியும்; இதனைச் செய்ய வேண்டாமே என்று உறுதியாக இருக்கிறேன்".

"ஒளிதந்து உதவிபுரிந்தவளை இருளில் ஆழ்த்திவிட்டு ஒய்யாரமான எதிர்காலம் பற்றிக் கனவு காண்கிறீர்கள்...."

"கனவல்ல நர்மதா! கருத்தோடு போட்டிருக்கும் என் திட்டம் இது!"

"ராதை சட்டப் படிப்புக்குப் போகவில்லை என்ருல், இவையனைத்தும் கனவுதான்."

"அனைத்தும் என்ருல்"

"உங்கள் எதிர்காலம்... உங்கள் குழந்தையின் எதிர்காலம்... உதகைப் பள்ளியில் உங்கள் குழந்தையின் வருங்காலப் படிப்பு... எல்லாம் கனவாகவே நின்றுவிடத்தான் போகின்றன... கனவாகவே நிறுத்திவிடுவேன் நான்"..

"நிறுத்த மாட்டாய் நீ...! நீ கனிவுள்ளவள். கருணை நிறைந்த இதயம் கொண்டவள்...!"

"இல்லை; காளியைப் போன்ற பயங்கரியாகவும் மாறுவேன். உங்கள் குழந்தையின் எதிர்காலம் மட்டும் கனவாகப் போகாது.. உங்கள் குழந்தையின்குழந்தையே ஒரு கனவாகப் போகும்படிச் செய்து விடுவேன்...செய்துவிட என்னுல் முடியும்!" என்று முழங்கினுள் நர்மதா.

"நீ மாகாளிதான்! ஏய், பயங்கரி! எனக்குத் துளியும் சந்தேகமில்லை!" என்று குரலை உயர்த்துகிருன் மணிவாசகன்.

"அடடா.....காலை வேளையில் என்ன கூச்சல்?" என்று இரைந்தபடியே அறையின் வாசலில் வந்து நிற்கிருள் ராதை.

அவளைக் கண்டதும் நர்மதாவின் ஆவேசம் அடங்குகிறது, பொங்கிய பாலில் தெளித்த குளிர் நீராக!.

''உள்ளே வரலாமா?'' என்று கேட்டுவிட்டு அனுமதிக்காகக் காத்திருந்த ராதை, மணிவாசகன் தலையசைத்ததும் பரபரப்பாக உள்ளே வருகிறாள். படபடவெனப் பேசியதால் ஏற்பட்ட நடுக்கம் நர்மதாவின் உடலில் இன்னும் இருக்கிறது. தடுமாறிப் படுக்கையில் சரிய இருந்தவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாள் ராதை.

''அக்கா...உன் உடம்புக்கென்ன? ஏன் இப்படிப் படபடவென நடுங்குகிறது உன்–கை?'' என்று கேட்ட ராதைக்கு மறுமொழி கூறாமல், கூற முடியாமல் அமைதியாக அவளை ஏறிட்டு நோக்குகிறாள். 'உனக்கு வரவேண்டிய வளமான வாழ்வை நானல்லவா வஞ்சித்து விட்டேன்' என்ற குற்ற உணர்வோடு உதடுகள் துடிக்க அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாள் நர்மதா.

''ராதா...நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்'' என்று நர்மதா பேச ஆரம்பிப்பதற்குள் ராதை குறுக்கிட்டு, ''நானும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்'' என்று மகிழ்வுடன் கூறுகிறாள்.

''என்ன''? எனக் கேட்கிறான் மணிவாசகன்.

''அத்தான்! அடையாறு பங்களாதான் உங்கள் இரண்டு பேருக்கும் ஏற்றது..புதுமையான கட்டட அமைப்பு; புதுமையான பங்களா'' என்கிறாள் ராதை.

''ராதா! உன்னை யார் பங்களா பார்க்கச் சொன்னது''?

''நான்தான்'' என்கிறான் மணிவாசகன்.

''பங்களா பிரமாதம் அக்கா'! இரண்டு தனித்தனி பங்களாக்கள்; ஆனால் தாய்ச் சுவர் ஒன்றுதான். வாசலில் தனித்தனி வரவேற்பறைகள்; உங்கள் இருவரின் தொழில்களுக்கும் ஏற்றபடி.. அத்தான் குறுக்கே போட்டிருக்கிற. வேலியைமட்டும் எடுத்துவிட்டால்... வாசலில் எத்தனை கார்கள் வந்தாலும் தாராளமாக நிறுத்தலாம்...அத்தனை பெரிய விசாலமான வாசல்!'' என்று மேலும் மேலும் அடுக்கிக் கொண்டே போகிறாள் ராதை.

''இதையெல்லாம் விட, எனக்கு உன்படிப்புத்தான் முக்கியம் ராதா!'' என்று குறுக்கிடுகிறாள் நர்மதா.

''அதுதான் அன்றைக்கே சரி என்று கூறிவிட்டேனே அக்கா!'' என்று விரக்தியாகச் சிரிக்கிறாள் ராதை.

''இனிமேலும் உன் சிரிப்பிலே ஏமாந்து போகமாட்டேன். இந்த வருடம் நீ கண்டிப்பாகச் சட்டக் கல்லூரியில் சேரத்தான் போகிறாய்....

''சேருகிறேன்''

''சேர்ந்து படிக்க வேண்டும், படித்துத் தேற வேண்டும்; தேறித் தொழில் நடத்த வேண்டும்... ராதா..! இல்லாவிட்டால் உன் அக்கா அடிக்கடி காளி அவதாரம் எடுக்க நேரிடும்'' என்று கூறிக் கேலியாகச் சிரிக்கிறான் மணிவாசகன்.

''கட்டாயம்; ராதா பி.ஏ. பி.எல். என்று உங்கள் புது பங்களாவின் அவுட்–ஹவுஸ் வாசலில் ஒரு போர்டு போட்டுக் கொண்டு உட்காரத்தான் போகிறேன் ...'' என்கிறாள் ராதை.

''போர்டு போட்டுக் கொண்டு உட்கார்ந்தால் போதுமா? நீதிமன்றம் போய் வழக்காடவும் வேண்டும், அதில் வெற்றியும் பெற வேண்டும்'' என்று திருத்துகிறான் மணிவாசகன்.

நர்மதாவின் முகத்தில் மலர்ச்சி.

''என் ராதா நிச்சயம் வெற்றி பெறுவாள். அவளுக்கெதிராக வாதாட எந்த வக்கீலுக்குத் துணிச்சல் வரும்?'' என்று பாராட்டுகிறாள்.

''ஓ.... அப்படியானால் என்னையே எதிர்த்து வழக்காடவும் வந்து நிற்பாளா?'' எனக் கேட்கிறான் மணிவாசகன்.

''அவசியம் ஏற்பட்டால் அவள் வருவாள்!'' என்கிறாள் நர்மதா.

''எனக்கு எதிராக?''—மணிவாசகன்.

''ஆமாம்... எனக்குச் சாதகமாக!''—நர்மதா.

''அடடா... எனகக்கு வழக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காக நீங்கள் இரண்டுபேரும் விளையாட்டுச் சண்டை போட்டுக் கொள்கிறீர்களா? எழுந்திருங்கள் இரண்டு பேரும்... எங்கே ... இரண்டு பேரும் கலகலவெனச் சிரிக்க வேண்டும்.. .ம்.. ஒன்... டூ... த்ரீ''– என ராதை சொல்லி முடிப்பதற்கும், இருவரும் மனம் விட்டுக் கலகலவெனச் சிரிக்கத் தொடங்கவும் சரியாக இருக்கிறது.

இதயங்கள் ஒன்றிக் கலந்த இருவரின் சிரிப்பிலே ராதையின் சிரிப்பும் சங்கமமாகிறது.

''நீங்கள் இருவரும் சிரித்து இணைந்து வாழ்வதைப் பார்க்கும் போது என் மனம் எவ்வளவு பூரிப்படைகிறது தெரியுமா? நான் எவ்வளவு பெருமைப்படுகிறேன் தெரியுமா''? என்று மனம் நெகிழ்ந்து கூறுகிறாள் ராதை.

''அசட்டுப் பெண்''! என்று செல்லமாக அவளைத் தட்டுகிறாள் நர்மதா.

## அறுவைச் சிகிச்சைக்கு அகவை பதினாயிரம்

பிரான்சின் தென்மேற்குப் பகுதியில் அண்மையில் மனித எலும்புக்கூடு ஒன்று கிடைத்துள்ளது. இது, கற்காலத்தைச் சேர்ந்த மனிதனின் எலும்புக் கூடு என்று தெரியவருகிறது. இந்த எலும்புக் கூட்டின் மண்டையோட்டில் 2·5 செ. மீ. அகலமுள்ள துளை ஒன்று உள்ளது. இதனைக் கொண்டு, இறந்துபோனவர் அறுவைச் சிகிச்சைக்கு ஆளானவர் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அப்படியென்றால் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகத்தில் அறுவைச் சிகிச்சை நடைபெற்றிருக்கிறது என்று தெரிகிறது.



திருமண நாளன்று மணமகனின் கையிலே மணமகளின் தந்தை சவுக்கொன்று பரிசு கொடுப்பார். அந்தச் சவுக்கு, மணமக்கள் படுத்திருக்கும் படுக்கைக்கு மேல் கட்டப் படும். எப்போது தேவைப் படுகிறதோ, அப்போது அந்தச் சவுக்கை மணமகன் பயன்படுத்தலாம். அதாவது மனைவியை அடிக்க வேண்டிய சூழ்நிலை வந்தால் கணவன் அந்தச் சவுக்கினல் அடிக்கலாம்.

இப்படி ஒரு வழக்கம் பழங் கால ருஷியாவில் நடைமுறையில் இருந்து வந்ததாம்!

# மணமகனுக்குப் பரிசு



''அறிவும் திறமையும் நிரம்பிய அக்காவுக்குத் தங்கையாக இருப்பதால் என் அசட்டுத்தனம் ஒன்றும் பெரிய குறையாகத் தோன்றவில்லை!'' என்று சமாதானம் கூறுகிறுள் ராதை.

கவலையை மறந்து இதயங்கள் இலேசான மகிழ்ச்சியில் மூவரும் கலகலவென்று சிரித்து மகிழும் போது, நர்மதா வாயைப் பொத்திக்கொண்டு அவசரமாக ''வாஷ் பேசின்'' அருகே ஓடுகிறுள், ராதை பதறுகிறுள்.

''என்னக்கா திடீரென்று! உங்கள் உடம்புக்கென்ன?'' என்று அவளருகே ஓடுகிறுள்.

''சக்கைப்போடு!'' என்று சிரிக்கிறுன் மணிவாசகன்

''என்னத்தான்!'' என்று குழம்புகிறுள் ராதை.

''சக்கைப் போடு என்றுள்... மசக்கைப் போடு! குங்குமப்பூ நோயாளிக்கு வந்த குமட்டல் வியாதி!'' என்கிறுன் மணிவாசகன்.

''ஓ....பாப்பா பிறக்கப் போகிறதா?'' என்று மகிழ்ச்சியில் பூரிக்கிறுள் ராதை... அவள் இதயம் பெற்ற பூரிப்பை முகம் பிரதிபலிக்கிறது. படபடவென்று படியிறங்கிப்போன ராதை மீண்டும் மாடியேறி வரும்போது அவள் கையில் சர்க்கரை டப்பாவும் சாக்லேட் டப்பாவும் இருந்தன.

''என் சந்தோஷத்திற்கு அளவே இல்லை அத்தான்...பிறக்கப் போகிற பிள்ளை பெரிய அதிர்ஷ்டக்காரனுகத்தான் இருப்பான் பாருங்களேன், அவனுக்காக இந்தச் சித்தி பெரிய பங்களா டைப் வீடு பார்த்துப் பேசிவிட்டு வந்திருக்கிறேன்''... என்று கூறியபடியே சாக்லெட் நாலைந்தும் சர்க்கரை ஒருபிடியுமாக அள்ளி மணிவாசகன் வாயில் போடுகிறுள்.

நர்மதா அந்தக் காட்சியைப் பார்த்துப் பெரிதும் ரசித்தபடி பாத்ரூமிலிருந்து வெளியே வருகிறுள். அவள் இதயம் நன்றி உணர்வில் விம்மிக் கரைகின்றது. ராதையின் அன்புப் பிடிக்குள் நர்மதா திக்கித் திணறிக் கொண்டிருந்த சமயம்...

தொலைவுபேசி மணி ஒலிக்கிறது. மணிவாசகன் எடுத்துப் பேசுகிறுன்.

''ஹலோ...ஆமாம்... டாக்டரம்மா இருக்கிறுர்கள்...அவசர கேஸா?.. இப்போதேவா?.. மன்னிக்கணும்... அவர்களுக்கு...'' என்று மேலே பேசுவதற்குள் நர்மதா அவனைத் தடுத்து, தொலைவுபேசியைத் தன் கரங்களில் வாங்குகிறுள்.

''ஹலோ... நர்ஸ் தங்கமா? வருகிறேன்... ஒரு விளுடியில் வந்துவிடுகிறேன்'' என்று கூறி, தொலைவுபேசியை வைத்து விட்டுப் புறப்படுகிறுள்.

அவளுடைய மருத்துவக் கருவிகள் அடங்கிய பையை எடுத்துத் தயாராகத் தருகிறுள் ராதை. எவர் தடுத்தாலும் நர்மதா ஒரு விளுடி கூட நிற்கமாட்டாள் என்பதுதான் ராதைக்குத் தெரியுமே!

நர்மதா புறப்பட்டுச் சென்ற ஓரிரு விளுடிகளில் மீண்டும் தொலைவுபேசி மணி ஒலிக்கிறது.

''ஹலோ.... மணிவாசகன் தான் பேசுகிறேன்...வணக்கம்...?''

''முத்தையா பேசுகிறேன்'', என்ற குரல் தொலைவுபேசியின் மறுமுனையில்!

''ஐயா வணக்கம்...! சென்னைக்கு எப்போது வந்தீர்கள்...?''

''வந்துகொண்டே இருக்கிறேன்....மிஸ்டர் மணிவாசகன்.....நீங்கள் உடனடியாகப் புறப்பட்டுக் கிண்டிக்கு வர வேண்டும்....

''வருகிறேன்.... நீங்கள் இன்னும் உங்கள் அடையாற்றுப் பங்களாவுக்கு வரவில்லையா...?''

''வரவில்லை...... வரமுடியவில்லை....நீங்கள் இன்னும் பத்து நிமிஷத்தில் கிண்டிக்கு—தாமோதரன் பங்களா தெரியுமல்லவா?''

''தெரியுமே..உங்கள் என்ஜினீயர் நண்பர்''

''ஆமாம்....அங்கே வரவேண்டும்....அவசரம்''

''வருகிறேன்....ஐயா மிகவும் பதட்டத்தில் இருப்பதுபோல் தெரிகிறது! என்ன காரணம் முதலாளி?''

''ஒரு விபத்து நடந்துவிட்டது!''

''விபத்தா?''

''ஆமாம்........ இதற்குமேல் தொலைவு பேசியில் பேசுவது விவேகமில்லை.......நீர் உடனே புறப்பட்டு வாரும்''

தொலைவுபேசி துண்டிக்கப்படுகிறது.

மணிவாசகன் பரபரப்பாகப் புறப்படுகிறுன்.

(வளரும்)

# நாடு காக்கும் வீரர்களுக்கு அரசு வழங்கும் உதவிகள்



நமது நாட்டின் எல்லைகளையும், கடற்கரைகளையும், வானப் பகுதிகளையும் பாதுகாத்துவரும் வீரர்களின் குடும்பங்களுக்குப் பல சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அவர்களது குழந்தைகளுக்குக் கல்விவசதி அளிக்கப்படுகிறது. போரில் உயிரிழந்த இராணுவ வீரர்கள், இளநிலை கமிஷண்ட் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் ஆகியோரின் பிள்ளைகளுக்கு இராணுவப் பள்ளிக் கூடங்களிலும், அரசுத்துறைப் பள்ளிக் கூடங்களிலும் உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

ஒவ்வோர் ஆண்டிலும் ஏறக்குறைய 60,000 இராணுவ வீரர்களும், மாலுமிகளும், விமானப் படை ஊழியர்களும் பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர், மருத்துவ அடிப்படையிலும், கருணை அடிப்படையிலும் ஓய்வு பெறுகின்றனர். மீதமுள்ள 45,000 பேர், முன்னாள் இராணுவ வீரர்கள் பட்டியலில் சேர்க்கப்படுகின்றனர்.

இவர்களுக்கு மறுவாழ்வு அளித்து, வேலை கிடைக்கச் செய்வது அவசியம். இராணுவ அதிகாரிகளாலும் வேறுபல இலாகா அதிகாரிகளாலும் நிர்வகிக்கப்படும் மறுவாழ்வுத் தலைமை இயக்குநர் அலுவலகம் இந்தப் பிரச்சினையை உன்னிப்பாகக் கவனித்து முன்னாள் இராணுவ வீரர்களுக்கு உதவிசெய்து வருகிறது.

**மாநிலங்கள் வழங்கும் சலுகை.**

கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களும் முன்னாள் இராணுவ வீரர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் ஏராளமாகச் சலுகைகளும், உதவிகளும் அளித்து வருகின்றன.

மாநிலங்கள் கொடுக்கும் சலுகைகளை 5 பிரிவுகளாகப் பிரிக்கலாம். (அ) முப்படை ஊழியர்களின் பிள்ளைகள் அனைவருக்கும் இலவசக் கல்வி; போரில் உயிரிழந்த முப்படை ஊழியர்களின் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியோடு உதவித் தொகையும்; (ஆ) பண உதவியும், கடனுதவியும்; (இ) நில ஒதுக்கீடு; (ஈ) வேலைவாய்ப்பில் முன்னாள் இராணுவ வீரர்களுக்குச் சலுகை; (உ) பிற உதவி நடவடிக்கைகள்.

இராணுவத் தொண்டிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் அதிகாரிகளுக்கும், ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்கும்; வேலையில் பயிற்சி கொடுப்பதற்காகத், தொழில் நிர்வாகம், ஊழியர் நிர்வாகம், தொழிலியல், பொறியியல், விவசாயம், பண்ணைத் தொழில், ஏற்றுமதி உத்தி போன்ற துறைகளில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

புகழ்பெற்ற பயிற்சி நிறுவனங்கள், சிறுதொழில் சேவைக் கழகங்கள் போன்றவை அஞ்சல் மூலம் நடத்தும் பயிற்சித் திட்டங்களில் பங்கு கொள்ளுமாறும் இராணுவ அதிகாரிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர் இத்தகைய நிறுவனங்கள், பயிற்சிக் கட்டணத்தில் இராணுவ அதிகாரிகளுக்குச் சலுகை வழங்குகின்றன. பல இராணுவ அதிகாரிகள் இந்த முறையில் பயிற்சி பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

சம்பளம், படிகள் ஆகியவற்றில் சலுகையும், கூடுதல் பென்ஷனும் இராணுவ அதிகாரிகளுக்கு இப்போது கிடைக்கிறது.

மேஜர்-ஜெனரல் நிலை வரையில் திருமணமான அதிகாரிகளுக்கும் திருமணமாகாதவர்களுக்கும் வீட்டு வாடகையில் சலுகை கொடுக்கப்படுகிறது. பதவியிலிருந்து ஓய்வு பெறும் இளநிலை கமிஷண்ட் அதிகாரிகளுக்கு கௌரவ லெப்டினன்ட், காப்டன் தகுதி கொடுக்கப்படுகிறது. இதனால் அவர்களுக்குக் கூடுதல் பென்ஷன் கிடைக்கிறது.

இராணுவ வீரர்களாயினும் சரி, அதிகாரிகளாயினும் சரி அலுவல் காரணமாகக் காசநோய் ஏற்பட்டால், அதிகபட்சம் மூன்றாண்டுகள் வரையில் பதவியில் இருக்க அனுமதிக்கப் படுகின்றனர்.

1971 ஏப்ரல் முதல் தேதியன்று அல்லது அதற்குப் பிறகு இராணுவத்தொண்டில் இருக்கும்போது மரணமடைந்த முப்படை ஊழியர்களுக்கும், இளநிலை கமிஷண்ட் அதிகாரிகளுக்கும் உதவித் தொகை வழங்குவதற்காகக் 'கருணை நிதி' ஒன்று துவக்கப்பட்டிருக்கிறது.

அண்மைக் காலத்தில், பாகிஸ்தானுடன் நடந்த போரில் நமது முப்படை வீரர்கள் வீரப்போர் புரிந்து, நாட்டு மக்களின் பாராட்டுதலைப் பெற்றனர். நாட்டுக்காக உயிர் நீத்த வீரர்களுக்காகவும், போரில் உடல் ஊனமுற்ற ஊழியர்களுக்காகவும் மாநில அரசுகளும் வர்த்தக, நிறுவனங்களும், தனிப்பட்டவர்

களும், பொருளும் பணமும் வாரிக் கொடுத்தனர். இந்தப் போரிலும், அதற்கு முன்பு நடந்த போர்களிலும் உயிர் நீத்த முப்படை ஊழியர்களுக்கு பென்ஷன் தொகையை அரசு அதிகரித்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின்படி, போரில் கொல்லப்பட்ட இராணுவ அதிகாரியின் மனைவிக்கு சிறப்புக் குடும்பப் பென்ஷன் வழங்கப்படும். போரில் மரணமடைந்த அந்த அதிகாரி கடைசியாக வாங்கிய அடிப்படைச் சம்பளத்தில் முக்கால் பகுதி பென்ஷனாக வழங்கப்படும் இந்தப் பென்ஷன் தொகை, அந்த அதிகாரி எப்போது பதவி ஓய்வு பெற்றிருப்பாரோ அதுவரையில் அல்லது ஏழாண்டுகள் வரையில் (இதில் எது பிந்தியதோ அதுவே ஏற்றுக் கொள்ளப்படும்) இந்தப் பென்ஷன் கிடைக்கும். கர்னல், அதற்கு மேற்பட்ட தகுதி உள்ள அதிகாரிகளுக்குப் பதவி ஓய்வு பெறும் வயது 55 என்றும், அதற்குக் கீழ்ப்பட்ட தகுதி உள்ள அதிகாரிகளுக்குப் பதவி ஓய்வு வயது 50 என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதன் பின்னர், குறிப்பிட்ட இராணுவ அதிகாரி சாதாரணமாகப் பதவி ஓய்வு பெற்றிருக்கும்போது எவ்வளவு பென்ஷன் வாங்கியிருப்பாரோ, அதே விகிதத்தில் சிறப்புக் குடும்பப் பென்ஷன் கிடைக்கும். பின் குறிப்பிட்ட விகிதத்தில் குடும்பப் பென்ஷன் கிடைக்கும் சமயத்தில், ஒவ்வொரு குழந்தைக்கும் மாதத்துக்கு 100 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும். சில குறிப்பிட்ட வரம்புகளுக்கு உட்பட்டு இந்த உதவி, பிள்ளைகள் 23 வயது அடையும் வரையில் வழங்கப்படும்.

முப்படைகளைச் சேர்ந்த போர் வீரர்கள், இளநிலை கமிஷண்ட் அதிகாரிகள் ஆகியோர் போரில் உயிரிழக்க நேரிட்டால் அவர்களுடைய குடும்பத்துக்கும் சிறப்புப் பென்ஷன் வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட போர் வீரர் போரில் உயிர் துறந்த சமயத்தில் எவ்வளவு சம்பளம் வாங்கினாரோ அதே தொகை அவரது குடும்பத்தில் ஓர் உறுப்பினருக்கு அவர் மரணம் அடையும் வரையும் கிடைக்கும். சாதாரண பென்ஷன் விதிகளின்படி ஒரு போர் வீரரின் விதவைக்கு 62 ரூபாய் பென்ஷன் கிடைக்கும். ஆனால் இந்தச் சிறப்புப் பென்ஷன் திட்டத்தின்படி, போர் வீரரின் மொத்தச் சம்பளமாகிய 137 ரூபாயும், ஆயுள் முழுவதும் பென்ஷனாகக் கிடைக்கும்.



நாடு காக்கும் பணி என்பது எளிதான செயலல்ல! உயிரைத் துச்சமாக மதித்துச் செய்யும் உத்தமமான பணி! நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்கள் நாட்டு மக்கள் அனைவரின் அன்பையும் ஆதரவையும் பெற்று வருகிறார்கள். பகைவரிடமிருந்து நாட்டைக் காப்பாற்றும் வீரர்களை அரசு போற்றுகிறது — அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் பல வகைகளிலும் உதவிகள் செய்து வருகிறது. மைய அரசும், மாநில அரசுகளும் இராணுவ வீரர்களை மதித்து, அவர்களது தேவைகளைப் பலவகையிலும் நிறைவேற்றி வைக்கின்றன. அவற்றில் சிலவற்றை இந்தக் கட்டுரை எடுத்துக் கூறுகிறது.

போரின்போது 20 சதவிகிதம் முதல் 50 சதவிகிதம் வரை உடல் ஊனமுற்ற போர் வீரர்களை, இயன்ற வரையில் இராணுவத் தொண்டுக்குப் பயன்படுத்திக் கொள்வதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. உடல் ஊனம் காரணமாகத் தொண்டிலிருந்து நீக்கப்படுபவர்களுக்கு உடல் ஊனப் பென்ஷனுக்குப் பதிலாகப் 'போர்க் காயச் சம்பளம்' கிடைக்கும். இதில் இராணுவப் பணிக்கான பென்ஷனும், உடல் ஊனப் பென்ஷனும் அடங்கியிருக்கின்றன.

போரில் உயிர் துறந்த வீரர்கள், உடல் ஊனமுற்ற வீரர்கள் ஆகியோரின் குடும்ப நலனுக்கேற்ற நடைமுறைத் திட்டங்கள் வகுப்பதற்காகப் பாதுகாப்பு அமைச்சகத்தில் மத்திய நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசுத் துறைகள், மாநில அரசுகள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு, கிடைக்கக் கூடிய வசதிகளைப் போர் வீரர்களின் குடும்ப நலனுக்கென்று முற்றிலும் பயன்படுத்திக் கொள்வது இந்த நிறுவனத்தின் நோக்கம்.

ஊனமுற்ற முன்னாள் போர் வீரர்கள், உடல் ஊனமுறுவதற்குக் காரணம் எதுவாக இருந்தாலும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான வாய்ப்புகள் விரிவாக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசு அலுவலகங்களில் மூன்றாவது, நான்காவது பிரிவு வேலைகளில் சேருவதற்கு முன்னுரிமை, மருத்துவ, கல்வி, வயதுத் தகுதிகளில் சலுகை போன்று பல உதவிகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன.

1965-ஆம் ஆண்டு பாகிஸ்தான் போர் முடிவுற்றவுடன், 1962-ஆம் ஆண்டு, 1965-ஆம் ஆண்டுப் போர்களில் உடல் ஊனமுற்ற போர் வீரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக மறுவாழ்வுத் தலைமை இயக்குநர் அலுவலகத்தில் தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. உடல் ஊனமுற்ற 1800 முன்னாள் போர் வீரர்களில் சுமார் 1450 பேருக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு, 'கண் துஞ்சாது கருமமே கண்ணாயிருக்கும்' கடமை வீரர்களான இராணுவ வீரர்கள் சலுகைகளும் உதவிகளும் கொடுத்துச் சிறப்பிக்கப்படுகிறார்கள்.

# ஆல்போல் தழைக்கும் ஆலந்தூர் நகராட்சி!

" அந்த இராஜா தெருவிலே இருக்கிற பூங்கா சீர்குலைந்திருக்கிறது. அதைச் சீரமைக்க வேண்டாமா ? "

" ஆமாம். அந்தப் பூங்காவின் அருகே இருக்கும் மாட்டுக் கொட்டில்களை அகற்றிப் புது மணல் பரப்பி, அழகிய செடி வகைகளை வைத்து ஓர் சிறந்த பூங்காவாக அமைக்க வேண்டும். குழந்தைகள் ஓடி ஆடி மகிழ்வதற்கேற்ற விளையாட்டுச் சாதனங்களையும் அமைக்க வேண்டும் " !

" அந்தப் புதுக் காலனியிலும், வாணுவம் பேட்டையிலும் பழுதடைந்த சாலைகளைப் பராமரிக்கும் வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டும். . . . "

" குடி நீர்ப் பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினை. அதனை ஓரளவு சமாளித்து நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டியும், குடி நீர் வடிகால் திட்டம் தீட்டியும் நிறைவேற்றி வருகிறோம். "

இந்த உரையாடல்களை எங்கே கேட்டிருக்க முடியும் ? உங்களால் ஊகிக்க முடிகிறதா ?

ஆலந்தூர் நகராட்சியின் ஆக்க பணி பற்றிய பேட்டியின்போது கேட்ட உரைகளே இவை !

சென்னைக்கு அருகே இருக்கும் ஆலந்தூர், 1964 முதல் நகராட்சியாக விளங்கி வருகிறது. இதன் பரப்பு 7·5 சதுர மைல்கள். ஆலந்தூர் நகராட்சி எல்லையில் அடங்கிய கிராமங்கள் நான்கு. அவை : (1) ஆலந்தூர், (2) ஆதம்பாக்கம், (3) நங்கநல்லூர், (4) பழவந்தாங்கல். இந்நகராட்சியின் மக்கள் தொகை 1971 கணக்கெடுப்புப்படி 65,042 பேர். இவற்றில் ஆண்கள் 34,000 பேர். பெண்கள் 31,042 பேர். இந்த நகராட்சியில் 19 வார்டுகள் இருக்கின்றன. மொத்தம் 24 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் இருவர் பெண்கள்.

நாட்டின் அரசாட்சிக்கு அடிப்படை நகராட்சி என்றால் அது மிகையல்ல. மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றி, அவர்களுக்குப் பலதுறைகளில் போதிய வசதிகளை ஏற்படுத்தித் தருவது நகராட்சியின் கடமை என்பது நமக்குத் தெரியும். அதன் பணிகள் பலப்பல.

சாலைகள் பராமரித்தல், பள்ளிகள், மருத்துவமனைகள், கடைகள் முதலியவற்றை அமைத்தல், சுகாதாரப் பாதுகாப்பு, மக்கள் பிறப்பு இறப்புக் கணக்கு வைத்தல் ஆகியவையும், பொருள் வசதிக் கேற்றாற்போல அழகிய பூங்காக்கள், விளையாடுமிடங்கள், தண்ணீர், மின்சார வசதிகள், நூலகங்கள் அமைத்தல் போன்றவையும் நகராட்சியின் முக்கியப் பணிகளாகும்.

நகரத்தின் நல்வாழ்வும், எழிலும், தூய்மையும் நகராட்சியின் கண்காணிப்பில் இருந்து வருவதை நாமறிவோம். சுருக்கமாகச் சொன்னால் மக்கள்பணியே மகத்தான பணி என்பதைச் செயல்வடிவில் உருவாக்கி வருவது நகராட்சிகளேயாகும்.

நகராட்சிக்குப் போதிய வருமானம் இருந்தால்தான் மேற்கண்ட நற்பணிகளெல்லாம் நல்ல முறையில் நிறைவேறும். இந் நகராட்சியில் அடங்கிய நான்கு கிராமங்களும் நல்ல வருவாய் தருகின்றன. சொத்து வரி, தொழில் வரி, கேளிக்கை வரி, கேளிக்கை சர்சார்ஜ், முத்திரை வரி, உரிமையாணை, கட்டட உரிமையாணை, சந்தைக் கடை, ஆடு அடிக்கும் தொட்டி போன்றவைகளால் இந்நகராட்சிக்கு ஆண்டுதோறும் ரூ. 12,36,400 வருமானம் கிடைக்கிறது. இந்த வருமானம் இந்நகரம் வளமாகத் திகழ்வதற்கு வகை செய்கிறது.

நல்ல போக்குவரத்துக்குச் சாலைபராமரிப்பு மிகமுக்கியமானதல்லவா ? ஆலந்தூர் என்.ஜி.ஓ. காலனி, ஆதம்பாக்கம் புதுக் காலனிப் பகுதிகளிலும், மீனம்பாக்கம் ரயில் நிலையத்திலிருந்து அண்ணாசாலை மடிப்பாக்கம் சாலை வரை தார்ச்சாலைகள் அமைக்கும் பணி துவக்கப்பட்டு, இப்போது முடியுந் தறுவாயில் இருக்கிறன. மேலும் பழவந்தாங்கல் புதுக் காலனிப் பகுதியிலும், பக்தவத்சலம் நகரிலும் வாணுவம் பேட்டையிலும், தில்லை கங்கா நகரிலுள்ள இடுகாட்டுச் சாலைகளுக்கும் தார்ச் சாலைகள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணி 1973-74-ல் முடிவடையும்.

ஆலந்தூர் நகராட்சி குடி நீர்த் திட்டத்திற்காக ரூ. 47·8 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்துள்ளது. இத்திட்டம் ஆதம்பாக்கம், நங்கநல்லூர், தலைக் கணஞ்சேரியின் ஒரு பகுதி, மற்றும் பழவந்தாங்கல் தலைக் கணஞ்சேரியின் மற்றொரு பகுதி ஆகிய நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இதற்கிடையில்.

மேற்படி திட்டம் விரிவு படுத்தப்பட்டு இணைப்புத் திட்ட மாக மாற்றி அமைக்கப்பட் டது.

இதன் கீழ் ஆலந்தூர் நகராட்சி, பல்லவபுரம் நகராட்சி, பரங்கிமலை கண் டோன்மென்டு, பம்மல், அனகா புத்தூர், தாம்பரம் ஐ.ஏ. எப். ஆகிய பகுதிகளுக்குச் சேர்த்து ரூ. 2,17,60,000 மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதில் ஆலந்தூர் நகராட்சிப் பகுதியின் குடிநீர்த் திட்ட மதிப்பீடும், பரங்கிமலை கன்டோன்மென்ட்குடிநீர்த்திட்ட மதிப்பீட்டில் பாதியும் சேர்த்து ஆலந்தூர் நகராட்சி குடிநீர்த் திட்ட மதிப்பீடாக ரூபாய் 1,19,02,000 எனக் குடிநீர் வடிகால் வாரிய இயக்குநரால் மாற்றி யமைக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டின் கீழ் ஆலந் தூர் நகராட்சியின் நான்கு பகுதி களில் குடிநீர்த் திட்டத்திற்கான பெரும் வேலைகள் துரிதமாக நடை பெற்றுக்கொண்டுவருகின்றன.

இந்தத் திட்டம் இணைப்புக் குடிநீர்த் திட்டமாக மாற்றிய மைக்கப்பட்டதன்கீழ்ப் பரங்கி மலை சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த ஆலந்தூர் நகராட்சி, பரங்கிமலை கண்டோன்மென்ட், பல்லவபுரம் நகராட்சி, அனகா புத்தூர் பேரூராட்சி, பம்மல் பேரூராட்சி, சிட்லபாக்கம் பேரூராட்சி ஆகிய ஊர்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தி லிருந்து கடன் தொகையைப் பெற்று, பாலாற்றின் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று உள்ளது. இது 1974—ஆம் ஆண்டிற்குள் முடிவு பெறும். இதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 217.60 லட்சம்.

ஆலந்தூர் நகராட்சி, குடி நீர்த் திட்டத்திற்காக இதுவரை அரசிடமிருந்தும், ஆயுள் காப் பீட்டுக் கழகத்திடமிருந்தும் ரூ. 41,01,900 கடனுகப் பெற் றிருக்கிறது.

அறியாமை அகன்றிட இந் நகராட்சியால் ஆறு தொடக்கப் பள்ளிகளும், இரண்டு நடுநிலைப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வரு கின்றன. மகளிர்க்கென்று தனி உயர்நிலைப்பள்ளி இல்லாத குறை யை நீக்கிட நகராட்சி நடுநிலைப் பள்ளி ஒன்றை மகளிர் உயர் நிலைப் பள்ளியாக மாற்றும் யோசனை ஒன்று இருந்துவருகிறது.

ரயில்வே நிலையத்திற்கு அருகில் உள்ள நிலத்தில் நாளங்காடி ஒன்று கட்டவும் நகர மன்றம் தீர்மானித்திருக்கிறது. மேலும் நகராட்சி எல்லையில் உள்ள தனியார் நடத்தும் காய்கறிச் சந்தைக்கடை, மீன்சந்தைக்கடை இவைகளை நகராட்சியே ஏற்று நடத்தவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாங் குளம் கரையில் தொழிற் கூடங்கள் நிறுவி வாடகைக்கு விடுவதன் மூலம் வருவாயினைப் பெருக்கவும் இந்நகராட்சி முடிவு செய்திருக்கிறது.

ஆலந்தூர் நகராட்சிப் பகுதி யில் ஒன்பது நகரமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக் கின்றன. இத்திட்டம் அரசின ரால் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது இதற்கான வரை படங்கள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் ஆலந்தூர் எழில் பூத்துக் குலுங்கும் நகராகக் காட்சி யளிக்கும்.

நகர அமைப்புத் திட்ட மென்றால் என்ன ?

நிலத்தை அளத்தல், பிரித்தல், நிலத்தின் பயனை வரையறுத்தல், தெருக்கள், சாலைகள், அமைத்தல் போக்குவரத்துச் சாதனங்களை ஏற்படுத்தல், பலவிதமான கட்ட டங்கள் கட்டுதல், அழகான வழிகளமைத்தல் முதலியன நகர அமைப்புத் திட்டத்தில் அடங்கி யுள்ளன. பொதுவாக மக்கள் எந்த இடத்தில் வாழ்ந்தாலும் அவர்கள் வசதியுடனும், நல மாகவும் வாழ்வதற்கு ஏற்ற கிராமங்களையும் நகரங்களையும் ஒழுங்கான முறைகளில் அமைத்துத் தருவதே நகர அமைப்புத் திட்டத்தின் அடிப் படையான நோக்கமாகும்.

நோயற்ற வாழ்வு வாழ் வதற்கும் இங்கே மருத்துவ வசதி கள் செய்து கொடுக்கப்பட் டுள்ளன. இங்குள்ள மருந்தகம் சிறப்பாக இயங்கி வருகிறது. நாள்தோறும் சுமார் 250 பேர் இங்குச் சிகிச்சைப் பெற்றுச் செல் கின்றனர். இந்த மருந்தகத்துக் காக நகராட்சி ஆண்டுதோறும் ரூ. 20,000 செலவு செய்கிறது.

ஆலந்தூர் நகராட்சியில் மூன்று மகப்பேறு இல்லங்கள் இருக்கின்றன. மேலும், ஓர் இல்லம் கட்டவும் அரசு அனு மதி வழங்கியுள்ளது. 1971 முதல் நகரக் குடும்பநல நிலையம் ஒன்று சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. 1971—72-ல் 105 ஆண்டுகளுக்குக் குடும்பநல அறு வைச் சிகிச்சையும், 83 பெண்

# முனிசிபாலிடி என்றால் என்ன?

'நகராட்சி' என்பதை ஆங்கிலத்தில் முனிசிபாலிடி என்று சொல்கிறோம்.

முனிசிபாலிடி என்னும் ஆங்கிலச் சொல் 'முனிசி பியம்' என்னும் லத்தீன் சொல்லிலிருந்து வந்தது. அச்சொல் ரோமாபுரிக்கும் அதற்கடங்கிய சிற்றூர்களுக்கும் இடையே இருந்த ஆட்சியைக் குறிக்கும்.

நகராட்சி என்பது ஆரம்பத் தில் இராணுவ அல்லது வாணி கச் சிறப்பு வாய்ந்த தல ஆட்சியையே குறித்தது. தற் காலத்தில் சுய ஆட்சி நிலையை அடைந்த எந்த நகராட்சியை யும் இது குறிக்கும்.

சாலைபோடுதல், குடிதண்ணீர் வசதி செய்தல் போன்றவை தான் நகராட்சியின் பணிகள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனல், இங்கிலாந்திலுள்ள மான்செஸ்டர், பர்மிங்காம் என்னும் நகரங்களும், அமெரிக்கஐக்கியநாடுகளிலுள்ள சிக்காகோ, ஹார்வர்டு முதலிய நகரங்களும் தாமே பல்கலைக் கழகங்களையும் நிறுவியுள்ளன.



களுக்கான அறுவைச் சிகிச்சையும், 9 பெண்களுக்கு லூப் பொருத்துதலும், 7,998 ஆண்களுக்குத் தடைச் சாதனங்களும் வழங்கிக் குடும்பநலத் திட்டத்தில் அக்கறையும் ஆர்வமும் காட்டி வருகிறது.

துப்புரவு நிருவாகமும் சீராக இயங்கி வருகிறது. இந்த நிருவாகத்தின் கீழ் துப்புரவு ஆய்வாளர்கள் உட்பட 130 தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். குப்பைக் கூளங்களை அகற்றிட ஒரு டிராக்டரும், ஒரு லாரியும், 24 வண்டிகளும் உள்ளன. மேலும், ஒரு லாரி, டிராக்டர், டிரெய்லர் வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. கொசு ஒழிப்புத் திட்டத்தின் கீழ் ஒரு துப்புரவு ஆய்வாளரும், இரண்டு கள உதவியாளரும், புத்து மருந்து தெளிப்பவர்களும் பணியாற்றுகின்றனர். இத்திட்டத்திற்கு அரசு, ரூ. 15,000 ஆண்டுதோறும் தந்துதவுகிறது.

பிறப்பு, இறப்புகள் பதிவு செய்தல், அம்மை குத்துதல், போன்ற வேலைகள் செவ்வனே நடக்க இரண்டு சுகாதார உதவியாளர்கள் பணியாற்றுகின்றனர். இந்த நகராட்சி ஆண்டுதோறும் 3,500 மெட்ரிக் டன் உரம் தயாரித்து உழவர்களுக்கு வழங்கி வருவதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

நகராட்சியின் சார்பில் ஒரு ஆடு அடிக்கும் தொட்டியும், ஒரு கடையும் நடந்து வருகிறது. இவை தவிர, 25 பெட்டிக் கடைகளும் இருக்கின்றன. இவை ஆண்டுதோறும் ஏலம் விடப்படுவதன் மூலம் நகராட்சிக்கு ரூ. 8,000 வருமானம் கிடைக்கிறது.

இப்படியெல்லாம் சமுதாயம் செழிக்கவும் வளம் கொழிக்கவும், நகரம் எழிலும் ஏற்றமும் பெறவும் பல்வேறு திட்டங்களைத் தீட்டிப் படிப்படியாக அவற்றை நிறைவேற்றி மக்கள் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் ஆலந்தூர் நகராட்சிக்கென ஒரு சொந்தக் கட்டடம் உண்டா ? இல்லையே ! இக்குறையைக் களைந்திட ரூ. 5 இலட்சம் செலவில் ஒரு கட்டடத்தைக் கட்டும் பணியில் நகராட்சி தீவிரமாக முனைந்துள்ளது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும் !

ஆலமரம் தன்னை நாடி வரும் பறவைகளுக்கும், ஏன் பரிவாரங்களுக்குங்கூட ஆதரவளிக்கிறது. அந்த வகையில் மக்களின் தேவைகளை நிறைவேற்றி ஆல்போல் தழைத்து வருகிறது ஆலந்தூர் நகராட்சி !

—பி.வி.ஜி.



# பார்த்தோம்! படித்தோம்!

கோழி வளர்க்கும் முறை—கூடன் உதவி பெறும் வகை—கோழிகளை நோய்ப் பிடியிலிருந்து காப்பாற்றும் முறை—ஆகியவற்றை எளிய தமிழில் விளக்கிவிட்டீர்களே! வாழ்க உங்கள் விளக்கம்.

தஞ்சை-1.

**கே. சாமிநாதன்**

'எளியவர்களின் சத்துணவு' என்ற தலைப்பைப் பார்த்தவுடன் ஏதோ மிகப் பெரிய செய்தி ஒன்றை வெளியிடப் போகிறீர்கள் என்று நினைத்தேன்! ஏமாற்றம் அடைந்தேன், தவிட்டுக்குத்தான் இவ்வளவு தடபுடல் செய்திருக்கிறீர்கள் என்பது கட்டுரையைப் படித்த பிறகுதான் புரிந்தது!

**சுப. இலங்குவன்**

காரைக்குடி.

புலவர் பொன்னிவளவனின் 'நாக்கு' சுவையாக இருக்கிறது. பலமுறை படித்தேன்; அருவி ஓட்டம் போன்ற அறுசீர் நடை; ஆழமான கருத்து; உருவகம்; எல்லாச் சுவையையும் உணரக்கூடியது நாக்கு! அதனால்தானோ என்னவோ எல்லாச் சுவைகளையும் 'நாக்கு'க் கவிதையில் வடித்துக் கொடுத்திருக்கிறார் புலவர்!

**புலவர் இளையோன்**



மதுரை-1.

கோவை மாநகருக்குள்ள பெருமையைத் தெரிவிப்பதற்கு நானூறு பாடல் கொண்ட ஒரு கோவையே பாடலாம் போலிருக்கிறது! உலகப் புகழ்பெற்ற பயிர்களை உருவாக்கி வரும் கோவை, நமது தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித் தருவது உண்மை!

திருப்பூர்.

**எஸ். ஆர். பழனிச்சாமி**

நக்கீரர் கழகத்தின் சுருக்கமான பட்ப்பிடிப்பு—'நாளும் தமிழ் வளர்க்கும் நக்கீரர் கழகம்' என்ற கட்டுரை.

எங்கும், எதிலும் தமிழ் என்ற எண்ணத்துடன், கைம்மாறு கருதாமல் தமிழ்த் தொண்டு புரியும் ஒரு சில நல்லோரால்தான் அன்னைத் தமிழ் நெடிது வாழ்கிறாள் என்பதை எடுத்துரைக்கிறது கட்டுரை!

**பொன். திருமாவளவன்**

நெல்லை.

தமிழகத்தின் வளர்ச்சி வேகத்திற்குப் பெருந்தொழில்கள் பங்கேற்கின்றன என்ற செய்தியை ஆணித்தரமாக – அதே நேரத்தில் – ஆய்வு முறையில் வெளியிட்டிருக்கிறீர்கள். தொழில் வளர்ச்சிக்கு ஏற்றம் தரும் வகையில் வெளியிடப்பட்டுள்ள இந்தக் கட்டுரை, தொழில் நிறுவனத்தார்களுக்குச் சிறப்புச் செய்ததுபோல் அமைந்திருக்கிறது. நன்றி.

கோவை-1.

**எஸ். ஆர். சந்திரன்**

'உலகில் இரண்டு கிளிகள்' தொடர்கதை ஒவ்வொரு இதழிலும் புதிய திருப்பங்களுடன் சுவை குறையாமல் தெளிந்த நீரோடை போலச் செல்கின்றது.

**மா. நடராசன்.**

குமராட்சி.

'இந்தியாவிலேயே மிகப் பெரிய பரிசோதனைத் திட்டம்' என்ற கட்டுரையைப் படித்தேன். பயங்கரமான நோயான புற்றுநோய் பற்றிய கட்டுரையைப் படிப்பதற்கு முதலில் பயந்தேன்; என்றாலும், கட்டுரையின் நடை என்னைப் படிக்கத் தூண்டியது. ஒரே மூச்சில் படித்து முடித்தேன். புற்றுநோயைப் பற்றிய பல செய்திகளைத் தெரிந்துகொண்டேன். காஞ்சியில் உருவாகியுள்ள அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம்—ஆசியாவிலேயே குறிப்பிடத்தக்க ஒன்றாக மலர்ந்திருப்பது செங்கை மாவட்டத்துக்குப் பெருமை தரும் செய்தி என்று உணர்கிறேன்.

திருவள்ளூர்.

**எல். வீரராகவன்**





அழகுக்காக மட்டுமே பயிரிடப்பட்டு வந்த சூரியகாந்தி, தற்பொழுது எண்ணெய் வித்தாகப் பயன்பட்டு வருவதையும், அது வெளிநாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யப்படும் விவரத்தையும், அதன் பயன்களையும் விரிவான கட்டுரையாக்கித் தந்திருப்பது பாராட்டுக்குரியது. புள்ளி விவரங்களை அள்ளித் தந்திருப்பதுடன், படிக்கக்கூடிய நடையில் அமைத்திருப்பதற்கு மீண்டுமொரு பாராட்டுக் கூறுகிறோம்.

**ஆர். பாலசுப்பிரமணியன்.**



சாத்தூர்

அண்மையில் நடைபெற்ற இராமநாதபுர மாவட்ட கெசட்டியர் வெளியீடு பற்றிய கட்டுரை, அண்மைக்கால வரலாற்றைக் கூறுவதுடன், கெசட்டியர் என்றால் என்ன, அது எவ்வாறு உருவாகியது என்ற தகவல்களையும் எடுத்துத் தந்து பயனுள்ள வரலாற்றுக் கட்டுரையாக மாறியுள்ளது!

சென்னை 7.

**எஸ். சரவணன்**

வேளாண்மைத் துறையில் தமிழ்நாட்டின் முன்னேற்றம் மிகுந்திருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கும் வேளாண்மைத்துறை அமைச்சரின் சட்டமன்றப் பதிலுரை, சாசன உரைபோல் அமைந்திருக்கிறது. இதனை வெளியிட்டுள்ள 'தமிழரசு' இதழுக்கு எங்கள் பாராட்டுகள் உரித்தாகுக.

**எம். கல்யாணசுந்தரம்**

திருச்சி.

# புதிய தலைமுறை உருவாகிறது!



அன்று —

அநாகரிகப் பழக்க வழக்கங்-களுக்கு ஆட்பட்டவர்களாக-தங்கள் வாழ்க்கை இப்படிப் பட்டது என்பதை வரையறுத்துக் கொண்டு—அதனுள் அடைபட்டு மீள முடியாதவர்களாக—

ஊசியும், மணியும் விற்று ஊர் சுற்றி வாழ்ந்தவர்கள்.

''நரிக்கொம்பு வாங்கலியோ சாமி.... நரிப்பல்லு இருக்கு.. நல்ல நல்ல மணி இருக்கு வாங்கலியோ சாமி'' என்று ஆடிப்பாடி வாழ்க்கை நடத்தியவர்கள்.

நரித் தோல் பையைத் தோளில் தொங்கப் போட்டுக் கொண்டு—வித்தை செய்யும் குரங்கையும் இழுத்துக் கொண்டு—அதைக் குட்டிக் கரணம் போடச் சொல்லி—காவடி தூக்கச் சொல்லிக் காசு சம்பாதித்தவர்கள்.

கழுத்து நிறைய வண்ண வண்ண மணிகளைத் தொங்கப் போட்டுக் கொண்டும்—ஒங்காரக் கூச்சலிட்டே பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் மகிழ்வோடு பேசிக் கொண்டிருப்பதற்கும், சண்டையிட்டுப் பேசிக் கொண்டிருப்பதற்கும் வித்தியாசம் தெரியாது.

கல்யாண வீட்டின் வெளியே விழும் இலைகளுக்குக் காத்திருக்கும் பிராணிகட்கும் இவர்களுக்கும் போட்டி.

எவ்வளவு உயரத்தில் உட்கார்ந்திருக்கும் குருவியானாலும் குறி பார்த்து அடிப்பவர்கள் என்றாலும்,

—அவர்கள் வாழ்க்கையில் குறிக்கோளில்லாமல்—மனித சமுதாயத்தில் தாங்களும் ஓர் அங்கம் என்பதை மறந்தவர்களாக வாழ்ந்தவர்கள் அந்தக் குறவர்கள். ஆனால், இன்று மாறி வருகிறார்கள் — மாற்றப் பட்டு வருகிறார்கள்.

வளர்ந்து வரும் சென்னை நாகரிகம்—சுலபத் தவணை முறைகளினாலும், விற்பனை நிறுவனங்களுக்கு இதுவும் ஒரு விளம்பரம் என்பதாலும், டிரான்சிஸ்டரும் கையுமாகச் சென்னை நகரில் பல பாகங்களிலும் நரிக்குறவர்கள் சுற்றி வருவதைப் பார்க்கலாம்.




இதனால் இவர்கள் முன்னேறி விட்டார்களா? தமிழ்நாடு அரசு செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரக்காடு என்ற ஊரில் நரிக்குறவர் குடும்பங்களுக்கு வீடு, நிலம், முதலியவைகளைக் கொடுத்துப் புதிய வாழ்வுக்கு அறிமுகப் படுத்தியது.

அன்று கழுத்தில் பல வண்ண மணிகளோடு காட்சியளித்தவர்கள், இன்று விவசாயிகளாகவும் காட்சி அளிக்கிறார்கள்.

**அட்டை சொல்லும் கட்டுரை**

நாளை எப்படி இருப்பார்கள்?

இதைத் தெரிந்துக் கொள்ள வேண்டுமா? வாருங்கள் போகலாம், சென்னை சைதாப் பேட்டையிலுள்ள திருவள்ளுவர் குருகுலப் பாடசாலைக்கு.

திரு. இரகுபதியின் முயற்சியால் உருவாகியுள்ள இந்தப் பள்ளிக் கூடத்தில் புதிய தலைமுறை, சமுதாயத்தில் அழுந்தித் தலைகுப்புறக் கிடந்தவர்களின் சந்ததியினர் புதுவாழ்வு பெறும் புனித ஆலயமாகத் திகழ்கிறது.

நரிக்குறவர்கள் குழந்தைகள் படிப்பதற்காக இந்தப் பள்ளிக் கூடத்தை அமைத்த காரணத்தைச் சொன்னார் இரகுபதி.

வீர சைவ முதலியார் வகுப்பைச் சேர்ந்த இரகுபதிக்குச் சொந்த ஊர் ஆண்டார் குப்பம். நாடோடி வாழ்க்கை நடத்தும் பழங்குடி மக்கள் மீது இயல்பாகவே ஆர்வ மிகுந்த இரகுபதிக்கு, நரிக்குறவர்களுக்காகப் பாடுபட வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டி விட்டது ஒரு நிகழ்ச்சி.

நரிக் குறவர்களிடம் பலவிதமான பழக்க வழக்கங்கள் உண்டு. அந்தப் பழக்கங்களில் ஒன்றுதான் கருவுற்ற பெண்ணுக்குப் பக்கத்தில் இருக்கக் கூடாது என்பது. பேறுகாலம் வந்து விட்டால் அந்தப் பெண்ணுக்குப் பக்கத்தில் இருக்க மாட்டார்களாம். பக்கத்து ஊருக்குப் போய் பூசை போடுவார்களாம். குழந்தை பிறந்தவுடன் அதைக் கணவன் பார்க்கக் கூடாதாம். மூன்று மாதம் கழித்துத்தான், மனைவி கணவனைத் தேடிக் கொண்டு போய்ப் பார்க்க வேண்டுமாம். இந்த நிலைக்கு ஆளான நரிக்குறவப் பெண்ணொருத்தி பிரசவ வேதனையில் இரகுபதி வீட்டுக்குப் பக்கத்திலே உள்ள பள்ளிக்கூடத்துக்கு



திருவள்ளுவர் குருகுலப் பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர்களும் ஆசிரியைகளும்

வெளியே துடிதுடித்துக் கொண்டிருந்தாள். இதைக் கண்ணுற்ற இரகுபதி தம் வீட்டில் உள்ளவர்களையும், மற்றவர்களையும் உதவச் சொன்னார். ஆனால், அவர்களோ அருவருப்புடன் உதவினார்கள்.

இதுபோன்ற பல மூடப் பழக்க வழக்கங்களை விடாப்பிடியாகக் கொண்ட நரிக்குறவர்களைச் சீர்திருத்த, அடிப்படையான பணிகளை மேற்கொள்ள இரகுபதி விரும்பினார். எடுத்துக் காட்டாக இருக்க விரும்பினார். ஆகவே, நரிகுறவப் பெண்ணை மணந்து கொள்வதென்று முடிவு செய்தார்.

வீட்டிலுள்ளவர்கள் இரகுபதிக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று முடிவு கட்டி விட்டார்கள். நரிக்குறவர்களோ இரகுபதிக்குப் பெண் கொடுக்கப் பயந்தார்கள். 'சம்சாரிக்குப் பெண் கொடுத்தால் எங்கள் சாதியை விட்டு ஒதுக்கி வைத்து விடுவார்கள்' என்று காரணம் சொன்னார்கள்.

இந்த நிலையில், மதுரையில் எடுத்து வளர்க்கப்பட்ட நரிக்குறவ வகுப்பைச் சேர்ந்த ஞானசுந்தரியை இவர் மணந்தார். ஞானசுந்தரி பத்தாவது வகுப்பு வரை படித்திருக்கின்றார். இருவரும் சேர்ந்து கடன் வாங்கியும், நகைகளை அடகு வைத்தும், சைதாப்பேட்டையில் பள்ளி அமைக்க இடம் பிடித்தார்கள்.

திருவள்ளுவர் குருகுலப் பாடசாலையை இரகுபதி தொடங்கினார். பல்வேறு இடர்ப்பாடுகளுக்கிடையே இந்தப் பள்ளியை நடத்தி வந்தார்.

இன்று இப்பள்ளியில் 120 சிறுவர் சிறுமியர் கல்வி கற்கின்றனர். நரிக்குறவர், குடுகுடுப்பைக்காரர், பூம்பூம் மாட்டுக்காரர், மணி ஆட்டக்காரர், லண்டர் பைராகி, இருளர் போன்ற பழங்குடி மக்களின் குழந்தைகளுடன் தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்களும் இந்தப் பள்ளிக் கூடத்தில் பயில்கின்றனர்.

இந்தியாவில் வேறு எங்கும் நரிக்குறவர்களுக்கென்று இப்படி ஒரு பள்ளியோ விடுதியோ கிடையாது.

நரிக்குறவரின் குழந்தைகளை இந்தப் பள்ளியில் முதலில் சேர்ப்பதற்கு இரகுபதி மிகுந்த துன்பப்பட்டார்.. குழந்தைகளைக் கொண்டு வந்து விடுபவர்கள், குழந்தைகளுக்கு, 'கிராப்' வெட்ட அனுமதிப்பதில்லை. அவ்வளவு மூடப்பழக்க வழக்கங்கள் உண்டு. துவக்கக் காலத்தில் 'சாமி கும்பிடுகிறோம்' என்று சொல்லிக் குழந்தைகளை அழைத்துச் செல்பவர்களும் குழந்தைகளைத் திரும்பக் கொண்டு வந்து விடுவதில்லை. அவர்களைத் தேடிச் சென்று குழந்தைகளை அழைத்து வருவார் இரகுபதி.

இந்தப் பள்ளி உருவாவதற்கு முன்பே உருவாகிய ஆதிவாசிகள் சங்கம் என்ற அமைப்புக்கு இப்பொழுது தலைவராக உள்ளவர் திரு. நீலநாராயணன், எம்.எல்.சி. அவர்கள். அகில இந்தியாவிலே அமைப்பு ரீதியாக ஆதிவாசிகள் நலனுக்காகச் சங்கம் அமைத்துச் செயல்பட்டு வருவது தமிழகத்தில்தான். அவர்களுடைய அரிய முயற்சியால் சென்னை மாவட்டச் சீரணியினர், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் ஐம்பதாவது பிறந்தநாள் பரிசாக நரிக்குறவர் மாணவர்களுக்கொரு விடுதியைக் கட்டிக் கொடுத்துள்ளார்கள். இந்தக் கட்டடம் நரிக்குறவர் வகுப்பு, மற்றும் ஆதி வாசிகள் வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக உள்ளது.

நரிக்குறவர் மாணவர்களுக்கான இந்த விடுதியைக் கடந்த 5-6-73 அன்று கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்தப் பள்ளியிலே பயிலும் மாணவர்களைப் பார்த்தால் யாரும் நரிக்குறவர்கள் வகுப்பு மாணவர்கள், குடுகுடுப்பைக்காரர் வகுப்பு மாணவர்கள் என்று சொல்ல முடியாது. பெயர்களைப் பாருங்கள்.

சீதாராம் தாஸ்

இந்திரா

பத்மினி

சுந்தரி

ஜெய்சங்கர்

மோதிலால் என்று நீள்கிறது.

இவர்களுக்குத் தலைமை ஆசிரியையாகவுள்ள நாகரத்தினம்மாள், பி.எஸ்சி., பி.டி. படித்தவர்கள்; நடைமுறைச் சிக்கல்களால் அரசினரின் அங்கீகாரத்துக்கு உட்படாததால் ஊதியமில்லாமல் தொண்டுபுரிந்து வருகிறார் : அவர் சொல்லுகிறார்:—

'' நரிக்குறவர் குழந்தைகள் நன்றாகப் படிக்கிறார்கள் —மற்றவர்களுக்கு எந்த வகையிலும் குறைந்தவர்கள் அல்லர்—எதையும் எளிதில் புரிந்துகொள்ளும் இந்தக் குழந்தைகள் அறிவாற்றல்

மிகுந்தவர்களாக உள்ளனர். பாசம் மிகுந்தவர்களாக உள்ளனர்—மரியாதை மிகுந்தவர்கள்.''

இரகுபதி-ஞானசுந்தரி தம்பதிகள் நரிக்குறவர் சமுதாயத்துக்கு தொண்டு புரியவே பிறந்தவர்களாகப் பணியாற்றி வருகிறார்கள்.

இன்னொரு ஆசிரியர் பெயர் பழனி. குடுகுடுப்பைக்காரர் வகுப்பில் முதன் முதலாகப் படித்து ஆசிரியர் தகுதி பெற்றவர். கடன் வாங்கியே 'செகண்டரி கிரேடு' ஆசிரியர் பயிற்சி முடித்து இப்பள்ளியில் தொண்டாற்றி வருகிறார்.

சமுதாய மறுமலர்ச்சிக்காக அரும்பாடு பட்டுவரும் இவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இந்தப் பள்ளியின் வளர்ச்சிக்காக இவர்களுக்குப் பல்வேறு துறையைச் சேர்ந்தவர்களும், உதவி செய்து வருகின்றார்கள். டாக்டர் ஒருவர் இந்தக் குழந்தைகளை அடிக்கடிப் பரிசோதனை செய்து வருகிறார். இப்படித் தங்களால் இயன்ற வகையில் பலரும் உதவி அளிக்கின்றனர்.

கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் பிறந்த நாள் விழாவின் போது அளிக்கப்பட்ட சிலேட் புத்தகங்களை இந்தப் பள்ளிக்கு அன்பளிப்பாக அளித்துள்ளார்.

35 நரிக்குறவர் குழந்தைகளுக்குப்பெட்டி வாங்கிக்கொடுத்ததுடன் எஸ்.வி. பிரிண்டர்சை சேர்ந்த ஆனந்த விசுவநாதம் மாதந்தோறும் இந்த விடுதிக்காக நூறு ரூபாய் அன்பளிப்பாக அளித்து வருகிறார். இது போன்று திருமதி அம்புஜம் வெங்கட்ராமன் மாதம் 50 ரூபாயும், விசுவ ஹிந்த் பரிசத் மாதம் 50 ரூபாயும், தொழிலாளி அர்ச்சுனன் மாதம் 25 ரூபாயும் அளித்து வருகிறார்கள்.

நல்ல உள்ளத்தோடு இது போன்று அளிக்கும் உதவிகள் ஞாலத்தினும் மாணப் பெரிதல்லவா ?

அன்ன சத்திரங்கள் ஆயிரம் கட்டுவதைவிட, புண்ணியம் கோடியாக அமைந்த திருவள்ளுவர் குருகுலப்பாடசாலையின் பணியினைப் பார்த்தவர் அனைவரும் பாராட்டுகின்றனர்.

பள்ளியில் பயிலும் குழந்தைகளைக் கண்டவுடன் புதிய தலைமுறையை எவ்வளவு அழகாக-அறிவார்ந்த மக்களாக உருவாக்கி வருகிறார்கள் என்பது நன்கு விளங்குகிறது.

''இந்தப் பள்ளியில் பயின்று வரும் நரிக்குறவர் குழந்தைகளின் பழக்க வழக்கங்கள் எப்படி இருக்கின்றன ?'' என்று கேட்கிறோம்.

பெற்றோர்கள் விரும்பி அழைத்தாலும் இந்தக் குழந்தைகள் செல்லுவதில்லை. சென்றாலும் ஓரிரு நாட்களுக்கு மேல் அவர்களுடன் தங்குவதில்லை.

இதைவிட ஆச்சரியமான செய்தி ஒன்றையும் தெரிவித்தார்கள். ''இங்குப் படிக்கும், **நரிக்குறவர்கள் குழந்தைகள் மற்றுமுள்ள ஆதிவாசிகள் குழந்தைகள் அனைத்தும் சைவம். இவர்கள் அசைவ உணவு உண்பதில்லை.''**

நமக்கு வியப்புத் தாங்கவில்லை.

ஒவ்வொரு குழந்தைகளாக விசாரிக்கிறோம். உண்மைதான் என்கிறார்கள்.

சீரணி அமைத்த நரிக்குறவர் மாணவர் விடுதிக் கட்டடத் திறப்பு விழாவுக்காக வந்திருந்த நரிக்குறவர் குழந்தைகளின் பெற்றோரிடம் கேட்டோம். அவர்களும் உண்மைதான் என்றார்கள். குழந்தைகள் வீட்டுக்கு வந்தால் நாங்கள் டீக்கடைகளில் உணவு வாங்கிக் கொடுக்கிறோம் என்கிறார்கள்.

சிலரைப் பேட்டி காண்கிறோம். அவர்கள் சொன்ன தகவல்களில் சில :

முதலில் வரதையா சிங் என்ற நரிக்குறவர் ; இவர் மனைவியின் பெயர் பத்மினி. ஓரக்காட்டில் அரசு கட்டிக் கொடுத்த நரிக்குறவர் குடியிருப்பில் வசிக்கின்றவர். தமது நான்கு குழந்தைகளில்மூன்று குழந்தைகள் இங்குப் படிக்கின்றன என்று பெருமையோடு சொல்கின்றார்.

''குழந்தைகள் நல்லபடியாக வளரணும்னு நினைச்சேன் ; நாங்கள்தான் ஊர் சுற்றித் திரிகிறோம். எங்கள் குழந்தைகளாவது உருப்படியா . . . சமுதாயத்திலுள்ள மற்றவங்களுக்கு இணையா வாழணும்னு நினைச்சது நடக்குதுங்க. இதுக்காக எங்க பிள்ளைகள் தங்கிப் படிக்கச் சீரணிக்காரங்க விடுதி கட்டிக் கொடுத்தது ரொம்ப நல்லதுங்க . . . நாங்க ரொம்ப நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்ங்க . . .'' வரதையா சிங்! அவர்களுக்கே உரிய முறையில் பேசுகிறார்.

இன்னொரு நரிக்குறவர் எளாவூர் சிங் ; இவர் மனைவி பெயர் டிம்மி. இவர்களுடைய மூன்று குழந்தைகள் இங்கே படிக்கின்றனர்.

குரங்கை வைத்து ஆட்டிப் பிழைக்கும் நரிக்குறவர்





குடு குடுப்பைக்கார வகுப்பைச் சார்ந்த கண்ணுராவ்—முனியம்மாள் தம்பதிகள்

பாசி மணிகளைத் கழுத்தில் அணியாமலிருந்தாலும், பாசி மணி வியாபாரத்தை இவர் விடவில்லை. இங்கே வியாபாரம் செய்வதை விட ஒரிசாவிலே போய்ப் பாசிமணி வியாபாரம் செய்வதுதான் இலாபம் என்று சொல்கிறார். ஒரிசா மொழியும் பேசும் இவர் —

‘ சீரணியினர் நரிக்குறவர் மாணவர்களுக்கு விடுதி கட்டிக் கொடுத்தற்காக மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் ’ என்கிறார்.

நெல்லூர் சிங்— சின்னக்கா தம்பதிகளும் சீரணியின் பணிகளைப் பாராட்டுகின்றனர். பெரிய பாளையத்தான் என்ற நரிக்குறவரும் பாராட்டுகிறார். மொத்தத்தில் அங்குக் கூடியிருந்த எல்லா நரிக்குறவர்களும் தங்கள் மகிழ்ச்சிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

கண்ணுராவ் - முனியம்மாள் என்ற குடுகுடுப்பைக்காரர் தம்பதிகள் சொன்னார்கள்—

“ எங்கள் தொழிலுக்கு மதிப்பில்லை. நாமெல்லாம் படிக்கா விட்டாலும் நமது குழந்தைகளாவது நன்றாகப் படிக்க வேணும்னு நினைக்கிறோம். ”

“ ஊருக்கு எல்லாம் நல்ல காலம் வரும்னு சொல்லிக் கொண்டு வாழுகிற எங்களுக்கு இப்பதான் நல்ல காலம் வந்திருக்கு, அரசாங்கமும் உதவி செய்யுது ; எங்கள் பிள்ளைகள் தங்கிப் படிக்க வசதி செஞ்சு கொடுத்ததுக்கு நாங்க ரொம்ப நன்றியுடையவர்களாக இருப்போம். எங்களை இன்னும் முன்னேற்றி வைப்பாங்க என்ற நம்பிக்கையும் இருக்கு . . . எங்கள் வயசுள்ளவங்க யாருமே பள்ளிக்கூடம் போனதில்லை”

“ சொந்த ஊர் எது ? ”

“ திருக்கழுக்குன்றம் பக்கத்திலே உள்ள இடையூர் ”.

கண்ணுராவின் அண்ணன் மகன்தான் பழனி. இவர் திருவள்ளுவர் குருகுலப் பாடசாலையில் ஆசிரியராக இருக்கிறார்.

குடுகுடுப்பைக்காரர் சமுதாயத்தைச் சேர்ந்த எம். சுப்பிரமணியம் என்ற இளைஞர் பி.காம். படித்து வருகிறார். அவரும் சீரணி கட்டியுள்ள நரிக்குறவர் மாணவர் இல்ல விடுதித் திறப்பு விழாவுக்கு வந்திருந்தார்.

தங்கள் வகுப்பினர், சமுதாயத்தில் புதிய இடத்தைப்பெறும் இந்த முயற்சிகளுக்காக அனைவரும் பெருமைப்படுகின்றனர்.

நேற்று-அநாகரிமாகக் கருதப்பட்டு ஒதுக்கப்பட்டவர்கள் இன்று — சமுதாயத்தின் ஓர் அங்கமாகத் தங்களை உருவாக்கிக் கொள்ள முன்வந்திருக்கின்றனர்.

நாளை—சமதர்மச் சமுதாயத்தில் எல்லாருக்கும் இணையாக வாழ்வார்கள்.

சென்னை மாவட்டச் சீரணியினர் 25,000 ரூபாய் செலவில் கட்டிக் கொடுத்துள்ள மாணவர் இல்லம்—

அவர்களுடைய வருங்காலத் தலைமுறையின், நல்வாழ்வுக்கு உறுதுணையாக அமைந்துள்ளது.

இதுபோன்ற பணிகள் நாளும் வளரும்.

வளர வேண்டும் இந்தத் தொண்டில் ஈடுபட்டுள்ள புனித உள்ளங்களை வணங்குவோம் !

வருங்காலச் சமுதாய அமைப்புக்கு அடித்தளத்திலிருந்து அரும்பணியாற்றும் அனைவரும் நன்றிக் குரியவர்கள்! நாட்டின் பாராட்டுக்குரியவர்கள்.

—மாமூலன்

# நிலக்கடலையும் சூரியகாந்தியும்

நிலக்கடலைச் சாகுபடி செய்ய நிலத்தை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். அப்பொழுது தான் களைகள் தோன்றாதிருக்கும். களைகள் தோன்றாதிருந்தால் தான் நிலக்கடலையில் நல்ல மகசூல் எடுக்க முடியும். ஆனால், சூரியகாந்தி ஓரளவுக்குக் களைகளைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது.

நிலக்கடலைச் சாகுபடியில் விதை முளைத்தல், கொடி வளருதல், விழுது இறங்குதல், நிலக்கடலை உருவாகுதல் ஆகிய 4 சமயங்களிலும் நிலத்தில் தகுந்த ஈரம் இருக்க வேண்டும். ஆனால் சூரியகாந்திச் சாகுபடியில் விதைக்கும் பொழுது நல்ல ஈரம் இருந்தாலே போதுமானது.

நிலக்கடலை இளகிய மிருதுவான மண்ணில் நல்ல மகசூல் தருகிறது. கெட்டியான மண்ணில் நிலக்கடலை நல்ல மகசூல் தராது. ஆனால், சூரியகாந்தி இளகிய மிருதுவான மண்ணில் நன்கு மகசூல் அளிப்பதுடன் கெட்டியான மண்ணில் மேலும் அதிக மகசூல் அளிக்கிறது. எனவே, நிலக்கடலைச் சாகுபடிக்கு ஏற்றதல்லாத கெட்டியான மண்ணும் சூரிய காந்திக்கு ஏற்றது என்பது தெளிவாகிறது.

நிலக்கடலைச் சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூபாய் 125 மதிப்புள்ள 50 முதல் 55 கிலோ வரை நிலக்கடலை விதைப் பருப்புகள் தேவைப்படுகின்றன. ஆனால், சூரியகாந்திச் சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூபாய் 6 மதிப்புள்ள 4 கிலோ விதையே போதுமானது. எனவே, சூரியகாந்திச் சாகுபடிக்கு அதிகச் செலவு இல்லை என்பது புலனாகிறது.

சூரியகாந்தி, நிலக்கடலையை விட மிகவும் குறுகிய கால வயதுடையது. சூரியகாந்திக்கு நிலக்கடலைக்குச் செய்வது போன்ற தீவிரச் சாகுபடி முறைகள் தேவையில்லை. பயிருணவு அளிப்பதைப் பொறுத்த மட்டில் சூரிய காந்திக்கு மிகுந்த கவனம் தேவைப்படுகிறது. சூரிய காந்திக்கு நிலக்கடலையைவிட அதிக அளவில் இரசாயன உரமிட வேண்டும். விதைகளுக்கு ஆகும் செலவும், அறுவடை செய்வதற்கு ஆகும் செலவும் சூரிய காந்திச் சாகுபடியைப் பொருத்த மட்டில் மிகமிகக் குறைவே. ஆகையால், சூரியகாந்திக்கு அதிக அளவு இரசாயன உரமிடுவதால் ஏற்படும் அதிகச் செலவை ஈடு கட்டிவிட முடிகிறது.

நிலக்கடலைச் சாகுபடியில் தகுந்த கவனம் செலுத்த வேண்டும். நிலக்கடலைச் சாகுபடியில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும். ஆனால் சூரியகாந்திச் சாகுபடி மிகவும் எளிதானதாக உள்ளது. சூரியகாந்திச் சாகுபடியில் பெரும் பிரச்சினைகள் தோன்றுவதில்லை.

நிலக்கடலைச் செடிகளை மாடுகளும், ஆடுகளும் தின்று சேதப்படுத்தும். ஆனால், சூரியகாந்தியை மாடுகளும் ஆடுகளும்தின்பதில்லை.

நிலக்கடலை வறட்சியினால் பாதிக்கப்படும். ஆனால், சூரிய காந்தி ஆழமாக வேர் விடக் கூடியதாக இருப்பதால், சூரிய காந்தி வறட்சியைத் தாங்கிக் கொள்வதுடன், மண்ணில் ஆழமான பகுதிகளில் உள்ள சத்துக்களை எடுத்துக்கொண்டு நன்கு வளர்ந்து நல்ல மகசூல் தருகின்றது.

பயிர்க் காலத்தில் 12 அங்குலம் மழை பெய்யும் பகுதிகளில் கூட, சூரியகாந்தி பயன் தரும். ஆனால், அந்த அளவு மழையைக் கொண்டு நிலக்கடலை மகசூல் தராது.

சூரிய வெளிச்சத்திற்கு ஏற்ப மாற்றம் அடைவதால் நிலக்கடலையை ஒரு சில குறிப்பிட்ட பருவங்களில் மட்டுமே பயிரிட்டு நல்ல மகசூல் எடுக்க முடியும். ஆனால், சூரிய வெளிச்சத்தினால் எந்தவித மாற்றமும் அடையாதிருப்பதால், சூரிய காந்தியை ஆண்டு முழுவதும் எப்பொழுது வேண்டுமானாலும் பயிரிடமுடியும்'

தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் உள்ள கெட்டியான கரிசல் மண்ணில் நிலக்கடலையைச் சாகுபடி செய்ய முடியாது. ஆனால், அந்த மண்ணிலும் சூரியகாந்தி நன்கு வளர்ந்து நல்ல மகசூல் தருகிறது.

நிலக்கடலையில் கிடைப்பதைவிட, சூரிய காந்தியில் அதிக எண்ணெய் கிடைக்கிறது.

நிலக்கடலை, இறைவைச் சாகுபடியில் சராசரியாக எக்டேருக்கு ஒரு நாளைக்கு 4.9 கிலோ என்ற அளவிலேயே எண்ணெய் கொடுக்கின்றது. ஆனால், சூரியகாந்தி இறைவைச் சாகுபடியில் சராசரியாக எக்டேருக்கு ஒரு நாளைக்கு 13.9 கிலோ என்ற அளவில் எண்ணெய் கொடுக்கிறது.

ஒரு எக்டேர் மானாவாரி நிலக்கடலை மூலம் சராசரியாக ஒரு நாளைக்கு 2.1 கிலோ எண்ணெய் மட்டுமே உற்பத்தி செய்ய முடியும். ஆனால், ஒரு எக்டேர் மானாவாரி சூரியகாந்தி மூலம் சராசரியாக ஒரு நாளைக்கு 3.84 கிலோ எண்ணெய் உற்பத்தி செய்ய முடியும்.

மேற்கூறிய காரணங்களால் பின் கண்டவை தெளிவாகின்றன. 1. நாம், மகசூல் கொடுப்பது என்பது நிச்சயமற்ற நிலையில் உள்ள நிலக்கடலையை நம்புவதைக் காட்டிலும் குறைந்த வயது கொண்டதும், அதிக எண்ணெய் கொடுக்கக்கூடியதுமான சூரிய காந்தியைச் சாகுபடி செய்வதே சிறந்தது.

2. நிலக்கடலைச் சாகுபடி செய்வதற்குத் தகுதியற்ற கெட்டியான கரிசல் மண்ணில் சூரிய காந்தியைப் பயிரிடுவதே சிறந்தது.

3. குறைந்த வயதுடையதாகவும், நிறைந்த எண்ணெய் கொடுக்கக் கூடியதாகவும் இருப்பதால் பன்முறைச் சாகுபடிக்குச் சூரியகாந்தி ஏற்றது.

4. வறட்சி தோன்றும் காலங்களில், அதுவும் குறிப்பாக, மானாவாரி நிலங்களில் விதைக்கும் பட்டம் பின்தள்ளிச் செல்லும் காலங்களில் நிலக்கடலைச் சாகுபடி செய்வதைக் காட்டிலும், சூரியகாந்தி பயிரிடுவதே இலாபகரமான செயலாகும்.

எனவே, நிலக்கடலைச் சாகுபடி செய்வதைவிட, சூரிய காந்திச் சாகுபடி செய்வதே நாட்டில் நிலவும் தாவர எண்ணெய்ப் பற்றாக் குறையைப் போக்கவும், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் உள்ள வழியாகும் என்பதை மனத்திற் கொண்டு உழவர் பெருமக்கள் செயல்படுவார்கள் என்று நம்புகின்றோம். —ஆர். எம்.



# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## • சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு

# குறுவையில் பெரும் மகசூல் பெறுவது எப்படி?



தற்பொழுது தமிழகமெங்கும் உள்ள உழவர் பெருமக்கள் குறுவைச் சாகுபடி செய்யத் தண்ணீரை எதிர்பார்த்துத் தயாராக இருப்பார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அயராது உழைத்து வரும் உழவர் பெருமக்களுக்கு இந்த நேரத்திலே குறுவைச் சாகுபடிக் குறிப்புகளைத் தெரிவித்தால், அவை உழவர் பெருமக்களுக்கு உறுதுணையாக அமையும் என்று கருதியே, கீழ்க்கண்ட சாகுபடிக் குறிப்புகளை உழவர் பெருமக்களுக்குக் காணிக்கையாகப் படைத்துள்ளோம்!

### குறுவைக்கேற்ற ரகங்கள்

குறுவைப் பட்டத்தில் ஐ.ஆர் 8, ஜெயா, ஐ.ஆர். 20, ஐ.ஆர் 22 போன்ற நடுத்தரக் கால உயர்விளைச்சல் தரும் ரகங்களையும், கருணை, ஆடுதுறை 27, கோ-29, காஞ்சி, காவேரி கரிகாலன், கண்ணகி, பெண்ணை போன்ற குறுகிய கால உயர் விளைச்சல் ரகங்களையும் பயிரிடுவதே அதிக மகசூல் பெறுவதற்கு வழி கோலும்! உங்களுக்கு இருக்கும் தண்ணீர் வசதிக்கும், நிலத்தின் தன்மைக்கும் நீங்கள் அடுத்துப் பயிரிடவிருக்கும் பயிருக்கும் ஏற்ப, மேற்கூறிய ரகங்களில் உங்களுக்குத் தகுந்தவற்றைக் கீழே குறிப்பிட்டுள்ள ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு பயிரிட்டால், குறுவையில் அதிக மகசூல் பெற்று அதிக வருவாய் அடையலாம்!

### ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

| ரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) |
|---|---|
| ஐ.ஆர். 8 | 130 முதல் 135 |
| ஜெயா | 125 முதல் 130 |
| ஐ.ஆர் 20 | 135 |
| ஐ.ஆர் 22 | 120 முதல் 125 |
| கருணை | 108 |
| ஆடுதுறை-27 | 105 |
| கோ. 29 | 110 முதல் 115 |
| காஞ்சி | 110 முதல் 115 |
| காவேரி | 105 முதல் 110 |
| கரிகாலன் | 110 |
| கண்ணகி | 110 |
| பெண்ணை | 110 முதல் 115 |

### நாற்றுவிட வேண்டிய காலம்

ஜூலை 15-ஆம் தேதிக்குள் (ஆனி 31) நாற்று விடுவது மிகச் சிறந்தது. எக்காரணத்தைக் கொண்டும் ஜூலை 27 (ஆடி 12)-ஆம் தேதிக்கு பிறகு நாற்று விடுதல் நல்லதல்ல.

### விதையளவு

ஒரு ஏக்கர் நடவு செய்ய 18 கிலோ விதையை நாற்று விட வேண்டும். தரமான விதைகளை வேளாண்மைத் துறையிலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

### விதையுடன் மருந்து கலக்குதல்

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' அல்லது 'திராம்' அல்லது 'காப்டான்' அல்லது 'டீ.எம். டீ.டி' மருந்து வீதம் கலந்து விதை கலக்கும் கருவியில் இட்டுச் சுற்றி, மருந்து விதைகளுடன் நன்கு கலக்குமாறு செய்யவும். மருந்து கலந்து குறைந்தது 6 மணி நேரம் வைத்திருந்த பிறகே முளை கட்டவேண்டும்.

### நாற்றங்கால் தயாரித்தல்

ஒரு ஏக்கர் நடவு செய்ய 12 சென்ட் நிலத்தில் நாற்றங்கால் தயாரிக்க வேண்டும். நாற்றங்காலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது சேருக்கவேண்டும். 12 சென்ட் நாற்றங்காலுக்கு 2 வண்டி தொழு எரு அல்லது ஒரு வண்டித் தழை எரு வீதம் இட வேண்டும். நாற்றுகளைப் பறிக்கும் போது வேர்கள் அறுந்து விடாமல் பறிக்க இவ்வாறு எருவிடுதல் அவசியம். நாற்றங்காலை ஒவ்வொவன்றும் ஒரு சென்ட் (54 அடி+8 அடி) பரப்புள்ள 12 பாத்திகளாக பிரித்துக் கொண்டு, அவைகளை மேடைப் பாத்திகளாக (Raised beds) அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். புழுதி நாற்றங்கால் அமைத்தலும் சிறந்தது.



### விதைத்தல்

ஒவ்வொரு மேடைப்பாத்திக்கும் 1½ கிலோ அளவு முளைவிட்ட விதைகளை விதைக்க வேண்டும். மூன்றுங் கொம்பு விதைகளை விதைப்பது நல்லது. புழுதி நாற்றங்காலில் விதைகளை முளைக்க வைக்காமல் நேரடியாக விதைத்து தண்ணீர் விட வேண்டும்.

### நடவுவயல் தயாரித்தல்

நடவு வயலை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது சேருக்க வேண்டும். 'பில்லிப்பசரா' போன்ற பசுந்தாள் உரப்பயிர் வளர்ந்துள்ள நிலமாக இருந்தால் அப்படியே இரும்புக் கலப்பையால் உழுதுவிட்டு பின்னர், 'பர்மிய செட்டுன்' அல்லது தழைமிதிக்கும் கருவி கொண்டு அழுத்தி உழவு செய்யவும். உழுவதற்கு டிராக்டர் பயன்படுத்துவதாக இருந்தால், கூண்டுச் சக்கரம் (Cage Wheel) இணைத்து நிலத்தின் குறுக்கும் நெடுக்குமாக இரு முறை உழவு செய்து பின்னர் பரம்புப் பலகையால் நிலத்தினைச் சமப்படுத்தவும்.

### அடியுரமிடுதல்

அதிக மகசூல் பெறுவதற்குத் தேவையான அளவு தொழு எரு அல்லது கலவை எரு (கம்போஸ்ட்) அல்லது தழை எருக்களையும், இரசாயன உரங்களையும் இட வேண்டும். பொதுவாக மேற்கூறிய எல்லா ரகங்களுக்கும் ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழு எரு அல்லது 10 வண்டி கலவை எரு அல்லது 5 வண்டி (2,300 கிலோ) பசுந்தழை அல்லது பசுந்தாள் உரம் இட்டு, உழுது சேற்றுடன் கலக்குமாறு செய்ய வேண்டும்.

மண்ணின் தன்மைக்கும், ரகத்திற்கும் ஏற்ப உரமிடுவதே நல்லது. மண் பரிசோதனை செய்து, சோதனை முடிவில் குறிப்பிட்ட அளவில் உரமிடுவதே அதிக மகசூலுக்கு வழி வகுக்கும்! மண் பரிசோதனை செய்து, அதன்படி இரசாயன உரமிட முடியாத உழவர்கள், வேளாண்மைத் துறையினர் ரகத்திற்கு ஏற்பப் பொதுவாகப் பரிந்துரைக்கும் அளவில் இரசாயன உரமிடவேண்டும்.

அடியுரமாக இரசாயன உர மிடுவதை ரகத்திற்கும், மாவட்டத்திற்கும் பரிந்துரைக்கப்படும் அளவில் இடவேண்டும். ஆகவே, கீழே ரகத்திற்கு ஏற்பப் பொதுவான ஓர் உர அளவும், தஞ்சை மாவட்டத்திற்கெனத் தனியே ஓர் அளவும் கொடுக்கப் பட்டுள்ளது. பொதுவான உர அளவைத் தஞ்சை மாவட்டம் தவிர்த்த மற்ற மாவட்டங்களில் பயன்படுத்த வேண்டும். ஆனால் தஞ்சை மாவட்ட உழவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கெனப் பரிந்துரைக்கப்பட்டுள்ள அளவிலேயே இரசாயன உரங்களை இடவேண்டும்.

**ஐ.ஆர். 8, ஜெயா, ஐ.ஆர். 20, ஐ.ஆர். 22, ரகங்களுக்குப் பொதுவான உர அளவு**

கடைசி உழவில் ஏக்கருக்கு 35 கிலோ மணிச்சத்தும், 35 கிலோ சாம்பல் சத்தும் அடியுரமாக அளிக்கப்படவேண்டும். ஏக்கருக்கு இந்த அளவு சத்துக்களை அளிக்க, கடைசி உழவில் பின்கண்ட அளவில் இரசாயன உரங்களை இட வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட்—220 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ்—60 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 45 கிலோ தழைச்சத்து அளிக்க 225 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 100 கிலோ யூரியா உரத்தை அடியுரமாக இடவேண்டும்.

**தஞ்சை மாவட்டத்தில் ஐ.ஆர். 8, ஜெயா பயிரிடுவதற்கான உர அளவு**

தஞ்சை மாவட்டத்தில் ஐ.ஆர். 8, ஜெயா ரகங்களைப் பயிரிடக் கடைசி உழவிற்கு முன், ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்க வேண்டும். இந்த அளவுக்கு சத்துக்களைக் குறைந்த செலவில் அளிக்க பின்கண்ட உரங்களைக் கடைசி உழவிற்கு முன் இட்டு உழுதுவிட வேண்டும்.

டை-அமோனியம் பாஸ்பேட்—54 கிலோ.
யூரியா—44 கிலோ.
மூரியேட் ஆப் பொட்டாஷ்—42 கிலோ.

**தஞ்சை மாவட்டத்தில் ஐ.ஆர் 20 ரகத்திற்கான உர அளவு**

தஞ்சை மாவட்டத்தில் ஐ.ஆர். 20 ரகம் பயிரிட ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து, 15 கிலோ மணிச்சத்து 15 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். இந்த அளவு சத்துக்களை அளிக்கவும், குறைந்த செலவில் உரமிடவும் பின் கண்ட அளவு இரசாயன உரங்களைக் கடைசி உழவிற்கு முன் இட்டு உழுதுவிட வேண்டும்.

டை-அமோனியம் பாஸ்பேட்—35 கிலோ.
யூரியா—30 கிலோ.
மூரியேட் ஆப் பொட்டாஷ்—25 கிலோ.

**கருணை, கரிகாலன்,, கண்ணகி, காவேரி, காஞ்சி, பெண்ணை ரகங்களுக்கான பொதுவான உர அளவு.**

கருணை, கரிகாலன், கண்ணகி, காவேரி, காஞ்சி, பெண்ணை ரகங்களுக்கு ஏக்கருக்கு 25 கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாகக் கடைசி உழவில் இட, பின் கண்ட அளவு உரமிடுதல் வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட்—157 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ்—42கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 30 கிலோ தழைச்சத்து அளிக்க 150 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 66 கிலோ யூரியாவை அடியுரமாக இட வேண்டும்.

**தஞ்சை மாவட்டத்தில் கருணை. காஞ்சி, காவேரி. கரிகாலன், கண்ணகி ரகங்களுக்கான உர அளவு.**

தஞ்சை மாவட்டத்தில் கருணை, காஞ்சி, காவேரி, கரிகாலன், கண்ணகி பயிரிட அடியுரமாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச்சத்து, 15 கிலோ மணிச்சத்து, 15 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்க வேண்டும். இந்தச்சத்துக்களைக் குறைந்த செலவில் இட கீழ்க் கண்ட அளவில் இரசாயன உரங்களைக் கடைசி உழவிற்குமுன் இட்டு உழுதுவிட வேண்டும்.

டை-அமோனியம் பாஸ்பேட்—35 கிலோ.
யூரியா—20 கிலோ.
மூரியேட் ஆப் பொட்டாஷ்—25 கிலோ.

**"ஆடுதுறை 27", கோ-20 ரகங்களுக்குப் பொதுவான உரஅளவு.**

கடைசி உழவில் ஏக்கருக்கு 21 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்கப் பின் கண்ட அளவில் உரமிட வேண்டும்.
சூப்பர் பாஸ்பேட்—130 கிலோ.
மூரியேட் ஆப் பொட்டாஷ்—23 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 17 கிலோ தழைச்சத்து அளிக்க 85 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 37 கிலோ யூரியாவை இட வேண்டும்.

டிராக்டர் ஓட்டிச் சேராக்கினுல்
செழிப்பாய் வளரும் பயிர் !



மேலுரமிடுவதால் மிகுந்திடும் மகசூல்





ஒருமித்த செய்நேர்த்தி முறைகள் தருவது உயர்ந்த மகசூலே !



வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் முறையில் பயிரிட்டால் பாங்கான மகசூல் பெறலாம் !

### தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறை —27 ரகத்திற்கான உர அளவு

தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறை-27 ரகத்திற்கு அடியுரமாக ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து, 21 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அளிக்க வேண்டும். இந்த அளவில் சத்துக்களை அளிக்கவும், குறைந்த செலவில் உரமிடவும் பின்கண்ட அளவில் இரசாசாயன உரங்களைக் கடைசி உழவிற்கு முன் இட்டு உழ வேண்டும்

டை-அமோனியம் பாஸ்பேட்—45 கிலோ.
யூரியா—14 கிலோ.
மூரியேட் ஆப் பொட்டாஷ்—24 கிலோ.

### நாற்றங்காலுக்கு மருந்து தெளித்தல்.

நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்னதாக 12 சென்ட் நாற்றங்காலுக்கு 24 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தை 24 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

### நாற்றின் வயது.

அதிக வயதுடைய நாற்றுகள் அதிக மகசூல் அளிக்காது. எனவே, நாற்றுக்களைக் குறிப்பிட்ட நாட்களுக்குள் பறித்து நட்டுவிட வேண்டும். நெல் ரகத்திற்கு ஏற்பக் கீழே குறிப்பீட்ட நாட்களில் நாற்றைப் பறித்து நட்டுவிட வேண்டும்.

| ரகத்தின் பெயர். | நாட்கள். |
|---|---|
| ஐ.ஆர். 8, ஜெயா. | 26 முதல் 28 |
| கருணை | 24 முதல் 26 |
| ஆடுதுறை-27, கோ-29 | 24 முதல் 25 |
| காஞ்சி, காவேரி, கரிகாலன், கண்ணகி. | 22 முதல் 25 |
| ஐ.ஆர். 20 | 25 முதல் 28 |
| ஐ.ஆர். 22 | 24 முதல் 28 |
| பெண்ணை | 24 முதல் 25 |

'தபாக்' முறையில் நாற்று விட்டால், நாற்று விட்ட 14-ஆம் நாளே நாற்றைப் பறித்து நடவு செய்ய முடியும்.

நாற்றைப் பறிக்கும்பொழுது, நாற்றின் தண்டுகள் முறிந்து விடாமல் கவனமாகப் பறிக்க வேண்டும். நாற்றின் வேர்களில் உள்ள மண்ணை அகற்ற நாற்றுகளைத் தடிகளால் அடிக்கக் கூடாது. நாற்று முடிகளைக் கட்ட நாற்றையே வளைத்துக் கட்டக் கூடாது. அவ்வாறு வளைத்துக் கட்டினால் நாற்றுகள் முறிந்துவிடும். எனவே, வைக்கோல் அல்லது வாழை நாரினால் முடிகளைக் கட்டவேண்டும்.

### நடவும் இடைவெளியும்

நாற்றுக்களைக் கூடுமானவரை வரிசைவரிசையாக நடவு செய்ய வேண்டும்.

களிமண் நிலங்களில் வரிசைக்கு வரிசை 20 சென்டி மீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டு நட வேண்டும்.

மணற் பாங்கான நிலத்தில் வரிசைக்கு வரிசை 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளியும் விட்டு நட வேண்டும். இரண்டு இரண்டு பயிர்களாக வைத்து நடுவதே சிறந்தது.

### களையெடுத்தல்.

நாற்று நட்ட 15–ஆம் நாளும், 30–ஆம் நாளும் இடை உழவுக் கருவியால், பயிர் வரிசைகளுக்கிடையில் மண்ணைக் கிளறிவிட்டுக் களையெடுக்கவும். வரிசையில் பயிர்களுக்குஇடையில் உள்ள களைகளைக் கைகளால் பிடுங்கி அப்புறப்படுத்தவும். ஐ. ஆர். 8, ஜெயா, ஐ. ஆர். 20, ஐ. ஆர் 22 ரகங்களுக்கு நாற்று நட்ட 40-ஆம் நாள், 2-ஆம் களையெடுத்தால் போதுமானது.





நாட்டின்
முன்னேற்றத்திலும்
வளமையிலும்
எமது பங்கு



TANSI
டான்ஸி



தொழில் நுட்பத் துறைகளில் உங்கள்
தேவைகளை பணிவுடன் பூர்த்தி செய்கிறது

- மலிவானது
- உத்திரவாதமானது
- வரர்ப்பட வேலைகளுக்கும், கட்டுமானகட்டமைப்புகளுக்கும், கருவிமற்றும் உருமாற்றத்திற்கும் மர சாமான்களுக்கும் ''டான்ஸி''

விவரங்களுக்கு அணுகவும் : தொழிற் பட்டறைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்

TANSI

நிருவாக இயக்குனர்
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
''அருள்மனை'', 26: ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600014.

மேலுரமிடுதல்

பொது.—ஐ. ஆர். 8, ஜெயா ரகங்களுக்கு நடவுசெய்த 21-ஆம் நாள், முதல் முறையாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச்சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட். அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும். நடவுசெய்த49 நாளிலிருந்து54-ம் நாளுக்குள் அதாவது தண்டு உருளும் தருணத்தில் இரண்டாம் முறையாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச்சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

ஐ. ஆர் 20, ஐ. ஆர். 22 ரகங்களுக்கு நடவுசெய்த 21-ம் நாளில் ஏக்கருக்கு 15 கிலோ தழைச்சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும். நடவு செய்த 45 முதல் 50-ம் நாளில் இரண்டாம் முறையாக ஏக்கருக்கு 15 கிலோ தழைச்சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

கருணை ரகத்திற்கு நடவுசெய்த 21-ம் நாள் ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 100 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 44 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

ஆடுதுறை—27, கோ. 29 ரகங்களுக்குநடவு செய்த 21-ஆம் நாளில் ஏக்கருக்கு 11 கிலோ தழைச்சத்து அளிக்க 55 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 25 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

காஞ்சி, காவேரி, கரிகாலன், கண்ணகி, பெண்ணே ரகங்களுக்கு நடவு செய்த 21-ஆம் நாள் ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 100 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 44 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

**தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும்**

ஐ. ஆர் 8, ஜெயா ஆகிய ரகங்களைப் புதிய ஆற்றுப்பாசனப் பகுதியில் நட்டிருந்தால் நடவு செய்த 15 -ஆம் நாள் ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். நடவு செய்த 50—55 நாட்களில் இரண்டாம் தடவையாக ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும். பழைய ஆற்றுப் பாசனப் பகுதிக்கு நடவு செய்த 50—55 நாட்களில் (தண்டு உருளும் தருணம்) ஒரே தவணையாக ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை இடவும்.

ஐ. ஆர் 20 நட்டிருந்தால் புதிய ஆற்றுப் பாசனப் பகுதியில் நடவு செய்த 15-ஆம் நாள் ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்து அளிக்க 22 கிலோ யூரியாவையும், நடவு செய்த 50—55 நாட்களில் ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்து அளிக்க 22 கிலோ யூரியாவையும் மேலுரமாக இடவேண்டும். பழைய ஆற்றுப்பாசனப் பகுதியில் நடவு செய்த 50—55 நாட்களில் ஒரே தவணையாக ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து அளிக்க 44 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும்.

கருணை, கரிகாலன், கண்ணகி, காஞ்சி, காவேரி ஆகிய ரகங்கள் பயிரிட்டிருந்தால் நடவு செய்த 15-ஆம் நாள் முதல் தடவையாக 8 கிலோ தழைச்சத்து அளிக்க 18 கிலோ யூரியாவையும், நடவு செய்த 30-ம் நாள் 2 ஆம் தடவையாக ஏக்கருக்கு 8 கிலோ தழைச்சத்து அளிக்க 18 கிலோ யூரியாவையும் மேலுரமாக இடவும்.

பயிர்ப் பாதுகாப்பு

நடவு செய்த 15-ஆம் நாள் வருமுன் தடுப்பாக ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் பாரத்தியானை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து (10 பெரிய மண்ணெண்ணெய் டின் அளவு) கையால் இயங்கும் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

விசைத்தெளிப்பான் பயன்படுத்துவதனால் ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் பாரத்தியானை 40 முதல் 60 லிட்டர் தண்ணீரில் (2 முதல் 3 பெரிய மண்ணெண்ணெய் டின் அளவு) கலந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 30 ஆம் நாள் மேற்கூறிய அளவு மருந்துடன், 200 கிராம் டைத்தியோ கார்போமேட் மருந்தையும் கலந்து தெளிக்க வேண்டும்.

தண்டு உருளும் தருணத்திலேயும், நடவு செய்த 15-ஆம் நாள் தெளித்தது போலவே தெளிக்க வேண்டும்.

நெற்பூவில் பால் பிடிக்கும் தருணத்தில் ஏக்கருக்கு 10 கிலோ வீதம் பி. எச். சி. 10 சதத்தூளைத் தூவி விட வேண்டும்.

எனவே, மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு பெரும் மகசூல் பெறுமாறு குறுவைச் சாகுபடி செய்யும் உழவர்பெருமக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

—ஆர். எம்.

## திராட்சை பயிரிட வங்கியின் கடனுதவி

திருச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு திராட்சை சாகுபடியைத் திருச்சி கூட்டுறவு மத்திய வங்கியின் உதவியுடன் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. துறையூர், பெரம்பலூர் வட்டங்களில் இம்முறை செயலுக்குக் கொண்டு வரப்படும். திராட்சைப் பயிர் செய்யக் கூட்டுறவு மத்திய வங்கி விவசாயிக்கு ஏக்கர் 1-க்கு ரூ. 3,000 (முதல் ஆண்டு ரூ. 1,500, 2-வது ஆண்டு ரூ. 1,000, மூன்ருவது ஆண்டு ரூ. 500) கடன் வழங்க உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1973–74-ஆம் ஆண்டில் 200 ஏக்கர்களில் திராட்சை சாகுபடி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நெல் விளையும் வயல்களில் நெல் அறுவடையானதும் உளுந்து, பயறு போன்ற பருப்பு வகைத் தானியங்கள் சாகுபடி செய்வது இந்த ஆண்டு தீவிரப்படுத்தப்பட்டது. சுமார் 12,000 ஏக்கர்களில் இவ்வாண்டு இம்மாதிரியான தானிய வகைகள் பயிர் செய்யப்பட்டுள்ளன.


நல்லது கேட்கின் நலமுறச் சொல்வோம்!
இந்தியாவில் பசுமைப்புரட்சியில் தமிழகத்திற்கு முதலிடம்!
எல்லா
மாநிலங்களுக்கும்
வழிகாட்டியாக அமைந்துள்ள
மாநிலத்திட்டக்குழுவின் பணிகள்
எல்லாச்
சிற்றூர்களுக்கும்
சாலை
இணைப்புகள்!
இவைகளால் உருவாகும் நன்மையினும் பெரிது நாம் அமைத்திடும் அளவான குடும்பமே!
திட்டமிட்ட குடும்பமே நாட்டின் நலம் வளர்க்கும்!
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்!
குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு
தமிழரசு

" அப்பப்பா ! என்ன வெய்யில் அடிக்கிறது ! உடம்பெல்லாம் எரியுது ! இரண்டு எலுமிச்சம் பழம் போட்டு, ஒரு சர்பத் போடப்பா ! ''

'' எலுமிச்சம் பழத்திற்கு ரொம்ப டிமாண்டு சார் ! ஒரு எலுமிச்சம் பழம் போடறேன் ''

'' சரி ! சரி ! நல்லதாகவும், பெரியதாகவும் உள்ள எலுமிச்சம் பழமாப் பார்த்துப் போடப்பா ! ''

'' எங்க சார் நல்ல எலுமிச்சம் பழம் கிடைக்குது ? இப்போ வருகிற எலுமிச்சம் பழமெல்லாம் சிறியதாகவும், சொறி கொண்ட மாதிரியும்தான் இருக்கிறது. அதை மார்க்கெட்டில் என்ன விலை சொல்றுன் ? இஷ்டமா இருந்தா வாங்கு, இல்லேண்ணு போட்டுட்டுப் போண்ணு சொல்றுன். இருக்கிற பழத்தில் நல்லதா பார்த்துப் போடுறேன் சார் '' என்று கூறிவிட்டு, சர்பத் தயாரித்துக் கடைக்காரர் கொடுக்கிறுர். அதை வாங்கி அவசரம் அவசரமாகக் குடிக்கிறுர் சர்பத் கேட்ட பெரியவர் !

'' அப்பா ! இப்பத்தான் குளிர்ச்சியா இருக்கு '' என்று கூறிக் கண்ணுடித் தம்ளரைக் கீழே வைத்துவிட்டு '' எவ்வளவு அப்பா காசு ?'' என்று கேட்டார்.

'' 30 காசு சார் ''

'' என்னப்பா அநியாய விலை சொல்கிறுயே ! ''

'' என்ன சார் செய்யறது ? ஒரு எலுமிச்சம் பழம் 15 காசு போட்டு வாங்குறேனே ! ''

'' சரி ! சரி ! இந்தா 30 காசு ! ஏதோ தாகம் தீர்ந்தது ! உடலும் குளிர்ந்தது! '' என்று கூறி 30 காசைக் கொடுத்து விட்டு வெய்யிலையும் பொருட்படுத்தாமல் வேகவேகமாக நடந்து சென்றுர்.

* * *

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நாளும் நாம் பார்க்க முடிகிறது. தேவைக்கேற்ப எலுமிச்சம் பழம் உற்பத்தியாக வில்லை ! எனவே, எலுமிச்சம் பழ உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள சாகுபடி முறைகளை ஈண்டு படைத்துள்ளோம்.

கோடையின் கொடுமையைத் தணித்து, குளிர்ச்சியை ஏற்படுத்தும் 'சர்பத்', 'ஸ்குவாஷ்' முதலிய சுவை நீர் தயாரிக்கவும், ஊறுகாய் தயாரிக்கவும் பயன்படும் எலுமிச்சம் பழங்களின் தேவை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் எலுமிச்ச ஊறுகாய்களுக்கு வெளிநாடுகளில் மிகுந்த தேவை ஏற்பட்டுள்ளது. உள்நாட்டுத் தேவையையும், வெளிநாட்டுத் தேவையையும் ஈடு செய்ய மேலும் புதிதாக எலுமிச்சைத் தோட்டங்களை ஏற்படுத்துவதுடன் தற்போதுள்ள எலுமிச்சைத் தோட்டங்களில் நவீனச் சாகுபடி முறைகளை மேற்கொண்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

எலுமிச்சையில் சாதாரண எலுமிச்சை ( Lime ), கொடி எலுமிச்சை ( Lemon ) என இரண்டு வகைகள் உள்ளன. தற்போது வட ஆர்க்காடு, திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஆண்டு முழுவதும் பலன் தரக்கூடிய சாதாரண எலுமிச்சை பெரும் பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகிறது. குன்னூர், கோடைக்கானல் போன்ற மலைப்பகுதிகளிலும், கோவை, குற்ருலம் பகுதிகளிலும் கொடி எலுமிச்சை பயிரிடப்பட்டு வருகிறது.

நூறு கிராம் எலுமிச்சைப் பழத்திலும், கொடி எலுமிச்சைப் பழத்திலும் கீழ்க்கண்ட சத்துக்கள் உள்ளன.

| | எலுமிச்சை. | கொடி எலுமிச்சை. |
|---|---|---|
| புரதம் (கிராம்) | 1.5 | 1.0 |
| கொழுப்பு (கிராம்) | 1.0 | 0·1 |
| மாவுப் பொருள் (கிராம்) | 10.9 | 11.1 |
| சுண்ணும்பு (கிராம்) | 0.09 | 0.07 |
| பாஸ்பரஸ் (கிராம்) | 0.02 | 0.01 |
| இரும்பு (கிராம்) | 0.03 | 2.30 |
| கலோரி .. | 59 | 57 |
| உயிர்ச்சத்து—எ. (ஐ.யூ.) | 26 | மிகக் குறைவு |
| உயிர்ச்சத்து—பி1 (மில்லி கிராம்) | 0.02 | 0.02 |
| உயிர்ச்சத்து—சி. (மில்லி கிராம்) | 63 | 39 |

எலுமிச்சை ஒரு இலாபம் தரும் பயிராகும். ஒரு ஏக்கர் எலுமிச்சையிலிருந்து ஆண்டு தோறும் 2,000 முதல் 3,000 ரூபாய்க்குக் குறையாமல் நிகர இலாபம் பெறமுடியும். திருச்சி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலும் சில உழவர் பெருமக்கள் ஒரு ஏக்கர் எலுமிச்சையிலிருந்து ஆண்டிற்கு 10,000 ரூபாய் வரை நிகர இலாபம் எடுத்துள்ளதாகவும் தெரிய வருகிறது. ஆகவே, திருந்திய சாகுபடி முறைகளை மேற்கொண்டு எலுமிச்சை பயிரிட்டால் நல்ல இலாபம் பெற முடியும் என்பது தெளிவாகிறது.

### சாகுபடிக் குறிப்புகள்

**நிலம் :**

எலுமிச்சை பயிரிடுவதற்கு வடிகால் வசதியுடைய செம்மண் அல்லது குறுமண் மிகவும் சிறந்தது. ஆயினும், வடிகால்



வசதியோடு கூடிய எல்லா மண் வகைகளிலும் எலுமிச்சையைப் பயிரிடலாம்.

6 அடிக்குக் குறைந்த மண் கண்டமும், கற்பாறை கலந்த மண் கண்டமும், மழைக்காலத்தில் நிலநீர் மட்டம் தரை மட்டத்திற்கு அருகில் வந்துவிடக் கூடிய நிலமும், களர், உவர் நிலங்களும் எலுமிச்சைக்கு ஏற்றதல்ல. அவைகளை அறவே ஒதுக்கிவிட வேண்டும். இல்லாவிட்டால், துவக்கக் காலத்தில் எலுமிச்சை ஓரளவிற்குப் பலன் கொடுத்தாலும், பிறகு எலுமிச்சை மரங்கள் பட்டுப்போய் இறந்துவிடக் கூடும். ஆகவே, குறைந்தது 6 அடி ஆழம் வரை ஒரே மாதிரியான மண் கண்டமும், எக்காலத்திலும் தரை மட்டத்திலிருந்து 6 அடி ஆழத்திற்குக் கீழே நீர்மட்டம் உள்ள நிலமுமே எலுமிச்சைக்குச் சிறந்தது.

### தட்பவெப்ப நிலை

மழைக் குறைவான சமவெளிப் பகுதிகளில் எலுமிச்சை



நன்கு பலன் அளிக்கிறது. கொடி எலுமிச்சை சாகுபடி செய்யக் காற்றில் ஈரநிலை அதிகம் தேவைப்படுவதால், மலைப் பகுதிகளும், மலையை ஒட்டிய பருவநிலையுள்ள கோவை போன்ற பகுதிகளும் கொடி எலுமிச்சைக்கு ஏற்றதாக உள்ளது.

### வகைகள்

எலுமிச்சை பயிரிட விரும்புகின்றவர்கள் சாதாரண எலுமிச்சையை அல்லது 'தகித்தி' (Tahiti) எலுமிச்சையைப் பயிரிடலாம்.

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பழத்தோட்டத்தில் நடத்தப் பெற்ற ஆராய்ச்சியின் பலனாக, 'தகித்தி' எலுமிச்சை, சாதாரண எலுமிச்சையை விடச் சிறந்தது எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த ரகம் இலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்டதாகும். இது கடல் மட்டத்திலிருந்து 1,500 அடி உயரம்வரை மலைப்பகுதிகளிலும், சமவெளிப் பகுதிகளிலும் நன்கு வளர்ந்து பலனளிக்கின்றன. 'தகித்தி' ரகம் பின்கண்ட 4 சிறப்புக் குணங்கள் கொண்டது.

1. சொறி நோயால் தாக்கப்படாது.
2. பழங்கள் நிறையச் சாருடன், விதையின்றி உள்ளன.
3. இதன் பழம் சாதாரண எலுமிச்சம் பழத்தைவிட 4 மடங்கு பெரியது.
4. வீட்டுத் தோட்டங்களுக்கும், பழத்தோட்டங்களுக்கும் ஏற்றது.

மலைப் பகுதிகளில் கொடி எலுமிச்சை பயிரிட விரும்புகின்றவர்கள் 'மால்டா,' 'வில்லா பிராங்கா' 'செவில்லி ஆகிய கொடி எலுமிச்சை வகைகளைப் பயிரிடுதல் சிறந்தது. குறிப்பாகக் குன்னூர், கோடைக்கானல் பகுதிகளுக்கு மேற்கூறிய ரகங்கள் மிகவும் சிறந்தவையாகும்.

சமவெளிப் பகுதிகளில் கொடி எலுமிச்சை பயிரிட விரும்புகின்றவர்கள் பின்கண்ட ரகங்களைப் பயிரிடலாம்.

1. நேபாளி கொடி எலுமிச்சை.
2. மேயர்.
3. லக்னோ.

**நடுவதற் கேற்ற கன்றுகள் தயாரித்தல் :** சாதாரண எலுமிச்சை பயிரிடுவதற்கு நல்ல தரமான பழங்களிலிருந்து விதைகளை எடுத்து நாற்று விட்டு நடுவது சிறந்தது.

நல்ல தரமான எலுமிச்சை மரங்களில் குருத்தொட்டு (Buded) கட்டிக் கன்றுகள் தயாரிக்கலாம். அல்லது அரசினர் மாதிரிப் பழப்பண்ணை—நாற்றங்கால்களில் இருந்து குருத்தொட்டு கட்டிய கன்றுகளை அல்லது நாற்றுகளை வாங்கி நடலாம். தகித்தி எலுமிச்சை பயிரிட விரும்புகின்றவர்கள் கோவை வேளாண்மை கல்லூரிப் பழத்தோட்டத்திலிருந்து விண்பதியங்கள் (Air-layering) அல்லது மண்பதியங்கள் வாங்கி நடவு செய்யலாம்.

கொடி எலுமிச்சையில் விண்பதியம் அல்லது மண்பதியம் மூலமாகக் கன்றுகள் தயாரிக்கலாம். அல்லது அரசினர் மாதிரிப் பழப்பண்ணை-நாற்றங்கால்களிலிருந்தும் பதியங்களை வாங்கி நடலாம்.

சாதாரண எலுமிச்சை பயிரிட ஓர் ஆண்டு வயதுடைய எலுமிச்சை நாற்றுகளை அல்லது குருத்தொட்டு கட்டிய எலுமிச்சைக் கன்றுகளை நடுவதே சிறந்தது.

'தகித்தி' எலுமிச்சை பயிரிட 1 அல்லது 1½ வயதுடைய விண்பதியங்களை அல்லது மண் மதியங்களை நடுவதே சிறந்தது.

கொடி எலுமிச்சை பயிரிட 6 மாத வயதுடைய விண்பதியங்களை அல்லது மண்பதியங்களை நடுவதே சிறந்தது.

**நடும்முறை**—ஜுன் அல்லது ஆகஸ்டு மாதத்தில் 3 அடி × 3 அடி × 3 அடி அளவுள்ள குழிகளைத் தோண்டி ஏறத்தாழ 20 நாட்களுக்குக் குழிகளை ஆறப்போட வேண்டும். நல்ல வளமான நிலங்களில் எலுமிச்சை அல்லது கொடி எலுமிச்சை பயிரிடக் குழிக்குக் குழி 20 அடி இடைவெளி விட்டு குழிகளைத் தோண்ட வேண்டும். வளம் குறைந்த நிலங்களில் குழிக்குக் குழி 15 அடி இடை



வெளி விட்டுக் குழிகளைத் தோண்ட வேண்டும். 20 அடி இடைவெளியில் ஏக்கருக்கு 178 குழிகளும், 15 அடி இடைவெளியில் ஏக்கருக்கு 193 குழிகளும் தோண்ட வேண்டும்.

குழிகள் நன்கு ஆறிய பிறகு, அவற்றில் வைக்கோல் அல்லது சருகுகளைப் போட்டுத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும். மறுநாள் ஒவ்வொரு குழியிலும் 75 கிலோ மாட்டெரு, 3 கிலோ எலும்புத்தூள், ½ கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை மேல் மண்ணுடன் கலந்து நிரப்ப வேண்டும். பிறகு குழிகளில் சதும்பத் தண்ணீர் கட்ட வேண்டும். தண்ணீர் கட்டியபின் மண் நன்ருகக் குழியில் அமரும். மண் காய்ந்த பிறகு, குழிகளின் நடுவில் மண்ணைப் பறித்து நாற்றுகளை அல்லது பதியங்களை நட்டு மண்ணை நன்கு அமுத்திவிட்டுத் தண்ணீர் விட வேண்டும்.

**நடும்பருவம்** :— எலுமிச்சைக் கன்றுகளை அல்லது பதியங்களை நடுவதற்கு சூலை—செப்டம்பர் பருவமே மிகவும் சிறந்தது.

**நீர்ப்பாசனம்**:— எலுமிச்சைக்கு வாரம் ஒருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். கன்று அல்லது மரத்தின் அடிப் பகுதியைத் தொடாமல் தண்ணீர் கட்ட வேண்டும். இவ்வாறு நீர்ப்பாய்ச்சுவதற்கு வசதியாக ஒவ்வொரு எலுமிச்சைக் கன்றை அல்லது மரத்தைச் சுற்றிலும் ஆழமில்லாத வட்ட வடிவமான பாத்தி ( Basin ) அமைக்க வேண்டும். கன்று அல்லது மரத்தின் அடியிலிருந்து சிறிது சரிவு கொடுத்துப் பாத்தி அமைக்க வேண்டும். அதாவது கன்றை அல்லது அடிமரத்தைச் சுற்றிலும் மேடாக மண் அணைத்திருக்க வேண்டும்.

எலுமிச்சைக்கு உப்பு நீர் பாய்ச்சக் கூடாது. சுவையான நீர் (Sweet Water) எனப்படும் உப்பில்லாத தண்ணீரே மிகவும் சிறந்தது.

**பின்செய் நேர்த்தி** — எலுமிச்சைத் தோட்டத்தில் களைகள் இருக்கவே கூடாது. பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை களைகளை அகற்றி, எலுமிச்சைத் தோட்டத்தைத் துப்புரவாக வைத்திருக்க வேண்டும்.

எலுமிச்சைக் கன்று நேராக 2 அடி வளர்ந்த பிறகே பக்கக் கிளைகளை வளரவிட வேண்டும். அதுவரை பக்கக் கிளைகளை வளரவிடாமல் அகற்றிவிட வேண்டும். கிளைகள் ஒழுங்கற்று அடர்த்தியாக வளருவதைத் தடுக்கச் சில கிளைகளை வெட்டிக் களைந்திட வேண்டும். எலுமிச்சை மரத்தில் அவ்வப் பொழுது தோன்றும் நீர்த் தண்டுகளையும், நோயால் பட்டுப்போன குச்சிகளையும், முறையற்றுக் குறுக்காக வளரும் கிளைகளையும் வெட்டிவிட வேண்டும்.

எலுமிச்சைக் கன்றுகள் வளர்ந்து காய்ப்புக்கு வரும் வரை (5 ஆண்டுவரை) கன்றுகளுக்கு இடையே உள்ள இடைவெளிகளை இலேசாக உழுது கோ. 1 அவரை, காய்கறிகள், ஆகியவைகளை ஊடுபயிராகச் சாகுபடி செய்யலாம். இடைவெளிகளை உழும்பொழுது ஆழமாக உழக்கூடாது. அதனால் எலுமிச்சை வேர்கள் வெட்டுப் படக்கூடும். வேர்கள் வெட்டுப் பட்டால் எலுமிச்சை நன்கு வளராது.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு எலுமிச்சை மரங்களின் இடைவெளிகளை இலேசாக உழுது பில்லிப் பசரா, சணப்பை போன்ற பசுந்தாளுரப் பயிர்களை வளர்த்து அவைகளைப் பூப் பூக்கும் தறுவாயில் அப்படியே மடக்கி உழுது, பழத்தோட்டத்தின் மண் வளத்தை மேம் படுத்த வேண்டும்.

**உரமிடும் முறை** :— எலுமிச்சைக் கன்றுகள் அல்லது பதியங்கள் நன்ருக வளரத் தழைச்சத்து மிகவும் இன்றி தமையாததாகும். காய்ப்புக்கு



எலுமிச்சை.



கொத்து எலுமிச்சை.

வந்தவுடன் எலுமிச்சை மரங்களுக்குத் தழைச்சத்து, மணிச் சத்து சாம்பல் சத்து ஆகிய 3 வகைச் சத்துக்களும் எலுமிச்சை மரங்களுக்குச் சமமாகக் கிடைக்க வேண்டும். எனவே, ஓராண்டு வயதுடைய எலுமிச்சைக் கன்று ஒவ்வொன்றுக்கும் கீழ்க்கண்ட உரங்களை இட வேண்டும்.

உர அளவு

| ஓராண்டு வயதுடைய கன்றுக்கு இடவேண்டிய உரஅளவு (கிலோ) | |
|---|---|
| மக்கிய தொழுஎரு .. | 20 |
| அமோனியம் சல்பேட். | 1 |
| சூப்பர் பாஸ்பேட் .. | 1 |
| மியூரியேட் ஆப் பொட்டாஷ். | ½ |

அடுத்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வோர் எலுமிச்சைக் கன்றுக்கும் கீழ்க் கண்டவாறு உரங்களை அதிகமாக இடவேண்டும்.

உர அளவு

| ஒவ்வொரு ஆண்டும் அதிகம் அளிக்க வேண்டிய அளவு (கிலோ) | |
|---|---|
| மக்கிய தொழு எரு .. | 5 |
| அமோனியம் சல்பேட். | ½ |
| சூப்பர் பாஸ்பேட் .. | ½ |
| மியூரியேட் ஆப் பொட்டாஷ். | ¼ |

ஐந்தாண்டிற்குப் பிறகு ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு எலுமிச்சை மரத்திற்கும் பின் கண்ட அளவு உரமிட வேண்டும்.

| உரத்தின் பெயர் | இடவேண்டிய அளவு (கிலோ) |
|---|---|
| மக்கிய தொழு எரு .. | 40 |
| அமோனியம் சல்பேட். | 5 |
| சூப்பர் பாஸ்பேட் .. | 6 |
| மியூரியேட் ஆப் பொட்டாஷ். | 3 |

மேற்கூறப்பட்டுள்ள உரங்களை இரண்டாகப் பிரித்து, ஒரு பாதியை சூலை—ஆகஸ்டு திங்களிலும், மறுபாதியை சனவரி—பிப்ரவரி திங்களிலும் இட வேண்டும்.

எலுமிச்சைக் கன்று அல்லது மரத்தைச் சுற்றி 2 அடி தூரம் தள்ளி, கிளைகளின் வெளி விளிம்புவரை—அதாவது கிளைகள் பரவியுள்ள தூரம்வரை—நிலத்தில் இலேசாக மண்ணை அகற்றிவிட்டு, அதில் உரங்களை

கலந்து தூவி விட்டு மண்ணால் மூடிவிட வேண்டும். உரமிட்டவுடன் தவறாமல் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு**—இளங் கன்றுகளிலும், பெரிய மரங்களிலும், இலைப்புழுக்கள் தோன்றி இலைகளைத் தின்று சேதம் ஏற்படுத்தும். இப்புழுக்கள் தோன்றிய உடன் கைகளால் எடுத்துக் கொன்றுவிட வேண்டும். அல்லது 0.025 சதம் பாலிடால் (100 மில்லி லிட்டர் பாலிடாலை 200 லிட்டர் தண்ணீர் கலந்து) தெளிக்கவும். இலை துளைக்கும் புழுக்களைக் கட்டுப்படுத்த 1 கிலோ வேப்பம் பிண்ணாக்கை 4 லிட்டர் தண்ணீரில் ஊற வைத்துக் கரைத்து, அதில் மேலும் 4 லிட்டர் தண்ணீர் விட்டு எலுமிச்சைக் கன்றுகள் அல்லது மரங்களின் மேல் தெளிக்கலாம்.

இலையிலும், காய்களிலும் தோன்றும் சொறி நோயைக் கட்டுப்படுத்த புதுத்துளிர்கள் தோன்றும் காலத்தில் போர்டோ கலவையைத் (Bordeaux Mixture) தெளிக்க வேண்டும். நோய் கண்ட பாகங்களை வெட்டி விடுதலும் சிறந்தது.

**'டானிக்' தெளித்தல்**—நிலத்தில் நுண்ணூட்டங்களின் குறைவு ஏற்பட்டால், எலுமிச்சையில் நோய்கள் தோன்றக் கூடும். அதனால் மகசூல் குறையக் கூடும். நுண்ணூட்டங்களின் குறைவைத் தடுக்க, 3 மாதத்திற்கு ஒருமுறை, கீழ்க்காணும் நுண்ணூட்டகக் கரைசலைத் தெளித்தால் (Tonic Spray) எலுமிச்சை செழிப்புடன் வளர்ந்து நல்ல மகசூல் கொடுக்கும் என்பது திண்ணம்.

| நுண்ணூட்டகத்தின் பெயர். | தேவையான அளவு (கிராம்) |
|---|---|
| காப்பர் சல்பேட் .. | 1,350 |
| சிங் சல்பேட் .. | 2,250 |
| மக்னிசியம் சல்பேட். | 900 |
| மாங்கனீஸ் சல்பேட். | 900 |
| போராக்ஸ் .. | 450 |
| பெர்ரஸ் சல்பேட் .. | 900 |
| யூரியா .. .. | 900 |
| சுண்ணாம்பு .. | 4,050 |
| கரையும் கந்தகம் .. | 2,250 |
| தண்ணீர் .. | 450 லிட்டர் |

முதலில் காப்பர் சல்பேட்டையும், சுண்ணாம்பையும் கொண்டு போர்டோ கலவை தயார் செய்து கொள்ள வேண்டும். பிறகு மற்ற நுண்ணூட்டங்களை ஒவ்வொன்றாகக் கலந்து எலுமிச்சைக்கு ஏற்ற 'டானிக்' தயாரித்துப் பிறகு தெளிப்பான் மூலம் தெளித்தால் எலுமிச்சை நன்கு வளர்ந்து நிறையக் காய்க்கும்.

### அரசுத்துறை நிறுவனங்களுக்குப் பிரச்சார இயக்கம்.

விளம்பரப் பிரச்சாரப் பிரிவுகளின் ஒருங்கிணைப்புக் குழு சென்னையில் கூடி, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் அரசுத்துறைக்கு உள்ள முக்கியப் பங்கு பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கான வழிவகைகளை ஆராய்ந்தது.

அரசுத்துறை நிறுவனங்கள் செயல்படும் விதம் பற்றி மக்கள் தொடர்புத் துறைகள் இடைவிடாமல் பிரச்சார இயக்கம் நடத்த வேண்டுமென்று ஒருங்கிணைப்புக் குழு யோசனை தெரிவித்தது.

மைய அரசு, தமிழ்நாடு அரசு ஆகியவற்றின் விளம்பரப் பிரச்சார அதிகாரிகளும், தமிழ்நாட்டிலுள்ள அரசுத்துறை நிறுவனங்களின் பிரதிநிதிகளும் ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்களாவர்.

**அறுவடை**—நாற்று மூலம் வளர்க்கப்பட்ட எலுமிச்சை 4 ஆண்டுகளில் பலன் கொடுக்கும். பதியங்கள் மூலம் வளர்க்கப்பட்ட எலுமிச்சை அல்லது கொடி எலுமிச்சை 2 ஆண்டிலேயே காய்த்துப் பலனளிக்கத் துவங்கும். எலுமிச்சை ஆண்டு முழுவதும் காய்க்கும். ஆயினும் கீழ்க்கண்ட 2 பருவங்களில் அதிக மகசூல் கிடைக்கும்.

1, நவம்பர்—டிசம்பர்.

2. சூன்—செப்டம்பர்.

கொடி எலுமிச்சை வகைகள் முக்கியமாக ஆகஸ்டு—செப்டம்பரில் அதிக மகசூல் தரும். ஆயினும் அவை ஆண்டு முழுவதும் ஓரளவு காய்த்துக் கொண்டே இருக்கும்.

ஒவ்வொரு எலுமிச்சை மரமும், கொடி எலுமிச்சை மரமும் ஆண்டுதோறும் கீழ்க்கண்டவாறு மகசூல் தரும்.

| வகை | ஒருமரம் தரும் பழங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சாதா எலுமிச்சை .. | 1,000 முதல் 2,000 |
| தகித்தி எலுமிச்சை .. | 500 முதல் 600 |
| கொடி எலுமிச்சை .. | 500 முதல் 700 |

| வகை | ஒரு மரம் தரும் பழங்களின் எடை (கிலோ) |
|---|---|
| சாதா எலுமிச்சை .. | 75 முதல் 100 |
| கொடி எலுமிச்சை | 125 முதல் 150 |

எலுமிச்சை பயிரிடச் சராசரியாக ஆண்டுதோறும் ஏக்கருக்கு 500 முதல் 700 ரூபாய் செலவாகக்கூடும். எலுமிச்சை பயிரிட்டால் ஒரு ஏக்கரில் இருந்து குறைந்தது 2,500 முதல் 3,000 ரூபாய் வரை வருவாய் கிடைக்கக் கூடும். எனவே, எலுமிச்சை சாகுபடி செய்வதால் செலவு போக நிகர இலாபம் ஏக்கருக்கு 2,000 முதல் 2,300 ரூபாய் கிடைக்கும் என்பது திண்ணம். எனவே, மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு எலுமிச்சை பயிரிட்டு நிறைந்த இலாபம் பெறுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர்.எம்.

# அன்புக்கு ஓர் இல்லம்

சமயங்களும், சமய நிறுவனங்களும் கோயில்களும் சமுதாயத்தைத் தழுவிப் பேணிப் பாதுகாக்க வேண்டும்! சமுதாயத்தை மறந்த—சமுதாயத்தை மதிக்காமல் புறக்கணித்த—அல்லது சமுதாயத்தைப் பேணிக் காத்த எந்தச் சமயமும் எந்தச் சமய நிறுவனமும் எந்தக் கோயிலும் சமுதாயத்தின் புறக்கணிப்புக்கு ஆளாகி —இருந்த இடம் தெரியாமல்— ஏன் வரலாற்றுச் சுவடே இல்லாமல் மறைந்துவிடும். எனவேதான், சமயத்தைக் காக்க வேண்டும் என்று உண்மையிலேயே கருதுகிற சமயக் காவலர்கள் எல்லாம் தூய தொண்டின் நெறியை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள்—வலியுறுத்தி வருகிறார்கள். இந்த உண்மையும், தத்துவமும் எல்லாச் சமயத்திற்கும் பொதுவான ஒன்றுதான்— இதில் விதி விலக்கே இல்லை.

பல்லவப் பேரரசின் தலைநகராக விளங்கிய புகழ்மிகு காஞ்சிப் பெருநகரின் அருகாமையிலுள்ள திருமுக்கூடல் திருமால் கோயில், வீர சோழன் பெயரால் அதுவர் சாலை (வறியவர்களைப் பேணிக் காக்கும் நிலையம்) மருத்துவம் கற்பிக்கும் சாலை முதலியவற்றை நிறுவிச் சிறப்புற நடத்திவந்த செய்தியையும், குழந்தைகளுக்குப் பால் வழங்குவதற்காக மணவில் கூத்தன் என்பான் ஓராயிரம் கறவைகளைக் கொடுத்தான் என்பதையும் இவற்றையொத்த பல செய்திகளையும் பல்வேறு கல்வெட்டுகள் நமக்குத் தெரிவிக்கின்றன. இத்தகு சமுதாயப் பணிகள், கல்வெட்டுகள், அளவிலேயோ, செப்புப் பட்டயங்களின் அளவிலேயோ நின்றுவிடாமல், திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து திருமண மண்டபங்கள், கல்லூரிகள், ஏராளமான உயர்நிலை ஆரம்பப் பள்ளிகள், நாதசுவரப் பள்ளிகள், ஊமையர், மற்றும் செவிடர்களுக்கான பள்ளிகள், சிறுவர் காப்பகங்கள், முதியோர் இல்லங்கள், மருத்துவ மனைகள், நூலகங்கள், அன்பு இல்லங்கள், ஆகியன எழுப்பப் பெற்றுக் கோயில்களுக்கும் குடிமக்கட்கும், கோபுரங்களுக்கும், குடிசைகளுக்கும் நல்லுறவை வளர்த்து வருகிற சூழ்நிலை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து உறுதிப்பட்டு வருவது பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரியதாகும்.



பொதுவாகப் பெற்றோரையும் சுற்றத்தார் தொடர்பையும் இழந்து, பேணுவோர் இன்மையால் பெருந்துயர்க்காட்பட்டு, இரந்துயிர் வாழ்தலன்றி எத்தகைய வழியுமில்லை என்னும் இழி நிலைக்குத் தள்ளப்பட்டு, சமுதாயத்தின் சார்பில், 'பாவப் பிறவி'களாகக் கருதப்படுகிற ஆதரவற்ற—அனாதைக் குழந்தைகளை அன்போடு அரவணைத்துப் பேணிக் காத்து வருகிற அன்பு இல்லங்கள் தமிழகத் திருக்கோயில்களின் சார்பில் 10 இடங்கள் நடைபெறுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் அண்மையில் வரலாற்றுப் புகழ் தேடிக்கொண்டுள்ள திருநெல்வேலி நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயிலின் சார்பில் இயங்கும் அன்பு ஆசிரமம். நெல்லையப்பர் திருக்கோயிலின் சார்பில், அன்பு ஆசிரமம் தவிர துவக்கப் பள்ளி, பெண்கள் உயர் துவக்கப்பள்ளி, திருஞான சம்பந்தர் பாலர் பள்ளி, இரண்டாயிரம் நூல்களைக் கொண்ட நூலகம் ஆகியனவும் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

நெல்லையப்பர் ஆலயத்தின் சார்பில் இயங்கும் அன்பு இல்லம் 1957-ஆம் ஆண்டு சூன் திங்களில் துவக்கப்பட்டது. திருநெல்வேலி அருகிலுள்ள பாளையங்கோட்டையில், ஆரோக்கியமான காற்றும் அமைதியான சுற்றுச் சூழலும் கொண்டு— உயர்ந்த நிலப் பகுதியாக விளங்கிய 13 ஏக்கர் பரப்புள்ள ஐலண்ட் கிரவுண்டில்தான் இந்த அன்பு இல்லமும், துவக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆகியவையும், அழகுற அமைந்துள்ளன. இவற்றிற்குப் பக்கத்தில் மருத்துவக் கல்லூரி, மாவட்ட மருத்துவ மனை, மாவட்ட உயர்தர அலுவலர் இல்லங்கள் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த அன்பு ஆசிரமம், பத்து வயதுக்குட்பட்ட 25 சிறுவர் சிறுமியருடன் ஆரம்பிக்கப் பட்டது. பிறகு, 5-வது வகுப் புக்கு மேல், பெண்கள் உயர் நிலைப் பள்ளியில் சிறுவர்களைச் சேர்த்துப் படிக்க வைக்க முடி யாத நிலை ஏற்பட்டதாலும், அன்பு இல்லத்தில் சேரத் தவிக் கும் பெண் குழந்தைகள் பெரு வாரியாகக் வளர்ந்து விட்டமை யாலும், அன்பு இல்லம் முழுக்க முழுக்கச் சிறுமியரையே சேர்த் துக்கொள்ளும் சிறுமியர் இல்ல மாக மாறி இப்போது 75 குழந் தைகளுடன் சிறப்பாக நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கு மாணவியர் முறையாகக் கல்வி கற்று வருகிறார்கள். ஆரம்பப் பள்ளியில், 5-வது வகுப்பை முடித்த மாணவியர் உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப் பட்டு, இறுதி வகுப்பு **வரையில்** பயில ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது. மாணவியரைக் கவனித்து வர ஒரு மேட்ரனும், இவர்களுக்கு உணவு தயாரிக்கப் பணியாள ரும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆரம்பப் பள்ளியின் தலைமை ஆசிரியையும், உயர்நிலைப் பள்ளி யின் தலைமை ஆசிரியையும் மாணவியரை நல்ல முறையில் கண்காணித்து அவர்களின் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று உதவி வருகிறார்கள்.

மாணவியர், காலையில் துயில் எழுகின்றனர். தமக்குரிய காலைக் கடன்களை முடிக்கின்றனர். பின் உடற் பயிற்சி செய்கிறார்கள். அதன் பின், குளியல், வழிபாடு முதலிய யாவற்றையும் முடித்துக் காலை உணவு அருந்துகின்றனர். பின் முதல் நாள், பள்ளியில் அவர்களுக்குக் கொடுத்துள்ள பணிகளை முடிக்கின்றனர். மதிய உணவருந்தி, இரவுச் சாப்பாட் டுத் தொடர்பான சில வேலைகளை யும் முடித்துவிட்டு, 2 மணிக்குப் பள்ளிக்குச் செல்கிறார்கள். மாலை யில் அவர்கள் தங்களுக்குரிய பல் வேறு விளையாட்டுக்களை விளை யாடுகின்றனர். அதன் பிறகு, பள்ளிப் பணிகளை முடித்து, மாலை 6 மணியிலிருந்து 6-30 வரை வழி பாடு செய்கின்றனர். 8 மணி வரை படிக்கின்றனர். பின்னர் இரவு உணவு அருந்திவிட்டு, 9-30 மணி அளவில் படுக்கைக் குச் செல்கின்றனர்.

அன்பு இல்லத்தின் **அரவணைப்** பில் உள்ள குழந்தைகளைப் பாது காக்க நெல்லையப்பர் திருக் கோயில் ஆண்டுதோறும் 8 ஆயி ரம் ரூபாய் வழங்குகிறது. கல்வித் துறை ரூ. 9 ஆயிரம் வழங்கு கிறது. இது தவிர தமிழர் திரு நாளில் திருக்கோயில், இல்லக் குழந்தைகளுக்குப் புத்தாடை கள் வழங்கி வருகிறது. சில பண் டிகை நாட்களில், தனியாரும் புத் தாடைகள், இனிப்பு முதலியன கொடுக்கிறார்கள். நெல்லை அரிமா சங்கம், சுழற் சங்கங்கள், மாதர் சங்கம், விஸ்வ இந்து பரி ஷத், வேளாளர் சங்கம் முதலி யனவும் குழந்தைகளுக்கு உண வும் உடையும் **வழங்குகின்றன.** நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவ ரும் மாவட்ட ஆட்சித் தலைவர் நிதியிலிருந்து **உதவி வழங்கியுள்** ளார்.

**அனாதைக் குழந்தைகள், இவ் வில்லத்தில் முதல் வகுப்பி லிருந்து பள்ளி இறுதி வகுப்பு வரை படித்து முடிக்க வாய்ப் பிருக்கிறது.**

தாய் தந்தையர்களை இழந்து, அன்பு இல்லத்தின் அரவணைப் பில் வளர்ந்து, 1969-ல் பள்ளி யிறுதி வகுப்பில் அதிக மதிப் பெண்கள் பெற்றுத் தேர்ச்சி யுற்ற செல்வி பவானியை, இல் லத்தின் நிருவாகத்தினர் சில தனிப்பட்ட செல்வந்தர்களின் உதவியை நாடிப் பெற்று, பி.எஸ்சி., படிக்க வைத்துள்ள னர். செல்வி பவானி இவ் வாண்டு பி.எஸ்சி., இறுதி யாண்டு முடித்துள்ளார்.

இந்த அன்பு இல்லம், திரு நெல்வேலி மாவட்டத்திலுள்ள அனாதைக் குழந்தைகளின் பரா மரிப்பு இல்லமாக மட்டுமே




அன்பு இல்லத்தின் அரவணைப்பில் உள்ள சின்னஞ்சிறு சிறுமியர்கள்.




திகழ்ந்த நிலை மாறி, அண்மையில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஏற்பட்ட கோரப் புயலின் காரணமாக அனாதைகளாகி விட்ட கற்பகம் (8 வயது), துரைராஜ் (10 வயது), நடராசன் (4 வயது) ஆகிய மூவரையும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அன்புடன் அளித்த அனுமதியோடு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. இந்தக் குழந்தைகளை இங்குக் கொண்டுவந்து சேர்த்துக்கொள்ளப் பெரு முயற்சி எடுத்தவர், நெல்லையப்பர் அறங்காவலர் குழுத் தலைவரும் நெல்லை நகர் மன்ற உறுப்பினரும் ஆன திரு. ப. இலக்குமணன் அவர்கள். இதுபற்றித் திரு. இலக்குமணன் அவர்கள் கூறுவதைக் கேளுங்கள்:

'' குழந்தைகள் அனாதைகளாக விடப்பட்ட செய்தியைப் பத்திரிகைகளில் படித்தேன்; ஏற்கனவே பாளையங்கோட்டையில் நெல்லையப்பர் கோயிலின் சார்பில், அன்பு அனாதை இல்லம் நடந்து வருகிறது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஏற்பட்ட புயலின் விளைவாக அனாதைகளாக விடப்பட்ட மூன்று குழந்தைகளையும், இங்குக் கொண்டுவந்து வளர்ப்பது பற்றியே நான் சில நாட்கள் இரவும் பகலும் சிந்தித்தேன். அதற்கு ஏற்றாற்போல் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், அனாதைகளைப் பொதுநல நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள முன்வரலாம் என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். நெல்லையப்பர் கோயில், நிருவாகம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாக உடனடியாக நான் தகவல் அனுப்பினேன்.

இங்குள்ள இல்லத்தில் அனாதைப் பெண் குழந்தைகளை மட்டுமே சேர்த்துக்கொள்வது என்ற பொது விதி இருந்தும், இவர்கள் மூவரும் ஒன்றாக வளர்ந்து, ஒரே நேரத்தில் அனாதையாகிவிட்ட காரணத்தினால், அவர்களைப் பிரிவுத் துயர் அணுகாமலிருக்க சோகத்தை மறைக்க மூவரையும் இங்கேயே சேர்த்து வளர்ப்பது என்று முடிவு செய்தேன்.''

நாள் வழிபாட்டின்போது,

'' தந்தைமுகம் தாயின்
முகம்
கண்டறியோமே—மனச்
சாந்திதரும் இனிய
சொல்லை
கேட்டறியோமே ''

என்று அந்தக் குழந்தைகள் பாடுகின்றனர். அன்பு இல்லந்தான் அவர்களுக்குத் தாயும் தந்தையுமாக இருந்து அவர்களைப் பாதுகாத்து அன்போடு புரந்து வருகின்றதே, அப்படியிருக்க, அவர்கள் ஏன் இந்தப் பாடலை இன்னும் பாடிக்கொண்டிருக்க வேண்டும்? ஒருவேளை, அவர்கள் பள்ளியிறுதி வகுப்புப் படித்து முடித்த பின் தங்கள் நிலை என்னவாகும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இப்படிப் பாடுகின்றனரோ என்னவோ? எது எப்படி இருந்தாலும், அந்த அச்சத்திற்கும் இனி அவசியமில்லை! ஏனென்றால் நெல்லையப்பர் கோயிலின் சார்பில் மகளிர் கல்லூரி ஒன்று துவக்கும் திட்டம் தமிழக அரசின் ஆய்வில் உள்ளது. தன்னுடைய 4 குழந்தைகளையும், இல்லத்திலுள்ள 75 குழந்தைகளையும் சேர்த்து, 'எனக்கு மொத்தம் 79 குழந்தைகள்' என்று பெருமையோடு கூறிக்கொள்ளும் பள்ளித் தலைமை ஆசிரியையின் தாயன்பும், நெல்லையப்பர் கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. இலக்குமணன் அவர்களின் அக்கறையும் நல்லன்பும் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு நல்லாதரவாக இருக்கும்போது அந்தக் குழந்தைகள் எதற்காகக் கவலைப்பட வேண்டும்?

—சாமி. பழ.



## தலைமை அலுவலகம்

உலகச் சுற்றுலா நிறுவனத்தின் தலைமை அலுவலகம் இந்தியாவில் நிறுவப்பட வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. இதற்காக இந்தியா மற்ற நாடுகளுடன் முனைந்து போட்டியிடுகிறது. இந்த நிறுவனத்தின் தலைமை அலுவலகம், இந்த ஆண்டு இறுதிக்குள் நிறுவப்படும்.

வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில்தான் அனைத்து நாட்டு நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள் பல இருக்கின்றன; ஆகையால், சில தலைமை அலுவலகங்களை, வளர்ந்து வரும் நாடுகளில் அமைப்பது மிகவும் சிறப்பான செயல் என்ற கருத்து நிலவுகிறது. உலகப் போக்குவரத்து வழிகளில், இந்தியா நடுநாயகமாக அமைந்துள்ளதால், உலகச் சுற்றுலா நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தை இந்தியாவில் நிறுவுவது மிகவும் பொருத்தமான செயல் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1968-ஆம் ஆண்டில் இந்தியா-ஜெனிவாவில் சுற்றுலாத் துறை ஒன்றை ஏற்படுத்தியதன் மூலம் இந்தியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.



# தமிழரசு

## சந்தா விவரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 10-00 |
| அரையாண்டுச் சந்தா | ரூ. 5-00 |
| தனி இதழ் | 40 காசு. |

# வெண்பாப் போட்டி 59

உழுபவர்க்கே நிலத்தில் சொந்தம் என்னும் ஒப்பரிய கொள்கையைத் தமிழ்நாடு அரசு நடைமுறைக்குக் கொண்டுவரும் அரிய தொண்டு குறித்தும், இந்தத் திட்டத்தால் உழுவோர் பெறும் உரிமை குறித்தும் நேரிசை வெண்பா எழுதி அனுப்புக.

**முடிவு நாள் : 16—7—1973.**

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),

தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.


உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல் பெருக அதற்கு

**'ப்ளேநோ:பிக்ஸ்'.** தேவை.

சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள் "ப்ளேநோ:பிக்ஸ்" உபயோகித்தீர்களானால், பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து, மகசூலைப் பெருக்க முடியும். பருத்திப் பயிரிலே "ப்ளேநோ:பிக்ஸ்" மருந்தைப் பல்லாண்டுகள் பயன்படுத்தியதிலே, திருப்திகரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன.

அசல் தயாரிப்புத்தானா என்று பார்த்து உபயோகியுங்கள்... மாற்றுக்களை ஏற்று ஏமாறாதீர்கள். உங்கள் பயிர் ஓர் ஒப்பில்லாச் செல்வம்.



M&B May&Baker

**மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.**

பம்பாய். கல்கத்தா. கௌஹாத்தி. இந்தோர்
லக்னோ. சென்னை. நியூடெல்லி. பாட்னா.

"ப்ளேநோ:பிக்ஸ்" என்பது ஒரு எம் & பி. ரகத் தயாரிப்பு. * டிரேடு மார்க்



# பென்சில் வரலாறு



"அண்ணு, அண்ணு! கொஞ்சம் பென்சிலைக் கொடுங்களேன். இந்தப் படத்தை வரைந்துவிட்டுத் தந்து விடுகிறேன்!'' என்று மாதவி தன் அண்ணனிடம் கெஞ்சினுள்.

''ஒன்றென்ன? ஒரு டசனே தருகிறேன். மாடிக்கு வா!'' என்று சொல்லிக் கொண்டே மாதவியின் அண்ணன் இளங்கோ மாடிப்படிகளில் 'விறுவிறு'வென ஏறினுன். அவனைப் பின் தொடர்ந்தாள் மாதவி.

மாடியில் இளங்கோவின் தனியறை! புத்தகங்களும், அழகிய இயற்கைக் காட்சிப் படங்களும் அந்த அறையை அலங்கரித்தன. ஒரு பக்கமிருந்த புத்தரின் அரை உருவச் சிலை, அவன் அமைதியை விரும்புபவன் என்பதைக் காட்டிக் கொண்டிருந்தது. அதே சமயம் அவன் ஒரு புத்தகப் பிரியன் என்பதையும் அந்த அறை காட்டிக் கொடுத்தது.

''என்ன அண்ணு? எங்கே பென்சில்?'' இளங்கோவின் சிந்தனையைக் கலைத்தாள் மாதவி.

''இதோ, உனக்குத் தேவையான கலர் பென்சில்கள்!'' என்று ஒரு டசன் வண்ணப் பென்சில்கள் உள்ள அழகிய அட்டைப் பெட்டியைத் தன் தங்கையிடம் கொடுத்தான். அவள் மிக்க மகிழ்ச்சியோடு அதனைப் பெற்றுக்கொண்டு, ''இத்தனை நாள் இதை எங்கே ஒளித்து வைத்திருந்தீர்கள்?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

அதற்கு இளங்கோ, ''என்னிடந்தான் ஒளிவு மறைவே கிடையாது என்பது உனக்குத் தெரியாதா என்ன? இந்தப் பென்சில்களை நேற்றுத்தான் பென்சில் பாக்டரியில் வாங்கி வந்தேன்'' என்றுன்.

''என்ன? பென்சில் பாக்டரியிலா?''

''ஆமாம், மாதவி! 'ஸ்டாண்டர்டு பென்சில் பாக்டரி'யை நீ கேள்விப் பட்டிருக்கிருயா? அங்குதான் இதை வாங்கி வந்தேன்!'' என்றவன், கண்ணுக்கு மை தீட்டும் கோலையும், நெற்றியில் பொட்டு வைத்துக்கொள்ளும் கோலையும் அவளிடம் தந்தான். அதை மகிழ்வுடன் பெற்றுக்கொண்ட அவள் ''பென்சில் பாக்டரியில் இதைக் கூடவா தயாரிக்கிருர்கள்?'' என்று கேட்டாள்.

''ஆமாம். அதையெல்லாம் சொன்னுல் ஒரு கதை போலாகிவிடும். இப்போது நீ பள்ளிக்குப் போகவேண்டாமா? நாளைக்குத் தான் ஞாயிற்றுக் கிழமையாயிற்றே! அப்போது ஆற அமர அந்தக் கதையைச் சொல்கிறேன்!'' என்ற இளங்கோ அவள் பள்ளி போகத் துரிதப்படுத்தினுன்.

**அன்று ஞாயிற்றுக்கிழமை!**

மாலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு இளங்கோ, மாதவி, அவர்கள் அம்மா ஆகிய மூவரும் மொட்டை மாடியில் வந்து அமர்ந்தனர். மாதவியைப் போல் அவள் அம்மாவும், நல்ல செய்திகளைக் கேட்டு அறிந்து கொள்வதிலே விருப்பமுடையவள். முதலில், மாதவி பேச்சை ஆரம்பித்தாள்.

''ஸ்டாண்டர்டு பென்சில் பாக்டரி எங்கே இருக்கிறது அண்ணு? அங்கே எத்தனைபேர் வேலை செய்கிருர்கள்?''

''கிண்டி தொழிற்பேட்டையில் இந்தத் தொழிற்சாலை இருக்கிறது. 1959-இல் சென்னை, பல்லாவரத்தில் ஒரு சிறு அமைப்பாகத் தொடங்கி, இன்று ஒரு பெரிய அமைப்பாகத் திகழ்கிறதென்றுல் அதற்குக் காரணம், விடாமுயற்சியும், உழைப்புமே ஆகும். தமிழ்நாடு அரசு, தொழில் தொடங்குபவர்களுக்குத் தேவையான இடத்தையும் பிற வசதிகளையும் கொடுக்கக் கிண்டி தொழிற்பேட்டையை உருவாக்கியது பற்றி முன்பு சொல்லியிருக்கிறேன் அல்லவா? பல்லாவரத்திலிருந்த இந்தத் தொழிற்சாலை 1960-ல் இங்கு வந்து இன்றளவும் சிறப்பாக வளர்ந்து வருகிறது. தற்போது இந்தத் தொழிற்சாலையில் 100 பேர் பணிபுரிகின்றுர்கள்''

எழுதுவதற்குப் பயன்படுவது பென்சில். இதனைப் பண்டைய எகிப்தியரும், உரோமானியரும் காரீயத்தால் செய்து பயன்படுத்தினர். ஆனுல், இன்று, பென்சிலில் காரீயமில்லை: கிராபைட் என்னும் தூரிய படிவப் பொருள் பயன்படுத்தப் படுகிறது. இது மென்மையாகவும், கருமையாகவும் எழுதப் பயன்படுகிறது. இயற்கையான கார்பன் என்னும் பொருளின் ஒருவகை உருவமே கிராபைட்டாகும். இதை ஏறக்குறைய 1500 ஆண்டுகளுக்கு முன்னரே பயன் படுத்தத் தொடங்கினர்.

1800-ஆம் ஆண்டு வரையிலும் பென்சில்கள் பெரும்பாலும் இங்கிலாந்து, செர்மனி, பிரான்சு ஆகிய நாடுகளிலிருந்தே நமக்குக் கிடைத்தன. 1812-ல் வில்லியம் மன்றோ என்பவர் வாணிப முறையில் கண் கார்டு மாஸ் என்னும் இடத்தில் இதனை உற்பத்தி செய்தார்; பின் 1856-ல் செர்மானியர் ஒருவர் அதற்கு ஒரு கிளைத் தொழிற்சாலையை யாங்கர்ஸ் என்னும் இடத்தில் அமைத்தார். அதுவே அமெரிக்கரின் முதல் பென்சில் தொழிற்சாலையாய் அமைந்தது! இப்போது பென்சில் தொழிலில் முன்னணியில் நிற்பது அமெரிக்காவே ஆகும்.

சாதாரணமான பென்சில்கள் சிறிய நுண்ணிய கார்பைட்கம்பிகளால் மரத்தால் மேற்பாகம் அமைக்கப்பட்டு குழாய்கள் கொண்டு செய்யப்படுகின்றன. இம்முறையை 1791-ல் பிரான்சு நாட்டில் நிக்கோலாஸ் ஜாக்குஸ் கோண்டி என்பவர் கண்டுபிடித்தார்.



பென்சில்கள் 'பாக்கிங்' செய்யப்படு கின்றன.

''பென்சிலை எப்படிச் செய்கிறார்கள்?'' என்ற அம்மாவின் கேள்விக்கு இளங்கோ பதில் சொன்னான்.

''அதைத்தானே இப்போது சொல்லப் போகிறேன்? முதலில் பென்சிலுக்குத் தேவையான மூலப் பொருள்கள் என்னென்ன என்பதைத் தெரிந்து கொள்வோம். முக்கியமாகப் பென்சிலுக்கு மூன்று பொருள்கள் தேவைப் படுகின்றன. அவை 'சீடார்' என்னும் ஒரு வகைமரம்: 'கிராபைட்' என்னும் தூள். இதைக் கரியம் என்பார்கள்; மற்றும் களிமண் . . . .''

''சீடார் மரம் எங்கிருந்து நமக்குக் கிடைக்கிறது, அண்ணா?''

''இந்த மரம் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப் படுகிறது. சிறுசிறு பலகைத் துண்டுகளாக அங்கிருந்து வருகிறது''

''இந்தியாவில் இந்த மரம் கிடைக்காதா?'' என்றாள் அம்மா.

''இந்தியாவில் உத்தரப்பிரதேசம், இமாசலப் பிரதேசம் கேரளா ஆகிய மாநிலங்களிலிருந்தும் கிடைக்கின்றன. ஆனால் அவை அவ்வளவு தரமில்லை என்று சொல்லுகிறார்கள். எழுதப் பயன்படும் 'கிராபைட்' என்னும் கரியம் ஜெர்மனி, இலங்கையிலிருந்தும், இந்தியாவில் பீகாரிலும் கிடைக்கிறது.'

''பென்சிலுக்குக் களிமண் எதற்கு அண்ணா?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் மாதவி.

'மரத்தோடு ஒட்ட வைக்கத்தான் இந்தக் களிமண் பயன்படுகிறது. கரியத்தைக் களிமண்ணோடு கலந்து, நன்றாக அரைத்து உருண்டைகளாக்குகின்றனர். இப்படிக் கலக்கவும், அரைக்கவும், உருண்டைகளாக்கவும் இயந்திரங்களே பயன்படுகின்றன. இந்த உருண்டையை ஒரு இயந்திரம் சேமியா பிழிவதைப் போலப் பிழிந்து கொண்டே இருக்கிறது! நீண்ட கம்பிபோல, அந்த இயந்திரத்திலிருந்து இந்தக் கிராபைட்-களிமண் கலவை வந்து கொண்டே இருக்கிறது. அந்தக் 'கம்பி'யை ஒரு நீண்ட மரத்தட்டில் ஒரே அளவாக வெட்டி வெட்டி வரிசையாக நிரப்பிக் கொள்கிறார்கள் . . . .''

''அந்தக் 'கம்பி'தான் எழுதுகிறதா அண்ணா?'' மாதவி கேட்டாள்.

''ஆமாம், மாதவி! கிராபைட்-களிமண் கலவை பச்சையாக இருக்குமல்லவா? அதை வளைவு நெளிவு இல்லாமல் சமப்படுத்திக் காயவைத்தால்தானே அது கெட்டியாகும்? அந்த வேலையும் இங்கே உடனுக்குடன் நடைபெறுகிறது'

''எவ்வளவு நேரம் இந்தக் 'கம்பி'கள் காய வைக்கப் படுகின்றன?'' என்று அம்மா கேட்டாள்.

''ஒரு நாள் முழுவதும் இவை நன்றாக மரத் தட்டுகளில் காய வைக்கப்படுகின்றன. பிறகு இந்தக் 'கம்பி'கள் பென்சில் அளவுக்கு வெட்டப்பட்டுச் சூளையிடப்படுகின்றன''

''என்ன, சூளையா? மட்பாண்டங்களைச் சூளை இடுகிறார்களே அப்படியா?'' மாதவி கேட்டாள்.

''ஆமாம். செங்கல்லில், காய வைக்கப்பட்ட கரியம் கனத்தில் பள்ளமாகக் கீறப்பட்டிருக்கும். அந்தப் பள்ளத்தில் கரியங்களைப் பொருத்தி வைப்பார்கள். பிறகு அடுப்பில் செங்கற்களை அடுக்கி வைத்துச் சூளை இடுவார்கள். ''

''இப்படிச் சூளையிட்ட கரியம் எழுதினால் எழுதுமா?'' அம்மா கேட்டதற்கு இளங்கோ பதில் சொன்னான்:

'' சூளையிட்ட கரியங்கள் எழுதாது. கிறுக்கும். இந்தக் கிறுக்கைப் போக்க ஒரு வழி இருக்கிறது. அதுதான் கொழுப்பும், மெழுகும் . . . .''

''என்ன, கொழுப்பா? எழுதுகிற பென்சிலுக்கு ஏனண்ணா கொழுப்பும், மெழுகும்?''

''அப்படிக் கேள் மாதவி! ஒரு சிறிய இரும்புத் தொட்டியில் மாட்டுக் கொழுப்பையும், பாரஃபின் மெழுகையும் ஒன்றாகக் கலந்து அதை மின்சார அடுப்பில் வைத்து நன்றாக உருக்கப்படுகிறது. இந்த மெழுகு அசாமிலிருந்து நமக்குக் கிடைக்கிறது. சூளையிலிருந்து வந்த கரியம் துண்டுகள் நன்றாக உருகிக் கொண்டிருக்கும் கொழுப்பு-மெழுகுக் கலவையில் ஒரு மணி நேரம் அமுக்கி வைக்கப்படுகின்றன. இப்படிச் செய்வதால் கரியம் மழமழப்பாகிறது. எளிதாக எழுதுவதற்குப் பக்குவமாக்கப்படுகிறது. இவை பிறகு நன்றாக எழுதுகின்றதா இல்லையா என்று பரிசோதிக்கப்பட்டு, மர வேலைப் பிரிவுக்கு அனுப்பப்படுகின்றன . . . .''



மரப்பலகைகளில் பென்சில் கரியங்கள் பொருத்தப்படுகின்றன.

''மரவேலைப் பிரிவில்தான் பென்சில்கள் உருவாகின்றனவா, அண்ணா?''

''ஆமாம், மாதவி! மரப்பலகைகளில் கரியம் கனத்திற்கு நீண்ட கோடுகளாகக் கீறல் செய்து பள்ளம் உண்டாக்குகிறது ஓர் இயந்திரம். கீறல் விழுந்த அந்தப் பலகை முழுவதும் பசை தடவப் படுகிறது. பசை தடவிய ஒரு பலகையில் கீறல் விழுந்த இடத்தில் கரியம் பொருத்தப்படுகிறது. இதே மாதிரி கீறல் விழுந்த, பசை தடவிய இன்னொரு பலகையை அதன்மேல் நன்றாக ஒட்டவைத்து விடுகிறார்கள்''

''பிறகு அதைத் தனித்தனியாகக் கையால் அறுத்துக் கொள்வார்களா?'' அம்மா கேட்டாள்.

''இல்லை அம்மா! எல்லா வேலையையும் இயந்திரமே கச்சிதமாகச் செய்து முடிக்கிறது. ஒட்ட வைத்த மரப்பலகைகள் ஓர் இயந்திரத்தில் அடுக்கி வைக்கப் படுகின்றன. கண்மூடிக் கண் திறக்கும் நேரத்தில் பென்சில்கள் உருவாகி வெளியே வருகின்றன!''

''சரி. பென்சிலின் மேலே பச்சை, மஞ்சள், சிவப்பு என்று வண்ணம் பூச வேண்டுமே, இதைக் கையால்தானே பூச வேண்டும்?'' என்று மாதவி ஒரு பென்சிலைக் காட்டிக் கேட்டாள்.

''ஒவ்வொரு பென்சிலுக்கும் கையினால் வண்ணம் பூசிக்கொண்டிருந்தால், ஒரு நாளைக்கு இங்கே 750 குரோஸ் பென்சில்களைத் தயாரிக்க முடியுமா?'' என்று கேட்டான் இளங்கோ.

''அப்படியானால் வண்ணம் பூசுவதும் இயந்திரந்தானா?''

''ஆமாம் மாதவி! பென்சில்கள் ஒரு இயந்திரத்தில் ஒழுங்காக அடுக்கிவைக்கப்படுகின்றன. ஒவ்வொரு பென்சிலும் வண்ணக் குழம்பு உள்ள பாகத்துக்குத் தள்ளப்பட்டு, வண்ணம் பூசப்பட்டு, வெளியே புதுப்பொலிவோடு வருகிறது! கண்ணுக்குக் கவர்ச்சியூட்டும் நீண்ட, வளைந்த வண்ணக் கோடுகளைக்கூட இயந்திரமே போடுகிறது. இந்த வேலை மின்னல்போல் நடக்கிறது.

'' இதற்குப் பிறகுதான் பென்சில்கள் விற்பனைக்குக் கடைக்கு வருகின்றனவா?'' என்று அம்மா கேட்டாள்.

''அதற்கு இளங்கோ, ''இல்லை அம்மா! வண்ணந் தீட்டிய பென்சில்கள் ஓர் இயந்திரத்தில் அடுக்கப்பட்டு மேலும் கீழும் ஒழுங்காக வெட்டப்படுகின்றன. இதற்குப் பிறகு பென்சில் பாக்டரியின் பெயரும், பென்சிலின் தரத்தையும் குறித்த எழுத்துக்கள் பொறிக்கப்படுகின்றன '' என்றான்.

''பென்சிலின் தரம் என்றால் என்ன அண்ணா?'' என்று மாதவி தன்னிடமுள்ள பென்சிலைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கேட்டாள்.

''சில பென்சில்கள் கருமையாக எழுதும்; சில பென்சில்கள் கருமையாக எழுதாது. அதாவது எழுதுகின்ற கரியம் மென்மையானதா, கடினமானதா என்பதைக் குறிக்க எச்.பி. என்ற எழுத்துக்கள் பென்சிலில் பொறிக்கப்பட்டிருக்கும். எச். (Hard) என்பது கரியத்தின் கடினத்தையும், பி. (Black) அதன் கருமையையும் குறிக்கும்'' என்று இளங்கோ சொன்னதும் மாதவி, தன் பென்சிலில் உள்ள எச்.பி. என்னும் எழுத்தைப் பார்த்தாள். இளங்கோ மேலும் தொடர்ந்தான்:

''பென்சில்களில் எழுத்துக்களைப் பொறிப்பதும் இயந்திரமே! இதற்குப் பிறகு தான் பென்சில்கள் டசன் கணக்கில் விதவிதமான அட்டைப் பெட்டிகளில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. அட்டைப் பெட்டிகளில் பென்சில்களை அடைக்கும் வேலை மிக்ச் சுறுசுறுப்பாக நடைபெறுவதை நேரில் கண்டு மகிழ வேண்டும்!''

''கலர் பென்சில்கள் எப்படித் தயாரிக்கிறார்கள் அண்ணா?''

''அதுவும் இதேபோலத்தான்,



கருவியின் மூலம் பென்சில்களுக்கு வண்ணம் தீட்டப்படுகிறது.

மாதவி! இந்த வகைப் பென்சில்களுக்குச் சைனுக் களிமண்ணை உபயோகிக்கிறார்கள். இந்த மண் கேரளாவில் அதிகம் கிடைக்கிறது. நெய்வேலியிலும், இராஜஸ்தானிலும் இது ஓரளவு கிடைக்கிறது. பாதி சிவப்பும் பாதி நீலமும் கலந்த பென்சில்கள், முழுவதும் சிவப்பு நிறமுள்ள பென்சில்கள், காப்பியிங் பென்சில்கள் இப்படிப் பல வகையான பென்சில்கள் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. காப்பியிங் பென்சிலால் எழுதுவதை எளிதில் அழிக்க முடியாது என்பது உனக்குத் தெரியுமல்லவா? இத்தகைய பென்சில்களுக்குத் துணிக்குப் போடும் அழியாத சாயத்தை உபயோகிக்கிறார்கள் ....''

'' சாதாரணமாக ஒரு பென்சிலின் விலை எவ்வளவு இருக்கும் அண்ணா?'' என்று மாதவி கேட்டாள். அதற்கு அம்மா, ''ஆமாம் டசன் டசனாக வாங்கப் போற மாதிரி விலையைக் கேக்கறா '' என்றாள் சலித்துக் கொண்டே.

''விலையைத் தெரிந்து கொள்வதில் என்னம்மா தப்பு? சாதாரணமாக ஒரு பென்சில் விலை 10 காசிலிருந்து 50 காசு வரை இருக்கிறது. இங்குத் தயாரிக்கப்படும் பென்சில்கள் தரமாக இருப்பதால் இதற்கு இந்தியா முழுவதும் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது'' என்றான் இளங்கோ.

''இந்தப் பென்சில்கள் எங்கெல்லாம் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன?'' மாதவி கேட்டாள்.

''தமிழ்நாடு அரசு அலுவலகங்களுக்கும், இதேபோல் ஆந்திரா, கேரளா, மைசூர், பீகார், ஒரிசா, மேற்கு வங்காளம், இராஜஸ்தான், அரியானா, பஞ்சாப் முதலிய அரசு அலுவலகங்களுக்கும் இந்த ஸ்டாண்டர்டு பென்சில்கள் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன''

''சில பென்சிலில் ரப்பர் பொருத்தப்பட்டு இருக்கிறதே, அந்த மாதிரியான பென்சில்கள் இங்குத் தயாரிப்பதில்லையா?'' என்று அம்மா கேட்டாள்.

'' ரப்பர் இணைந்த பென்சில்களும் இங்குத் தயாராகின்றன. சென்னையில் 'அபயநிலையம்' என்று ஒன்றிருக்கிறது. இங்கு வாழ்விழந்த பெண்களுக்குப் புகலிடம் அளித்து, அவர்களுக்குக் கைத்தொழில்கள் முதலானவை கற்றுத் தரப்படுகின்றன. அந்தப் பெண்களுக்கு வேலை தரவும், அதே சமயத்தில் வருவாய் தரும் நோக்கோடும் இந்தத் தொழிற்சாலையினர், பென்சில்களுக்கு ரப்பர் பொருத்தும் வேலையை அவர்களுக்குத் தந்துதவுகின்றனர்''. என்று இளங்கோ சொன்னதும், ''நல்ல காரியம் தான் செய்கிறார்கள்'' என்று பெருமிதப்பட்டாள் அவன் அம்மா.

உடனே மாதவி, '' என்னைப் போல எத்தனையோ மாணவ, மாணவிகள் அன்றாடம் பென்சில்களை உபயோகிக்கிறார்கள். ஆனால், பென்சிலின் வரலாறு எத்தனை பேருக்குத் தெரிந்திருக்கப்போகிறது? இன்று இந்த உண்மைக் கதையை நான் நன்கு தெரிந்து கொண்டேன், அண்ணா! ஒரு வேண்டுகோள்! என்னை ஒரு நாள் அந்தத் தொழிற்சாலைக்கு அழைத்துப் போவீர்களோ?" என்று வேண்டினாள்.

அதற்கு இளங்கோ, ''மாதவி! பள்ளியின் மூலமாகவே அதை நீ பார்க்கலாமே! எத்தனையோ பள்ளிக்கூட மாணவ, மாணவிகள் ஒன்றாகச் சேர்ந்துவந்து நாள்தோறும் இந்தத் தொழிற்சாலையைப் பார்த்தவண்ணமிருக்கின்றனராம். உங்கள் பள்ளித் தலைமையாசிரியர்தான் எனக்கு நண்பராயிற்றே. அவரிடம் சொல்லி இதற்கு ஏற்பாடு செய்கிறேன். போதுமா? '' என்று சொன்னதும் மாதவி மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தாள்.

—பி.வி.ஜி.

# வன்முறைக் கூட்டத்தைக் கலைக்கும் சாதனம்..

வன்முறையில் ஈடுபட்டுள்ள கூட்டத்தினரை, தடியடி செய்யாமல் அல்லது கண்ணீர்ப் புகைக் குண்டை வெடிக்காமல் எளிதில் கலைந்து செல்லச் செய்வதற்குப் பிரிட்டனில் ஒரு சாதனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

"புதிய விஞ்ஞானிகள்" என்ற இதழின் கூற்றுப்படி அந்தச் சாதனம் கூட்டத்தினரின் உள்ளத்தில் திடீரென்று ஓர் பய உணர்ச்சியைத் தூண்டிவிடுகிறது. கூட்டத்தினரில் 5 சத அளவினருக்கு நரம்பு மண்டலம் இயங்காததால் வலியுடன் கூடிய இழுப்பு ஏற்படுவதால் "திடீர் பயம்" (Panic) ஏற்பட்டுவிடுகிறது. மீதி உள்ளவர்கள் ஏதும் பேசாவிட்டாலும் அல்லது கேட்காவிட்டாலும், தங்களுடைய காதுகளில் பலமான இதயத் துடிப்புக் கேட்பதுபோலவும், கண்களில் மிகவும் பிரகாசமான ஒளி தெரிவது போலவும் உணர்கின்றார்கள்.

இதனால் கூட்டத்தில் நான்கில் ஒரு பங்கினர் திடீரென நோய்வாய்ப்படுவதால் ஏற்படும் பயத்தின் காரணமாகக் கலைந்துவிடுகின்றனர்.

காவல் துறையினருக்கும் இராணுவத்தினருக்கும் பெருமளவில் கருவிகளை வழங்கி வரும் ஒரு நிறுவனத்தினரே இச்சாதனத்தைத் தயாரித்துள்ளனர்: தடியடி செய்தல், கண்ணீர்ப்புகைக் குண்டு வெடித்தல் போன்றவைகளைவிடக் குறைந்த அளவு தீமையே விளைவிக்கக் கூடியதாக் இச்சாதனம் இருப்பதால், இதை ஒரு "அகிம்சை ஆயுதம்" என்றே இதன் தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர்.





# அலைகள்

அலைகளே ! நீர்மேல் ஆடுந் தண்ணீர்
மலைகளே ! கடலின் மந்திரக் கைகளே !
விந்தை புரிந்து வீசுங் காற்று
நித்தந் திரிக்கும் நீர்க்கயி றுகளே !
காற்றெனுங் கயவன் கடலாம் கன்னியின்
மேற்புறம் உரியும் வெள்ளிய துகில்களே !
இமைப்பதற் குள்ளே எழுந்து, சுழன்று
நிமிர்ந்து வெடிக்கும் நீர்க்குன் றுகளே !
தர்க்கக் கடலின் தத்துவ உரைகளே !
சொர்க்கப் படுக்கையில் சுருட்டிய பாய்களே !
கரையில் தற்கொலைக் காரியம் நடத்தல்
முறையா ? சரியா ? முடிவுரை என்ன ?
முந்தியே சென்று முதலில் மடியப்
பந்தயம் போடும் பால்நிறத் திரைகளே !
காரணம் கேட்கிறேன் கடும்போர் எவரொடு ?
பூரதம் போலே புறப்பா டெங்கே ?
விம்மித் தாழ்ந்த வெண்நுரை அலைகளே !
தம்பலம் காட்டும் தண்ணீர் வெடிகளே !
கடலெனும் மேடையில் கைகளைத் தூக்கி
உடலினை உயர்த்தி ஒருபுறஞ் சாய்த்து
நடமிடு கின்ற நாட்டியப் பெண்களே !
அடம்பிடிக் கின்றீர் ஆமாம் ! யாரொடு ?
கடல்நீர் விழாவில் கரக ஆட்டம்
நடத்தித் தோற்கும் நாடகக் குழுக்களே !
கருப்புக் கடலது காசநோ யாலே
இருமித் துப்பும் எச்சில் மலைகளே !
வாழ்வினை உணர்த்தும் மாய நிழல்களே !
ஆழ்கடல் பூமியின் அடிவரு டிகளே !
கறுப்புக் கடற்றயிர் கடையப் படுகையில்
தெறித்த வெண்ணெய்த் திரைகளின் நுரைகளே !
பொன்மீன் களையே புறத்தே கொணரும்
தன்மையால் நீங்கள் தண்ணீர் வலைகளே !
நெளிந்து வளைந்து நீர்க்கரை மணலினை
அளந்து பார்க்கவா ஆடி வருகிறீர் ?
தனிமையில் உமது தடங்களைத் தடவினேன்
இனிமையின் தவிப்பும் எழுந்ததே ; உம்மைப்
பார்த்துப் பார்த்துப் பலநாள் ஏங்கி
வேர்த்துக் கிடக்கிறேன்; விழிகளை நனைப்பீர் !

இரா. வைரமுத்து

# இரத்தக் கொதிப்பு...

"என் ரத்தம் கொதிக்குதடா நீ செய்த செயலை நினைத்தால்"—தந்தை இப்படிச் சீறுகிறார்.

மகன் அதைப்பற்றிக் கவலைப் படாமல்—இலட்சியம் செய்யாமல்—முகத்தைச் சுண்டிவிட்டு வேகவேகமாகச் செல்கிறான்.

அந்தக் காட்சியைக் கண்டதும் தந்தையின் உள்ளம் மேலும் நோகிறது. படபடப்பு வருகிறது. அப்படியே சாய்கிறார். இரத்தக் கொதிப்பு ஏற்படுகிறது. உடனே டாக்டர் வரவழைக்கப் படுகிறார்.

* * *

வெளியிற் சென்றிருந்த ஒரு முதலாளி வீட்டுக்குத் திரும்பி வருகிறார். ஆசையோடு அவரை வரவேற்கும் மனைவி, சற்று முன்பு தொலைபேசியில் கிடைத்த செய்தியைக் கணவரிடம் கூறுகிறாள்.

"உங்க பாகஸ்தர் பார்த்த சாரதி மேலெ நீங்க போட்டிருந்த வழக்கு, தோத்துப் போச்சாம்; வக்கீல் குமாஸ்தா போன் செய்தார்".

மறுவினாடி, முதலாளி தள்ளாடுகிறார். படபடப்புக்கு ஆளாகிறார். இரத்தக் கொதிப்பு ஏறுகிறது. கட்டிலில் சாய்கிறார். வீடே ரணகளப்படுகிறது.

நாள்தோறும் இப்படி எத்தனையோ பேர், இரத்தக் கொதிப்பு நோய்க்கு உட்பட்டுத் துடிக்கிறார்கள்

நமது நாட்டில் மட்டுமல்ல—உலகத்தில் உள்ள எல்லா நாடுகளிலும் இரத்தக் கொதிப்பு நோய்க்கு மனிதர்கள் உட்படத்தான் செய்கிறார்கள். நமது இந்திய நாட்டில், மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக வருகின்ற மக்களில் 4 அல்லது 5 சதவிதத்தினர், இரத்தக் கொதிப்பு நோய்க்கு ஆளானவர்கள். இதய நோய்களினால் வருந்துபவர்களிலும் ஏறக்குறைய 20 முதல் 30 சதவிதத்தினர் இரத்தக் கொதிப்பு நோய்க்கு ஆளானவர்கள்தாம்.

இரத்தக் குழாய்களில் இரத்தம் பாயும்போது, குழாய்களின் சுவர்களில் அழுத்தம் மிகுதியாவதால் இரத்த அழுத்தம் சாதாரணமாக இருப்பதைவிட அதிகரித்து, இரத்தக் கொதிப்பு ஏற்படுகிறது. உயர் இரத்த அழுத்தம் எப்போதும் நிலையாக இருப்பதில்லை. துவக்கத்தில் உயர் இரத்த அழுத்தம் பெரிதும் மாறுபடுகிறது. நெருக்கடி நிலைகளும், கவலையும் சாதாரண மனிதர்களின் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கின்றன. இத்தகைய நிலைகளால் திடீரென்று இரத்தக் கொதிப்பு ஏற்பட்டு வீணான கவலையை உண்டாக்குகிறது. இரத்த அழுத்தம் அதிகரிப்பதற்குக் காரணமாக இருந்த கவலை நிலை நீங்கிவிட்டால் அல்லது நோய்தடுக்கும் மருந்து சாப்பிட்டால் இரத்த அழுத்தம் சிறிது நேரத்தில் சாதாரண நிலைக்குத் திரும்பிவிடுகிறது.

பதட்டம் இல்லாமல் இருக்கும்போதுதான் இரத்த அழுத்தத்தைப் பரிசோதிக்க வேண்டும். காலை நேரத்தில் படுக்கையைவிட்டு எழுந்திருப்பதற்கு முன்னால் இரத்த அழுத்தத்தைப் பரிசோதிக்கவேண்டும். காலை நேரத்தில் படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்கு முன்னால் இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துகொள்வது நல்லது. பரிசோதனையின்போது உயர் அழுத்தம் பதிவாகியிருந்தால், ஐந்து நிமிட இடைவெளியில், குறைந்தது மூன்று முறை இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துக் கொள்ளவேண்டும். அதேநேரத்தில் நாடித்துடிப்பையும் கணக்கிட வேண்டும். கவலை மிகுந்திருந்தால் நாடித் துடிப்பும் அதிகமாக இருக்கும்.

அவரவர் வயதுக்குத் தகுந்தபடி இரத்த அழுத்தம் மாறுபடுகிறது. 25 வயதுக்கு மேற்பட்டவர்களைப் பொறுத்த வரை உயர் மட்ட இரத்த அழுத்தம் 90 முதல் 150 வரை வேறுபடுகிறது. சாதாரணமாக நமது நாட்டில், 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் விஷயத்தில் இதயச் சுருக்கத்தின் போது உயர்மட்ட இரத்த அழுத்தம் 100 முதல் 140 வரையிலும், பெண்களைப் பொறுத்தவரையில் 90 வரையிலும் காணப்படுகிறது. இதயம் விரியும்போது இரத்த அழுத்தம் 60 முதல் 85 வரை செல்கிறது. இளைஞர்களைப் பொறுத்தவரையில் இரத்த அழுத்தம் குறைவாக உள்ளது.

## இரத்தக் கொதிப்புக்குக் காரணம் என்ன?

இரத்தக் கொதிப்பு ஏற்படுவதற்குச் சரியான காரணம் தெரியவில்லை. எப்போதும் மனப் பதட்ட நிலையிலிருப்பது, உடம்பில் கொழுப்பு அதிகமாகச் சேருவது, பாரம்பரியம் போன்ற இனங்கள் இரத்தக் கொதிப்பினை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகிறது. சிறுநீரகங்களும், கல்லீரலும், 'ரெனின்' "ஆஞ்சியோடென்ஷன்" என்ற என்ஸைம்களைச் சுரக்கின்றன. இவையிரண்டும்

அட்ரீனல் சுரப்பியின்மீது செயலாற்றி 'ஆல்டோஸ்டிரோன்' என்ற பொருளை அதிகமாகச் சுரக்கவைக்கின்றன. ஆல்டோஸ்டிரோன் என்ற பொருள்தான் உடம்பில் 'சோடியத்தை' நிறுத்திக்கொள்கிறது. இரத்த நாளங்களில் சோடியத்தின் அளவு அதிகரிப்பதால் நாளங்களின் சுவர்களில் இரத்த அழுத்தம் அதிகரித்து, இரத்தக்கொதிப்பு ஏற்படுகிறது. நரம்புகளின் முனையிலுள்ள சில நரம்பு உயிரணுக்களும் 'நோர் அட்ரினலின்' என்ற பொருளைச் சுரக்கவைக்கின்றன. இவையும் இரத்த அழுத்தம் அதிகமாவதற்குக் காரணமாக இருக்கின்றன.

### இரத்தக் கொதிப்பினால் விளையும் தீமைகள்

இரத்த நாளங்களில் இரத்தக் கொதிப்பு அதிகரிப்பதால் பல்வேறு உடலுறுப்புகளில்



நோய்கள் ஏற்படுகின்றன. இரத்தக் கொதிப்பின் விளைவாக இதயத்திலுள்ள இடது வென்டிரிக்களில் வீக்கம் ஏற்படுகிறது. இதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், கடும் உழைப்புக்குப் பிறகு வென்டிரிக்கள் செயல்பட மறுத்து மூச்சடைப்பு ஏற்படுகிறது. இரத்தக் கொதிப்பினால் 'இதய ஆஸ்துமா' என்று சொல்லப்படும் ஒருவித ஆஸ்துமா நோயும் உண்டாகிறது. இரத்தக் கொதிப்பினால் அவதிப்படுவோர்களுக்கு மாரடைப்பு ஏற்பட்டுக் கால்கள் வீங்கிவிடுகின்றன. கல்லீரலில் அடைப்பு ஏற்படுவதால், அடிவயிற்றில் வலி உண்டாகிறது. நுரையீரலில் சில திரவங்கள் சேருவதால் மூச்சு விடுவது கடினமாகிறது. சில சமயத்தில், இரத்த நாளங்கள் தடித்துப்போய், இதயத்தின் இரத்தக் குழாய்களில் உறைந்துபோகிறது.

மூளையிலுள்ள இரத்தக் குழாய்களில் இரத்தம் உறைவதால், மூளைக்கு இரத்த ஓட்டம் நின்றுபோய், மூளை சேதம் அடைகிறது.

இதன் விளைவாக உடம்பின் ஒரு பாதியில் முடக்குவாதம் ஏற்படுகிறது. முடக்கு வாதத்தால் பாதிக்கப்படுவோர்கள் சில சமயத்தில் பேசும் ஆற்றலை இழந்துவிடுகின்றனர். இரத்தக் கொதிப்பு நீடித்தால் சிறுநீரகங்களும் சேதமடையக்கூடும். சில சமயத்தில் இரத்தக் கொதிப்பு அளவுக்கு மிஞ்சிப் போனால் கண் பார்வையும் பாதிக்கப்படுகிறது.

குடும்பத்தில் பாரம்பரியமாக இரத்தக் கொதிப்பு நோய் இருந்தால் வாழ்க்கையை எளிதாக எடுத்துக்கொண்டுபதட்டத்தைத் தவிர்க்கவேண்டும். உடம்பில் கொழுப்புச் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இசை, தோட்டக்கலை, புகைப்படக்கலை போன்ற பொழுதுபோக்குத் துறைகளில் ஈடுபடுவதும் மனப் பதட்டத்தைக் குறைப்பதற்குப் பெரிதும் உதவும். இரத்தக் கொதிப்பு நோயினால் அவதியுறுபவர்கள் அவ்வப்போது சுற்றுலாச் சென்றுவருவது நல்லது.

இரத்தக் கொதிப்பு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எந்தவித உணவு வகையையும் ஒதுக்கிவைக்க வேண்டியதில்லை. ஆனால், மாரடைப்பு ஒருமுறை ஏற்பட்டவுடன், உணவில் உப்புச்சத்தை



மிகுதியாகக் குறைத்துவிடவேண்டும். அதிகச் சிக்கலான நோய் இல்லாதவர்கள், உணவில் உப்பைத் தவிர்க்க வேண்டியதில்லை. புகைபிடிப்பதையும், மது அருந்துவதையும் விட்டுவிட வேண்டும். 'கொல்ஸ்டிரால்' எனும் பொருள் அதிகமாகச் சுரக்கும் உடலமைப்புக் கொண்டவர்கள் மட்டும் கொழுப்புப் பொருள்களைக் குறைத்துக்கொண்டால் போதும்.

இரத்தக் கொதிப்புக்குக் காரணம் சரியாகத் தெரிந்துவிட்டால் அதற்குக் காரணமான மனப் பதட்டத்தையும், கவலையையும் போக்குவதற்காகச் சிகிச்சை செய்துகொள்ளவேண்டும். ஆயுர்வேத முறையில் கொடுக்கப்படும் சர்ப்ப கந்தி மூலிகை, இரத்தக் கொதிப்பைக் குறைக்கிறது. இரத்தக் கொதிப்பு மிகவும் மோசமாக இல்லாதவர்களுக்கு 'அடல்ஃபேன்' அல்லது 'ஆல்டோமட்' ஆகிய மருந்துகளும், இரத்தக் கொதிப்பு அதிகமாக உள்ளவர்களுக்கு 'இஸ்மெலின்' என்ற மருந்தும் நல்ல பலனளிக்கின்றன.

இரத்தக்கொதிப்புக்காகச் சிகிச்சை அளிக்கத் துவங்கிவிட்டால் ஆயுள் முழுவதும் சிகிச்சையைத் தொடரவேண்டும். ஏனெனில் மருத்துவச் சிகிச்சை இரத்த அழுத்தத்தைக் கட்டுப் படுத்துவதோடல்லாமல் புதிய சிக்கல்களையும் தடுக்கும். மருத்துவச் சிகிச்சையின் விளைவாகப் பலர் விஷயத்தில், வீக்கமுற்ற இடது வென்ட்ரிக்கள் சாதாரண அளவுக்குத் திரும்பியிருக்கிறது. சிகிச்சையில் அவ்வப்போது மாறுதல்கள் செய்யவேண்டுமாகையால் அடிக்கடி மருத்துவ நிபுணரைச் சந்தித்து அறிவுரை பெறவேண்டும். ஆண்டுக்குஇரண்டு முறையாவது, இதயத்துடிப்பைக் கணக்கிடும் மின் கருவியின் மூலம் இதயத் துடிப்பைப் பார்க்கவேண்டும். திடீரென்று சிகிச்சையை நிறுத்தி விடக்கூடாது. நிறுத்தினால் இரத்தக்கொதிப்பு முதன்முதலில் ஏற்பட்டதைக் காட்டிலும் பல மடங்கு அதிகரித்து, மூளையிலும், இதயத்திலும் இரத்த நாளங்கள் வெடித்துப்போகும் நிலை ஏற்படக்கூடும்.

நல்ல வேளையாக, தற்காலத்தில் இரத்தக் கொதிப்பைக் கட்டுப்படுத்துவதற்குப் பயனுள்ள மருந்துகள் மிகுந்த அளவில் கிடைக்கின்றன. அந்த மருந்துகளைத் தவறாது பயன்படுத்துவதாலும், மருத்துவர்களின் கட்டளைப் படி நடந்து வருவதாலும் இரத்தக் கொதிப்புநோயை ஒருவாறு கட்டுப்படுத்தலாம்.



# நீரின்றி எவ்வளவு நாள்

## வாழ முடியும்?



குடிப்பதற்கு நீர் கிடைக்குமாளுல், ஒரு மனிதன் ஒரு திங்கள் காலம் வரை திட உண வின்றி உயிர் வாழ முடியும்! குடிப்பதற்கு நீர் கிடைக்காவிட்டால், உடல் வலுவுள்ள மனி தனும் நான்கு நாட்களுக்குள் இறந்துவிடு வான்!

மனித உடலில் உள்ள தண்ணீர் அளவு—நம்ப முடியாத அளவிற்கு - அதிகமாக உள்ளது! சராசரியாக மனித உடலில் 65 முதல் 70 சதம் வரை தண்ணீர் அடங்கியுள்ளது. எழுபது கிலோ எடையுள்ள மனிதனின் உடலில் 45 முதல் 50 கிலோ தண்ணீர் இருக்கிறது! அதில் பெரும்பகுதி—நாம் நினைப்பதுபோல்—இரத்தத்தில் இல்லை! ஆனுல் அத்தண்ணீரில் பெரும் பகுதி திசுக்கள், உறுப்புகள் ஆகியவற் றின் உள்ளும், இடையிலும், மென்மையாகப் பரவியுள்ளது.

தண்ணீரில் எலும்பின் எடை 33 சதமாகவே இருக்கும். அதாவது எலும்பில் 33 சதம் மட்டுமே உண்மையான எலும்பாகும். மீதி 67 சதம் தண்ணீரால் ஆகியதே! நுரையீரல், சிறுநீர் சுரப்பிகள் ஆகியவைகளில் 80 சத விகித அளவுக்கும், மூளையில் 85 சத அளவுக் கும் தண்ணீர் இருக்கிறது.

வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன் றுக்கு 2·5 லிட்டர் தண்ணீர் வேண்டும். அத் தண்ணீரை நேரடியாகவோ, உண்ணும் உணவி லிருந்தோ, உணவு செரிக்கப்பட்டு உடலில் தண்டீபமாவதாலோ, தசைகளின் மூலமாகவோ பெறமுடிடும்.

உடல் காய்ந்து, உடலில் 10 சத அளவு தண்ணீர் குறைந்து விட்டாலே உயிருக்குப் பேராபத்து ஏற்பட்டுவிடக் கூடுமாதலின், தண் ணீர் மனித உடலுக்கு மிகமிக இன்றியமை யாததாக உள்ளது என்பது தெளிவாகிறது.

நோய்களைப் பரப்பும் பெருஞ்சாதனமாகவும் தண்ணீர் உள்ளது. குடலுக்குத் தீங்கிழைக் கும் டைபாய்டு, பாராடைபாய்டு, நுண் ணுயிர்களால் ஏற்படும் கழிச்சல், வயிற்றுப் போக்கு, காலரா போன்ற நோய்கள் தண்ணீ ரால் பரவும் நோய்களே கொக்கிப்புழு போன்ற ஒட்டுண்ணிப் பூச்சிகளையும், மஞ்சள் காமாலை போன்ற நச்சு நுண்ணுயிர்த் தொற்று நோயை யும் தண்ணீர் பரப்புகிறது.

தண்ணீரில் அயோடின் குறைந்திருந்தால், 'தைராய்டு' சுரப்பியில் வீக்கம் ஏற்பட்டுத் தொண்டையில் கட்டி ஏற்படும். தண்ணீரில் 'ப்ளோரின்' மிதமிஞ்சி இருக்குமானுல், பற் களின் மேல் உள்ள 'எனுமல்' என்னும் பளபளப்பைக் கெடுத்துவிடும். பத்து இலட்சம் பங்கிற்கு 1 பங்கு 'ப்ளோரின்' என்னும் அள விற்கும் குறைவாகத் தண்ணீரில் 'ப்ளோரின்' இருக்குமானுல், குழந்தைகளின் பற்களில் சொத்தை ஏற்படும்.

அறிவியல் வளர்ந்துள்ள இக்காலத்தில் இதையெல்லாம் உணரும்போது, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே "நீரின்றி அமையாது உலகம்" என்று திருவள்ளுவர் கூறியுள்ளது எண்ணி எண்ணி வியத்தற்குரியதல்லவா?

# வெண்பாப் போட்டி

## 57. குடிநீர் வடிகால் வாரியப் பணி

நெடிதுயர்ந்த கோபுரமாய் நீர்த்தேக்கத் தொட்டி
படிகின்ற சாய்க்கடைநீர் ஓடி—வடியும்
படிகால் அமைத்துப் பணிசெய் குடிநீர்
வடிகாலின் வாரியமே வாழ்.

—புலவர் ' இரசை அதன் ', தெற்குத்தெரு.

விலங்கோடு மக்கள் விலங்காகக் கூடிக்
கலங்கலுடை நீரைக் குடித்தோர்—மலர்ந்தே
குடிநீர் வாரியத்தால் நன்னீ ரருந்தி
வடிவோடு வாழ்வார் மகிழ்ந்து.

—கவிப்பித்தன், ஆர்ப்பாக்கம்.

சகதி இருக்கின்ற, சாய்க்கடைநீர் சூழ்ந்து
மிகுதியாய் ஈக்கள் மொய்க்கின்ற—அகழிபோற்
கேணியிலே நீரெடுக்கும் கேடதனை நாடெல்லாம்
தானொழித்தார், வாரியமே தந்து.

—அ. காந்தி, தேவத்தூர்.

சிற்றூரும் பேரூரும் நல்ல குடிநீரைப்
பெற்றுப் பயன்பெறும்நீர் வாரியத்தால்—தொற்றும்
பிணியோடும் ; பாடிப் பலவாறாய்ப் பெண்ணே
பணிபோற்றி வாழ்த்திடுவோம் வா !

—த.மு. அகமது, கடையநல்லூர்.

குடிநீர் வடிகாலைக் கோதின்றி இந்தப்
படிமீதில் நம்மரசு பண்பாய்—அடிகோலி
வாரியங்கள் வாயிலாய் வையமதில் உண்டாக்கும்
காரியத்தின் சால்புகளைக் காண்.

—சீனிவாசம்மாள், சேலம்-9.

குப்பம்மா வீட்டின்முன் கும்மாளம் ! ஏரியிலே
குப்பைத்தண் ணீரெடுத்தார் கூடிவிட்டார் !—செப்புக்
குடத்தில் குழாய்த்தண்ணீர் கொட்டுவதைக் கண்டு
மிடுக்காய்ச் சிரித்திடு வார்.

—மெய். அருண்மொழியன், கலையனூர்.

உப்புநீ ரன்றிவே(று) ஓர்நீரும் காணாரும்
நற்புனலை உண்கிறார்இந் நாளினிலே—அப்பெரிய
காரியத்தை ஆற்றுமுயர் பேரனைத்தும் நம்குடிநீர்
வாரியத்தை நோக்கி வரும்.

—த. ச. தவசிமணி, அரு.

---

பரிசுபெற்ற வெண்பா எழுதியவர்:

**புலவர் 'இரசை அதன்',**
**தெற்குத் தெரு (அஞ்சல்),**
**மேலூர் (வட்டம்),**
**மதுரை மாவட்டம்.**

## வெண்பாப் போட்டி

கோடிவிட்டுக் கோமளமும் கூத்தடிக்கும் அஞ்சுகமும்
சாடும் குழாயடிச் சண்டையெல்லாம்—ஓடிவிடத்
தண்ணீர் வளம்பெருக்கும் தாய்போன்ற வாரியத்தால்
தொண்டாற்று வோரைத் தொழு !

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

பாட்டழுக்கு, யாப்புப் படித்தால் பறந்தோடும் !
வீட்டழுக்குச் செல்ல விரும்பி—நாட்டமுடன்
வாரியத்தார் இன்று வடிகால் வழிகண்ட
காரியத்தைக் கண்ணுரைக் காண்.

—ச. சுப்பிரமணியன், தும்மனட்டி.

தண்ணீரைத் தேடித் தவித்தே அலைந்திடுவார்
தண்ணீரைப் போக்கத் தமிழ்அரசு—எண்ணில்
குடிநீர் வடிகால்கள் குக்கிராமம் தோறும்
கடிதில் நிறுவியதே காண்.

—து. ம. இராமசாமி, துடியலூர்.

தன்நாட்டு மக்கள் தவறு நலம்பெறவே
முன்னேடித் திட்டம் முடிக்கின்ற—என்கலைஞர்
எங்கும் குடிநீர் இனிதாக நல்வசதி
பொங்கிடவே செய்தார் பொலிந்து.

—வெண்ணெய்வேலன், ஆனத்தூர்.

நீளாது மண்ணுயிர்கள் நீரன்றி இவ்வுலகிற்
கேளப்பா என்தோழா ! கேடகற்ற—நாளுமொரு
திட்டம் நமக்களிக்கும் நல்லரசு தெண்ணீர்தான்
கிட்டிடவே தந்ததிட்டம் கேள்.

—மு. ஜெய்லானி, சின்னதாராபுரம்.

''நீரின் றமையா துல''கதனால் நம்முடைய
சீர்தமிழ் நாடரசு செய்துவரும்—பார்மகளே !
வாய்த்த குடிநீர் வடிகால்நல் வாரியமே !!
ஏய்த்திடுமோ வானம் இனி?

—இல. தனமணி, மூலனூர்.

குடிப்பதற்கு நீரில்லா ஊரில்லை என்றே
படிப்படியாய் ஆக்குதற்கே நன்கு—வடிவெடுத்த
மக்கள் குடிநீர் வடிகால்நல் வாரியத்தை
எக்கணமும் வாழ்த்துவோம் யாம் ?

—மா. இல. குப்புசாமி, மாரண்ட அள்ளி.

குடித்தற்கு நீரின்றிக் கோடையில் வாட்டும்
இடரை அழித்தற்கோ ஈண்டுக்—குடிநீர்
உயர்த்திட்ட வாரியத்தை உண்டாக்கி வைத்தார்
முயற்சிதான் வெல்லும் முனைந்து.

—மு. கவியமுதன், சென்னை-7.

நன்மை பலவிளைத்தார் நந்தமிழ் நாடாள்வோர்
துன்பம் அழித்திட்டார் தொண்டுளத்தார்—அன்பாய்க்
குடிநீரின் பஞ்சம் குலைந்தழியக் கண்டார்
வடிகால்ஒண் வாரியத்தை வாழ்த்து.

—உ. தாமோதரன், சென்னை-7.

நீரின் றமையாதிந் நீளுல கென்றிட்ட
சீரிய சொல்லைச் செவிமடுத்து—மாரியென
வாரித்தண் ணீரை வழங்குநீர் வாரியத்தைப்
பாரிங்கே போற்றுவதைப் பார்.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

தூய்மையிலா நீரால் தொடர்கின்ற நோய்க்குள்ள
பேய்க்குணத்தை மாற்றும் பெருநோக்கம்—தாய்மைப்
பண்புடைய ஆட்சியிலே பார் ! குடிநீர் வாரியத்தைக்
கொண்டதனைப் பாராட்டிக் கூறு.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

நோயற்று மக்கள் சுகமாக வாழ்ந்திடவே,
தூயகுடி நீரும் வடிகாலும்—தாயகத்தில்
தந்துதவும் வாரியத்தைத் தாங்கண்ட நம்மரசு
முந்திநாம் போற்றல் முறை !

—இரத்தின. கோபாலகிருட்டிணன், அளக்குடி.

# வெண்பாப் போட்டி

தண்ணீர்மை குன்றாத் தமிழ்த்திரு நாடென்றும்
எண்ணருஞ் சாதனையால் ஏற்றமுறத்—தெண்ணீரைத்
தேக்கிக் குழாய்மூலம் ; சென்றோடி யேவடிய
ஆக்குவித்த வாரியத்தை வாழ்த்து.

—சு. கா. சுந்தரராசன், நாரைக்கிணறு.

சிற்றூர் முதலா நகரீறு யெங்கணுமே
வற்றாக் குடிநீர் வழங்குகின்ற—நற்றொண்டை
இந்நாட்டில் செய்கின்ற எம்மரசைப் பின்பற்றி
எந்நாடும் செய்தல் இனிது.

—ஆர். மணியரசு, தெ. நெடுஞ்சேரி.

விண்தாய் மழையமிழ்தை மண்சேய்க் குவந்தூட்டிக்
கண்மலர்த்திக் காக்கின்ற காட்சியெலாம்—வண்ணக்
குடிநீர்—வடிகால் கொழிக்கும்வே ளாண்மை
வடிவாய் வளர்ச்சியுறல் மாண்பு.

—புலவர் கோம்பைச் சிரான், கோம்பை.

வற்றாக் குடிநீரும் வற்றும் வடிகாலும்
பெற்றே தருமாம் பெருவாழ்வு—பொற்றொடியே
தாயாக நின்றுனது தாய்மைக் குணத்தாலே
வாயார வாரியத்தை வாழ்த்து.

—ப. திருவேங்கடம், திருச்சி-6.

'நீரின் றமையாதுல' கென்னும் வள்ளுவத்தின்
சீரை விளக்கும்நல் வாரியமும்—பாரில்அச்
செந்நாப் புலவர்தம் சீர்மையென இவ்வுலகில்
எந்நாளும் வாழ்க வினிது !

—புலவர் ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

குடிமக்கள் நன்மைதனைக் கொண்டு குடிநீர்
வடிகாலின் வாரியம் வைத்தே—குடியின்
மலைபோன்ற துன்பத்தை மாய்க்கும் வழியைக்
கலைஞரே கண்டார் கணித்து.

—பி. தண்டபாணி, பி.இ., சென்னை-5.

விந்தை பலவாற்றி வெம்புகழைக் கொண்டுபலர்
சிந்தை மகிழ்பணி செய்துவரும்—இந்நாட்டில்
வீணாய்க் கழிந்து வெளிச்செலும் நீர்கூடத்
தானும் நலனைத் தரும் !

—வசந்தராசன், வெள்ளக்குட்டை.

சீர்செய்க் குடிநீரும் செம்மை வடிகாலும்
நேரிடும் வண்ணம் நிலையமைத்து ;—வாரியம்
ஒன்றை வகுத்தே உதவும் ' தமிழரசை '
என்றென்றும் வாழ்த்துவாய் ஈங்கு.

—ப. குப்புசாமி, பொன்மலை.

வாட்டம் அகற்றும் வடிகால் பயிர்களுக்கே
கூட்டம் அகற்றிக் குழாயடியில்—ஓட்டமுள்ள
உண்ணீர்ப் பெருக்கால் உலகூட்டும் வாரியத்தைக்
கண்ணின் உயர்வாய்க் கருது !

—சைதை சுந்தரமூர்த்தி, பொன்மலை.

நச்சுக் கிருமியிலா நன்னீரைத் தந்திட
இச்சையுடன் நம்மரசு இந்நாளில்—மெச்சும்
குடிநீரின் வாரியக் கூர்மதியால் மக்கள்
மிடிநீங்கச் செய்ததனை வாழ்த்து.

—வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

தொலைதூரம் சென்று சுமக்கும் குடிநீர்த்
தலைவிதியைக் கொள்ளிடத்துத் தண்ணீர்—சிலையழகே !
மாற்றிச் செயங்கொண்டான் மாண்புறநீர் வாரியத்தார்
ஆற்றும் பணியை அறி.

—கலாவதி காசிநாதன், அமிர்தராய கோட்டை.

ஆழக் கிணறுவெட்டி ஆங்கோர் குழாய்வைத்துச்
சூழும்நீர்ப் பஞ்சமிங்குத் தீய்ந்தொழிய—வாழ்வோர்க்கு
நன்னீரை நல்கிடும் நற்குடிநீர் வாரியத்தால்
எண்ணற்ற நன்மைகளாம் இங்கு.

—க. ச. சூசை, சம்பு குட்டப்பட்டி.

# தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்,

நெ. 19/20, லிங்கி செட்டித் தெரு, தபால் பெட்டி எண். 226,
சென்னை-600001.

தந்தி : '' அர்பாங் ''  தொலைபேசி எண் : 20367, 28068.

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின்
முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும்
விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

வட்டி விகிதங்கள்

| | (வருடத்திற்கு %) |
|---|---|
| நடப்புக் கணக்கு ... ... ... | வட்டி இல்லை. |
| சேமிப்புக் கணக்கு .. .. ... | 4·00 |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது)

காலாந்திரக் கணக்கு :

ரூ. 1,000-ம் அதற்கு மேலும்.

| | |
|---|---|
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை ... | 2·75 |
| 46 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை — | 3·25 |

நிரந்தரக் கணக்கு :

ரூ. 100-ம் அதற்கு மேலும்.

| | |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக | 4·75 |
| 6 மாதங்களிலிருந்து 12 மாதங்களுக்குக் குறைவாக | 5·25 |
| 12 மாதங்களிலிருந்து 24 மாதங்களுக்குக் குறைவாக | 6·00 |
| 24 மாதங்களிலிருந்து 60 மாதங்கள் முடிய — | 7·00 |
| 60 மாதங்களுக்கு மேல் — — | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள முதலீடுகளுக்கும் மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதை விட ½% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

தொடர் கணக்கு :

தவணைகளுக்குப் பெறும் மொத்தம் பணம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128-50 | 201 | 278 | 362-50 | 452 | 548-50 |

ஆர். கனகசபை,
தலைவர்.

குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி,
துணைத் தலைவர்.

ஆ. வர்த்தமானன்,
செயலாளர்.

# கேளுங்கள் கொடுக்கப்படும்!



தங்களிடம் உள்ள விவசாய அபிவிருத்திக் குகந்த பிரதிகளையும், பழைய தமிழரசு பிரதிகளையும் இலவசமாக அனுப்பக் கோருகின்றேன். விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளைப் பெற வேண்டிய விலாசம், ரூல் புத்தகம் ஆகியவைகளைத் தெரிவிக்க கோருகின்றேன்.

—கே. எஸ். கன்னையாராஜு,
உபதலைவர்,
கிட்டம்பட்டி செட்டியம்பட்டி
விவசாயிகள் சங்கம்,
42, தவுலதாபாத்,
கிருஷ்ணகிரி.

இலவசமாக வழங்குவதற்குப் பழைய 'தமிழரசு' இதழ்கள் எங்களிடம் இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். வேளாண்மை மேம்பாட்டிற் குகந்த வெளியீடுகள் இலவசமாகப் பெறப் பின்கண்ட முகவரிக்கு எழுதலாம்.

மாவட்ட வேளாண்மை
அலுவலர் (செய்தி),
வேளாண்மைச் செய்தி
நிலையம்,
வேளாண்மை இயக்குநர்
அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை-5.

தங்கள் சங்க விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளைப் பெற கிருஷ்ணகிரியில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களையும், கூட்டுறவுத் துணைப் பதிவாளர் அவர்களையும் கலந்தாலோசியுங்கள். விவசாயிகளுக்குத் தேவையான 'ரூல்' புத்தகம் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

தமிழகத்தில் அரசினர் வேளாண்மைப் பள்ளிகள் எங்கெங்கு உள்ளன? பயிற்சிக்காலம் எவ்வளவு? எப்பொழுது பயிற்சி ஆரம்பிக்கிறது என்பதை அறிவிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

—பி. மருதவாணன்,
காவனூர் (அஞ்சல்),
விருத்தாசலம் வட்டம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

தமிழகத்தில் தற்பொழுது 13 வேளாண்மைப் பள்ளிகள் உள்ளன. அவைகள் மாவட்ட வாரியாகக் கீழ்க்கண்ட இடங்களில் அமைந்துள்ளன.

செங்கற்பட்டு மாவட்டத்தில் சிறுகாவேரிப்பாக்கம், வடஆர்க்காடு மாவட்டத்தில் அத்தியந்தல், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் காகுப்பம், தஞ்சாவூர் மாவட்டத்தில்ஆடுதுறை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அண்ணா பண்ணை, மதுரை மாவட்டத்தில் மதுரை, இராமநாதபுர மாவட்டத்தில் பரமக்குடி, திருநெல்வேலி மாவட்டத்தில் கிள்ளிகுளம், கன்னியாகுமரி மாவட்டத்தில் திருப்பதிசாரம், சேலம் மாவட்டத்தில் மேட்டூர், தருமபுரி மாவட்டத்தில் பாப்பாரப்பட்டி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் பவானிசாகர், நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி ஆகிய ஊர்களில் வேளாண்மைப் பள்ளிகள் உள்ளன.

வேளாண்மைப் பள்ளிகளில் 12 மாதக்காலம் வேளாண்மைப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி சூலை மாதம் ஆரம்பிக்கிறது. இப்பயிற்சியில் சேர 8 ஆம் வகுப்பு அல்லது 3-ஆம் படிவம் தேர்ச்சி பெற்று, 18 வயதிற்குக் குறையாமலும், 30 வயதிற்கு மேற்படாமலும் உள்ள வேளாண்மைக்குடி இளைஞர்கள் சூன் மாதம் 15-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். இது சம்பந்தமான விளம்பரம் முன்பே நாளேடுகளில் வந்துள்ளது.

தாங்கள் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்தவராதலால், கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

துணை வேளாண்மை
இயக்குநர்,
உழவர் பயிற்சி நிலையம்,
திண்டிவனம்.

வேளாண்மைப் பள்ளியில் சேருவதற்குரிய விண்ணப்பத்தைக்கள்ளக்குறிச்சியில் உள்ள உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களது அலுவலகத்திலிருந்து அல்லது, விருத்தாசலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசி நாளுக்குப் பிறகே இந்த இதழ் ''தமிழரசு'' வெளிவரவிருப்பதால், தங்களுக்கு 'தமிழரசு' அலுவலகத்திலிருந்து நேரடியாக 4—6—1972 அன்றே மடல் விடுக்கப்பட்டுள்ளது)

நான் 'மோரிஸ்' வாழை சம்பந்தமான கேள்விக்குரிய பதிலை, சூன் முதல் தேதி தமிழரசு இதழில் படித்தேன். விவரமும் அறிந்தேன். மிக்க நன்றி. மோரிஸ் வாழை பயிரிட எப்படிப்பட்ட நிலம் வேண்டும்? நான் காரைக்குடிக்கு அருகே உள்ளேன். மோரிஸ் வாழை நல்ல முறையில் அருகில் உள்ள நகரில் விற்பனை ஆகுமா? அல்லது சர்க்காரில் வாங்கிக் கொள்வார்களா? அல்லது தனிப்பட்ட முதலாளிகள் கிராக்கியுடன் வாங்கிக் கொள்வார்களா? நான் ஒரு ஏக்கரில் மோரிஸ் வாழை பயிரிடலாமென நினைக்கின்றேன். விவரம் தெரிவித்தால் நல்லது.

—கே. எஸ். மோகன்லால்,
குன்றக்குடி,
இராமநாதபுரம்
மாவட்டம்.

மோரிஸ் வாழை பயிரிட வடிகால் வசதியுடைய வளமான



நிலம் மிகவும் ஏற்றதாகும். மணல் இல்லாத வண்டலும். சிறிது களி சேர்ந்த அடை மண்

ணும், படுகை நிலமும், நெல் பயிராகக் கூடிய தோட்டக்கால் நிலமும், செம்மண் கலந்த நிலமும் மோரிஸ் வாழைக்கு ஏற்றவையே. வடிகால் வசதியற்ற நிலங்கள், நீர் தேங்கி நிற்கக் கூடிய நிலங்கள் ஆகியவைகள் ' மோரிஸ் ' வாழைக்கு ஏற்றவையல்ல. தண்ணீர் வசதி மோரிஸ் வாழைக்கு மிகவும் இன்றியமையாததாகும். ஆனால், தண்ணீர் உப்பாக இருக்கக் கூடாது.

தற்பொழுது பொதுவாக நகரங்களில் மோரிஸ் வாழைப் பழங்களுக்கு நல்ல தேவை (கிராக்கி) உள்ளது. எனவே, தங்கள் ஊரின் அருகில் உள்ள காரைக்குடியில் மோரிஸ் வாழைப் பழங்களுக்கு மிகுந்த தேவை இருக்கக் கூடும். அரசாங்கம், தங்களிடமிருந்து வாழைப்பழங்களை வாங்கிக் கொள்ளாது. ஆனால், தனிப்பட்ட வியாபாரிகள் தங்களிடமிருந்து மோரிஸ் வாழைத்தார்களை வாங்கிக்கொள்வர். வாழைப்பழங்களுக்கு நல்ல விலைகிடைப்பதுபழத்தின்தரத்தையும் அறுவடைக் காலத்தையும், தேவையையும் பொறுத்ததே ! சில சமயங்களில் நல்ல விலைக்கு விற்க முடியும். சில சமயங்களில் மலிவாக விற்க நேரிடும் ! ஆனால், எப்படி விற்றாலும் மோரிஸ் வாழை மொத்தத்தில் நல்ல இலாபம் கொடுக்கக்கூடியதே.

தங்கள் நிலத்தில் ஆடி, ஆவணி மாதங்களில் மோரிஸ் வாழை நடலாம். நிலத்தை ஆனி மாதத்தில் நன்கு ஆழ உழுது பண்படுத்த வேண்டும். பிறகு நிலத்தில் 5·5 அடி இடைவெளிக்கு ஒரு குழி வீதம் தோண்ட வேண்டும். இந்த அளவு இடைவெளியில் ஒரு ஏக்கரில் 1,440 குழிகள் தோண்ட முடியும். ஒவ்வொரு குழியும் 1½ அடி நீளம், 1½ அடி அகலம் 1½ அடி ஆழம் இருக்க வேண்டும். குழிகளைத் தோண்டிய பிறகு 20 முதல் 25 நாட்களுக்கு ஆறப் போட்டு, பின்னர் நிலத்தின் மேல்மட்ட மண்ணுடன் குழி ஒன்றுக்கு 12 கிலோ வீதம் தொழு உரமும், 50 கிராம் பி. எச். சி. 10 சதம் தூளையும் கலந்து குழிகளை நிரப்ப வேண்டும்

ஒரே சீரான பருமனுள்ள 3 அல்லது 4 மாத வயதுடைய கத்திக் குருத்து கன்றுகளைத் ( Sword suckers ) தேர்ந்தெடுத்து, அவைகளை 0·1 சத செரசான் கரைசலில் (1 லிட்டர் தண்ணீரில் 1 கிராம் நனையும் செரசானைக் கரைத்து) 5 நிமிடங்கள் வரை அமிழ்த்தி வைத்திருந்து எடுக்க வேண்டும். பிறகு கன்றுகளைக் குழிகளின் மையத்தில் நடவேண்டும். நட்ட பின்னர் வாழைக் கன்றைச் சுற்றி, மண்ணை நன்றாக அமுத்தி விட வேண்டும். பிறகு தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

மோரிஸ் வாழைக்கு உரமிடுதல், நீர்ப்பாய்சுதல் போன்ற விவரங்களை 1—6—1973 '' தமிழரசு '' இதழில் '' கேளுங்கள் கொடுக்கப்படும் '' பகுதியில் இருந்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு ஏக்கரில் வெங்காயம் பயிர் செய்துள்ளேன். வெங்காயப் பயிரின் நுனி வெண்மையாக மாறிக் காய்ந்து விடுகிறது. இதற்கு என்ன காரணம் ? இதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

—எம். இராமலிங்கம்.
காட்டான் குளத்தூர்,
செங்கற்பட்டு மாவட்டம்.

தங்களுடைய வெங்காயப் பயிர் இலைப்பேன்களால் தாக்கப் பட்டிருக்கிறது. இலைப்பேன்கள் வெங்காயத் தாள்களின் சாற்றை உறிஞ்சி விடுவதால், தாள்கள் வெளுத்துத் தண்ணீரில்லாமல் காய்ந்து போனதுபோல் வெண்மையாகக் காணப்படும். வெங்காயத்தில் இலைப்பேன்களின் தாக்குதலைத் தடுக்க லின்டேன் 10 சதம் அல்லது பி. எச். சி. 10 சதம் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவி விட வேண்டும்.



நான் வெற்றிலை பயிரிட விரும்புகின்றேன். வெற்றிலை பயிரிடுவதற்கு ஏற்ற மண், பட்டம், தட்ப-வெப்ப நிலை, நடும் முறை, உரமிடும் முறை ஆகியவைகளைப் பற்றி விளக்கமாகக் கூறவும்.

—எ. அகமத்,
இலப்பைக் குடிக்காடு,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.



வெற்றிலை பயிரிட வளமான களிமண் சிறந்தது. முக்கியமாகத் தைப்பட்டத்திலேயே வெற்றிலை பயிரிடப் படுகிறது. 66 டிகிரி முதல் 100 டிகிரி (' பாரன்ஹீட் ') வெப்பமும் 300 முதல் 700 மில்லி மீட்டர் ஆண்டு மழையும் உள்ள தட்ப-வெப்ப நிலை வெற்றிலைக்கு வேண்டும். குளிர்ந்த நிழலும், தட்டுப்பாடில்லாத தண்ணீர் வசதியும் வெற்றிலை பயிரிட மிகவும் இன்றியமையாததாகும்.

வெற்றிலை நடுவதற்கு வயலை, வரப்பும் வாய்க்காலுமாகப் பிரித்துக் கொள்கின்றனர். இவைகளைக் ' கண்ணிகள் ' என்று கூறுகிறார்கள். வெற்றிலை நடுவதற்கான கண்ணிகளின் அளவு வெவ்வேறு பகுதிகளில் மாறுபடுகிறது. 20 முதல் 40 அடி நீளமும், 6 அடி அகலமும் உள்ள பாத்திகள் அமைக்கப்பட்டு, இரண்டு பாத்திகளுக்கு இடையில் 3 அடி முதல் 3½ அடி இடை வெளி விட்டு 1 அடி அகலமும், 1½ அடி ஆழமும் உள்ள கிடங்குகள் வெட்ட வேண்டும். பாத்திகளின் இரு ஓரங்களிலும் 1 அடி இடைவெளியில் அகத்தி விதைக்க வேண்டும். அகத்தி 2 முதல் 3 அடி வளர்ந்த பிறகு 6 முதல் 8 கணுக்கள் உள்ள வெற்றிலைக் கொடிகளை நட வேண்டும். ஒரு ஏக்கர் வெற்றிலை சாகுபடி செய்ய 40,000 கொடிகள் தேவைப் படும்.

வெற்றிலைக் கொடி நட்ட 2 அல்லது 3 மாதங்களுக்குப்

பிறகு 25 முதல் 30 டன் வரை தொழு உரம் இட வேண்டும். வெற்றிலைக் கொடிகளுக்குப் பொதுவாக அடி உரம் இடப் படுவதில்லை. மூன்று மாதங் களுக்கு ஒரு முறை ஏக்கருக்கு 750 கிலோ கடலைப் பிண் ணுக்கு இடலாம். அல்லது 6-வது மாதத்தில் 160 கிலோ இரண்டாம் எண் கலப்பு உரம் இடலாம்.

கோவை மாவட்டத்தின் தோட்டக் கால் பூமிக்கு ஏற்ற பன்முறைச் சாகுபடித் திட்டத்தின்கீழ் எவ்வகைப் பயிர் சுழற்சியைக் கைக் கொள்ள லாம்.

—அ. இராமசாமி,
பெத்தாம்பாளையம்,
கோவை மாவட்டம்.

கோவை மாவட்டத்தில் போதிய பாசன வசதியுள்ள தோட்டக்கால் நிலங்களில் மூன்று போகமும் சாகுபடி செய்யலாம். முதல் போகத்தில் கேழ்வரகு (ராகி) அல்லது வீரிய ஒட்டுச் சோளமும், இரண்டாம் போகத்தில் வீரிய மக்காச் சோளம் அல்லது பருத் தியும், மூன்றும் போகத்தில் கோதுமை அல்லது நிலக்கடலை யும் பயிரிடலாம்.

பாசனவசதி குறைவாக உள்ள தோட்டக்கால் நிலங்களில் இரு போகம் சாகுபடி செய்யலாம். முதல் போகம் கேழ்வரகு அல் லது வீரிய மக்காச் சோளம் அல் லது எச். பி. கம்பு பயிரிட்டு, இரண்டாம் போகத்தில் நிலக் கடலை அல்லது பருத்தியைப் பயி ரிடலாம்.

கீழ்பவானி பாசனப் பகுதியில் இருபோகம் நெற்பயிர் செய்து பிறகு பாசிப் பயறு அல்லது உளுந்து விதைக்கலாம். அல்லது முதற்போகத்தில் எச். பி. கம்பு, ராகி, வீரிய மக்காச்சோளம் ஆகியவைகளில் ஏதேனும் ஒன் றையும், இரண்டாம் போகத்தில்

**உலகில் மிக உயரமான கலங்கரை விளக்கு**

ஹாலந்தில் ஹெல்டர் (Helder) அருகேயுள்ள கிஜ்க்டுயின் (Kijkduin) கலங்கரை விளக்கு 197 அடி உயரமுள்ளது. இதுவே உலகில் மிக உயரமான கலங்கரை விளக்கு.

சென்னையிலுள்ள கலங் கரை விளக்கு 1—6—1894 முதல் வேலை செய்கிறது. இது கடல் மட்டத்திலிருந்து 166 அடி உயரத்தில் அமைந்துள்ளது.



நெல்லும், பயிரிட்டு, அதற் கடுத்துக் கொளுஞ்சியுடன் உளுந் தைச் சேர்த்தும் விதைக்கலாம்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள உழவர் விவாதக் குழு அமைப்பாளர் களில் முக்கால் வாசிப் பேர்கள் போக்குவரத்துச் சாலைக்கு அருகே நிலம் இல்லாமல் இருக்கின்றனர் கள். அதனால் வேளாண்மை அலு வலரின் 3 ஏக்கர் செயல் விளக்கப் பாத்திகள் அவர்களுக்குக் கிடைக்க வில்லை. அச்செயல் விளக்கப் பாத்தி கள் உழவர் விவாதக்குழு அமைப் பாளர்களுக்குக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா? 100-க்கு 10 பேர்களுக் காவது அந்தச் சலுகை கிடைத்தால், சுற்றுப்புற விவசாயிகளுக்கு மேலும் பசுமைப் புரட்சியில் ஆர்வம் ஏற் படும் என்பது பெரும்பான்மையான அமைப்பாளர்களின் தாழ்மையான கருத்து. இதற்கு அரசு அனுமதிக் குமா? பதிலளிக்கவும்.

—ஜெ. இராமநாதன் பி.ஏ.,
செயலாளர்,
தஞ்சாவூர் மாவட்ட உழவர்
விவாதக் குழு அமைப்பாளர்கள்
சங்கம்,
கீழத்தஞ்சாவூர் அஞ்சல்,
திருமருகல் வட்டாரம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

போக்குவரத்துச் சாலைகளின் ஓரத்தில் செயல் விளக்கப் பாத்தி களை அமைப்பதன் நோக்கம், அச்சாலைகளின் வழியாகச் செல் லும் உழவர் பெருமக்கள் அச் செயல் விளக்கப் பாத்திகளைப் பார்வையிட்டு, அதுபோல் தாங் களும் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறவேண்டும் என்ற ஆர்வத்தை உழவர் பெருமக்க ளுக்கு ஏற்படுத்துவதேயாகும். சாலைக்கு வெகு தூரத்தில் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப் பட்டால், அதனால் செயல் விளக் கப் பாத்தியின் சொந்தக்காரர் மட்டும் பயன்பெற முடியுமே தவிர, வேறெந்த உழவர்களும் பயன்பெற மாட்டார்கள். சாலை ஓரத்தில் உள்ள செயல் விளக்கப் பாத்தியை அவ்வழியே செல்லும் ஒரு உழவர் ஒரு தடவைப் பார்த்துவிட்டால், மீண்டும் அவ் வழியில் வரும்போதும், போகும் போதும் அச்செயல் விளக்கப் பாத்தியைப் பார்க்க வேண்டும் என்ற உணர்வு பெறுகிறார்! அது போல் நாமும் செய்து, சாகுபடி மேற்கொண்டாலென்ன என்று எண்ணுகிறார். அதன் மூலம் நவீனச் சாகுபடி முறைகள்உழவர் களிடையே பரவுகிறது. அதன் பயனாய் நாட்டின் உற்பத்தியும் பெருகுகிறது.

இந்த நோக்கத்தின் காரண மாகவே போக்குவரத்துச் சாலை ஓரங்களில் உள்ள நிலங்களில் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டு வருகின்றன. தாங்கள் கூறுவது போல் போக்கு வரத்துச் சாலையின் அருகே நிலம் இல்லாத உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களின் நிலத்தில் செயல் விளக்கப் பாத்திகள் அமைப்பது, செயல் விளக்கப் பாத்திகளின் நோக்கத்தையே குழி தோண்டிப் புதைப்பதாகும். எனவே, தமிழ்நாடு அரசு தங்கள் கோரிக்கையை ஏற்காது! 100-க்கு 10 பேருக்காவது இச் சலுகை கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளீர்கள். 100-க்கு 10 பேருக்கென்ன, ஒருவருக்குக் கொடுப்பது கூட, தவறுதான்!

எனவே, உழவர் விவாதக்குழு அமைப்பாளர்கள் தங்கள் நிலத் தில் தான் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட வேண்டும் என்று விரும்பாமல், பலபேர் பார்த்து அறிந்து பயன் பெறுவதற்கு ஏற்ற வகையில் போக்குவரத்துச் சாலையின் அருகே உள்ள நிலங்களில் செயல் விளக்கப்பாத்திகளை அமைப்ப தற்கு உதவிட முன்வருவதே பசுமைப் புரட்சிக்கு வழிவகுக் கும் பணியாகும்.

எனக்கு 3 ஏக்கர் புன்செய் நிலம் இருக்கிறது. அதில் இந்த ஆண்டு கிணறு வெட்டிக் கொண்டிருக் கின்றேன். அதில் தென்னை பயிரிட லாம் என எண்ணுகின்றேன். 16-5-73 தேதிய தமிழரசு இதழில் ஏக்கருக்கு ரூபாய் 300 வீதம் மானி யம் வழங்குவதாகப் படித்தேன். எனக்குத் தென்னங் கன்றுகளாக வோ அல்லது பணமாகவோ பெற யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும். அருள் கூர்ந்து முகவரியைத் தெரி விக்க வேண்டுகின்றேன்.

—தனுசுகோடி,
83, தெற்குரத வீதி,
திருச்செங்கோடு,
சேலம் மாவட்டம்.

**தாங்கள், புதிதாகத் தென்னந் தோப்பு ஏற்படுத்த ஏக்கருக்கு ரூபாய் 300 வீதம் நீண்ட காலக்**

க்டன் பெறலாம். இக்கடனில் ஒரு பகுதி பொருளாகவும் அதாவது தென்னங் கன்றுகளாகவும், ஒரு பகுதி ரொக்கமாகவும் வழங்கப் படுகிறது. இக்கடனைப் பெறத் தாங்கள் நாமக்கல்லில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களுக்கு மனு அனுப்ப வேண்டும். மனுவைப் பூர்த்தி செய்து உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்கள் மூலம் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும். இதற்குரிய மனுவை, தங்கள் துணை வேளாண்மை அலுவலரிடமிருந்தோ அல்லது மாவட்ட வேளாண்மை அலுவலகத்திலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம். இம் மனுவைப் பூர்த்தி செய்வது, சிட்டா, அடங்கல் நகல் எடுப்பது, வில்லங்கச் சான்றிதழ் பெறுவது போன்றவைகளுக்கு உங்கள் கிராம சேவகர் உதவி செய்வார். எனவே, அவரது உதவியைத் தாங்கள் நாடுவது நல்லது.

திருச்சி மாவட்டம் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பெருகமணி கிராம விவசாயி எழுதிக் கொண்டது. எங்கள் பகுதியில் வாழை பயிரிடுவோர் அதிகம். குறிப்பாகப் பூவன், பச்சநாடன், நேந்திரன் ரக வாழைகள் எங்கள் பகுதியில் அதிகம் பயிரிடப்படுகிறது. இதில் சனவரிப் பருவத்தில் பூவன், பச்சநாடன் காய்கள் அதிகமாக வெட்டுக்கு வருவதால் சரியான மார்க்கெட் இருப்பதில்லை. மிகவும் குறைவான விலைக்கு விற்றாக வேண்டிய நிலை ஏற்படுகிறது. தமிழ்நாட்டில் வாழை அபிவிருத்தி கார்ப்பரேசன் என்ற நிறுவனம் இயங்குவதாகத் தெரிகிறது. அது எங்குள்ளது? அவர்கள் ஏதேனும் விலைக்கு எடுத்துக் கொள்கிறார்களா?

—ஆ. மலையாளம்,
மெயின் ரோடு,
பெருகமணி (அஞ்சல்),
திருச்சி மாவட்டம்.

தற்பொழுது தமிழ்நாட்டில் வாழை மற்றும் பழவகைகள் மேம்பாட்டுக் கழகம் இயங்கி வருகிறது. அக்கழகம் நம்நாட்டு வாழைப் பழங்களுக்கும், மற்ற பழங்களுக்கும் வெளிநாட்டில் உள்ள தேவையை ஆராய்ந்து வருகிறது. மேலும், அக்கழகம் வெளிநாடுகளில் விற்பனை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக நல்ல தரமான பழங்களை முன்




மாதிரிக்காக அனுப்பி வைக்கிறது. வெகு விரைவில் உங்கள் கோரிக்கையை நிறைவேற்ற அக்கழகம் முன்வரக் கூடும் என்று நம்புகின்றோம். எனவே, இது தொடர்பான முழு விவரமும் அறிந்து கொள்ள கீழ்க் கண்டுள்ள முகவரிக்கு எழுதுங்கள்.

இயக்குநர்,

வாழை மற்றும் பழ மேம்பாட்டுக் கழகம்,
3, வீட்கிராப்ட் ரோடு,
சென்னை-600034.

அவர்கள் உங்களுக்குத் தகுந்த பதில் அளிக்கக்கூடும். எனவே, முயற்சி செய்யுங்கள்.

—ஆர். எம்.

## சிமெண்ட் உபயோகிப்போர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் மின்வெட்டு, சிமெண்ட் உற்பத்தியையும், விநியோகத்தையும் பாதித்துள்ளது. இதனுல் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் உங்கள் சிமெண்ட் தேவையை உடனடியாகவும், முழுமையாகவும் நிறைவேற்ற இயலாத நிலையில் இருக்கிறார்கள். இதன் விளைவாக உங்கள் அவசரத் தேவையை முன்னிட்டு, அங்கீகாரம் பெறாத விற்பனையாளர்களிடமிருந்து நீங்கள் சிமெண்ட் வாங்க முற்படலாம். இதனுல் நீங்கள் நிர்ணயித்த விலைக்குமேல் கொடுப்பதுடன், கலப்பட சிமெண்ட் வாங்கவும் நேரிடலாம்.

உங்கள் நலனை முன்னிட்டு, எப்போதும் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்தே சிமெண்ட் வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடம், தயாரிப்பாளர்களால் அளிக்கப்பட்டுள்ள ஸ்டாக்கிஸ்டு சர்டிபிகேட்டும் விலைப்பட்டியலும் உள்ளன. அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் சிமெண்ட் வாங்குபவர் ஒவ்வொருவருக்கும் அவரவர் வாங்கிய சிமெண்ட் அளவு, விலை இவை குறித்துள்ள காஷ் மெமோ அல்லது பில் கொடுப்பார்கள்.

உங்கள் தேவையை ஸ்டாக்கிஸ்டுகள் உடனுக்குடன் பூர்த்தி செய்ய முடியாவிட்டால் உங்கள் தேவைக்கு அவர்களிடம் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். அவர்களும் அதே வரிசைக்கிரமமாக உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்கள்.

அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்து அசல் சிமெண்டை நிர்ணயித்த விலைக்கே பெறுங்கள்.

பொதுமக்களின் நலனை உத்தேசித்து வெளியிட்டோர்:

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்,**

**175/1, மவுண்ட் ரோடு, சென்னை-2.**

SANKAR IC CEMENT

சங்கர் சிமெண்ட்


சுற்றுலா சுந்தரம்
கதை: இளவல்
சித்திரம்: மூத்து
6
சுந்தரம், இந்தப் பெட்டியை நான் தந்தேன்னு யாரிடமும் சொல்லாதே! உன் சிநேகிதன் அருளுக்கும் தெரிய வேண்டாம்! உன் பக்கத்தில் பத்திரமாக வைச்சிரு. ஆனல் யாராவது கேட்டால் உனக்குத் தெரியா துண்ணு சொல்லிவிடு,....
எல்லாரும் அவரவர் இடத்தில் அமர்ந்து கொள்ளுங்கள். அவரவர் பொருள்களைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். இன்னும் இரண்டு நிமிடத்தில் பஸ் புறப்படும்.
பஸ் புறப்பட்டவுடன் தான் எனக்கு நிம்மதி. நமது சுற்றுப்பயணத்தை மாலா அக்காவோ, மீரா அத்தையோ தடுக்க முடியாது!
போடா, இவனே! ஐயா போட்ட திட்டத்தைப் புரிஞ் சுக்கிறதுக்குப் புத்திசாலித்தனமிருந்தால் தானே அவுங்க ரெண்டு பேருக்கும். விட்டுத்தள்ளு, இப்ப நாம சுதந்திரப் பறவை.
நாம் எழுதின பொய்க்கடிதமும் தெரிஞ்சால்...
போடா மண்டு நாமதான் சுற்றுலா கிளம்பி விட்டோமே இனியாருக்குப் பயப்படணும்....?
டேய், சுந்தரம் பின்னல் பாருடா! மாலா அக்காவும் மீரா அத்தையும்.
நேற்று பார்க்கிலே கண்டது மாதிரி கனவு காண்கிறயா? மாலா அக்கா இங்கே எப்படி வரமுடியும்



கனவு இல்லே, உண்மைதான் நானும் மீராவும் வந்திருக் கின்றேம்
நீங்க பேசிக் கொண் டிருந்ததையும் கேட்டோம்
செல்வமணி கொடுத்திருந்த தந்தியினுலே உங்கள் குட்டு எல்லாம் தெரிஞ்சு போச்சு! சுந்தரம் என்ன சொன் ஞன் புத்திசாலித்தனம் நமக்கு இருந்தால் தெரிஞ்சிருக்குமாம். ...ம்
ஆசிரியர் கூட உல்லாசப் பயணம் போறேம்னு சொல்லி ஏமாற்றினீங்க! எவ்வளவு பெரிய நாடகம் ஆடியிருக்காங்க.... உம் பதில் பேசுறுங்களா? பாருங்க
டேய் சுந்தரம்! ஏதாவது பதில் சொல் லேண்டா?
பயமா இருக்குடா, சரியா மாட்டிக் கிட்டோம்... உம்... நம்ப தலைவிதி.... சரி ஏதாவது சொல்லி. ....... ம்
அக்கா.... அக்கா...வந்து
பஸ்ஸிலே எல்லாரும் பார்க்கிறுங்க எங்காவது இறங்கும் போது பேசிக்கலாம்... உட்கார்! உண்மை தெரிஞ்சதும் சமாதானம் சொல்றதைப் பார்
வண்டியில் உள்ளவர்கள் யாராவது காபி சாப்பிட இறங்கி பதினைந்து நிமிடத்தில் வரவேண்டும். இனி ஐம்பது மைல் போய்த்தான் வண்டி நிற்கும்...
அருள்! எனக்கு ஒரு ஐடியா தோணுதுடா
உன் ஐடியாதான் நம்மை மாட்டி விட்டுதே இன்னுமா ஐடியா?
ரெண்டு பேரும் செல்கிறுர்கள் இதுதான் நல்ல சமயம் நான் சொல்ற படி கேளுடா... உம். சீக்கிரம்
தொடரும்

# பொன்னும் பித்தளையும்

'பூங்கொடி'

**அ**வன் ஓர் ஏழைச் சிறுவன். 'பிச்சை புகினும் கற்கை நன்றே' அல்லவா? அதனால் அவன் அந்த ஏழ்மை நிலையிலும் நன்றாகப் படித்தான். மற்ற பிள்ளைகளைப் போல் இல்லாமல், குடும்ப நிலைமை உணர்ந்தவன் அவன். உழைத்தால் முன்னேறலாம் என்பதைத்தாம் படித்த புத்தகங்களிலிருந்து தெரிந்து கொண்டவன்.

அவன் எல்லாரிடமும் அன்போடு பேசுவான்; எதையும் பொறுமையோடு சகித்துக் கொள்வான்; 'பொறுமையே பெருமை தரும்' என்பதைப் படித்தவனல்லவா அவன்? தன்னைக் கப்பாற்ற அல்லவோ தகப்பனார் இவ்வளவு துன்பப் படுகிறார்? கடுமையான காய்ச்சல் வந்தாலும் கூட அதையெல்லாம் பொருட்படுத்தாது தம் குடும்ப நன்மைக்காக அல்லவா அவர் கூலி வேலை செய்கிறார்?'' இப்படியெல்லாம் ஒரு மாணவன் எண்ணி ஏங்குவது விந்தைதான்!

வீட்டிலே வறுமை இருந்தால், பள்ளிப் படிப்பிலே பரவசமெங்கே இருக்கப் போகிறது? அதனால் அவன், பாடப் புத்தகங்கள் சிலவற்றை வாங்க இயலவில்லை. தந்தையைத் தொந்தரவு செய்யவும் அவனுக்கு மனமில்லை. இதனால் தன் உயிர் நண்பர்கள் வீட்டுக்குச் சென்று தன்னிடம் இல்லாத புத்தகங்களைப் படித்து மனப்பாடம் செய்துகொள்வான்; முக்கியமானவற்றை நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொள்வான்.

வசதியான பிள்ளைகள் பள்ளிக்கு ஆடம்பரமாக வருவார்கள். அவர்களையெல்லாம் பார்த்துப் பொறாமைப்படாத அவனுக்கு, 'வருந்தாதே! உழைப்பால் உயர்ந்த உத்தமர்களை நீ அறிவாய்! அவர்கள் வழியைப் பின்பற்று! உயர்வடைவாய்!.. ......'' என்று எப்போதோ ஒரு புத்தகத்தில் படித்தது நினைவுக்கு வந்தது.

பள்ளியில் அவன்தான் முதல் மாணவன்! வறுமையை அவன் காட்டிக் கொள்ளவில்லை; ஆனால் உருவம் அவனைக் காட்டிக் கொண்டிருந்தது; அவன் உள்ளத்திலே உறுதி இருந்தது; அதனால் அவன் சொல்லிலும் ஒளி இருந்த்து. நல்ல மாணவனை விரும்பாத ஆசிரியர்களும் இருப்பார்களோ? பள்ளி ஆசிரியர்கள் பலர் அவனிடம் அன்பாக இருந்தார்கள். தேர்விலே முதல் மதிப்பெண்கள் பெற்று ஆசிரியர்களால் புகழப்பட்டான். இதனால் மற்ற 'மக்கு' மாணவர்கள் அவன்மீது பொறாமை கொண்டதில் வியப்பில்லை அல்லவா?

அன்றொரு நாள் அவன் வழக்கம்போலப் பள்ளிக்கு வந்திருந்தான். தலைமை யாசிரியர் அவனை இழுத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றார். பச்சை நிறப் பார்க்கர் பேனாவைக் காண்பித்து, '' இதை ஏன் திருடினாய்'' என்று மிரட்டினார். பாவம்! அந்தச்சிறுவனோ அதைக் கேட்டுத் திகைத்தான்; திடுக்கிட்டான். அன்றையத் தினம் அவன் சாப்பிட்டானோ இல்லையோ, வந்ததும் இந்த நிலையா? தலைமையாசிரியர் அவன் கன்னத்தில் 'பளார்' என்று ஓர் அறை அறைந்தார். அவர் கையிலுள்ள பிரம்பு துடித்தது.

தலைமையாசிரியர் அறைக்கு அருகே மாணவர்கள் கூடி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தச் சிறுவன் அடி வாங்குவது சிலருக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

'' மௌனம், குற்றத்தை ஒப்புக் கொள்வதற்கு அர்த்தம்; திருடியதைத் திருடி விட்டு மௌனமா சாதிக்கிறாய் ....?'' தலைமையாசிரியர் உதடுகள் துடித்தன.

இத்தனை நாள் அன்பு செலுத்தியவர் மனம் எப்படிமாறியதோ தெரியவில்லையே என்றெண்ணிய அவன், ''சார்! பேனாவை நான் திருடவில்லை. உண்மையாகச் சொல்கிறேன் சார்......'' என்றான் கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்துக்கொண்டே!

அதற்குள் அவன் வகுப்பு ஆசிரியர் விரைந்து வந்தார். தலைமையாசிரியரைப் பார்த்து, '' சார்! இவன் அப்படிப்பட்ட மாணவன் இல்லை சார்! மிகவும் நல்லவன்! உங்களுக்குத் தெரியாதா என்ன?'' என்றார்.

தலைமையாசிரியரின் கோபம் கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்தது. 'அவசரப்பட்டு அவனை அடித்துவிட்டோமே!' என்று மனத்துக்குள் வருந்தினார். பிறகு அவனைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தார். அதற்கு அந்தச் சிறுவன் கண் கலங்கியபடி பதில் சொன்னான்,

'' என் தகப்பனார் கூலி வேலை செய்கிறார். அவருக்கு வரும் சொற்ப வருமானத்தைக் கொண்டு நாங்கள் சாப்பிட வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டபடி அவன் தன் கன்னத்தைத் தடவிக் கொண்டான். தலைமையாசிரியர் அவனைப் பரிதாபமாகப் பார்த்தார். அவன் மேலும், சொன்னான்; '' இன்று நான் வீட்டுக்குச் சாப்பிடச் சென்றேன். எனக்கோ பசி தாங்க முடியவில்லை. அதனால், இன்றைக்கோ எப்போதும் போல் கிடைக்கும் கஞ்சிகூட, கிடைக்கவில்லை சார்'' என்று சொல்லிவிட்டு 'ஓ' வென அழுதான்.

அவன் நிலையை நன்கு உணர்ந்த தலைமையாசிரியர், '' தம்பீ! நீ போகலாம்'' என்று கூறியவாறே தம் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

## சிறுவர் பகுதி

பச்சைப் பேனாஅவரிடமே இருந்தது. அந்தப் பேனா அதிக விலையுடையது. அதற்குச் சொந்தக்காரனுடைய மனமோ அதை விட்டுவிட இடங் கொடுக்கவில்லை; தலைமையாசிரியரும் அதைக் கொடுத்த பாடில்லை !

குற்றம் புரிந்தவனுடைய நெஞ்சம் குறுகுறுக்குமல்லவா? செல்வத்திமிரில் வளர்ந்த-அந்தப் பேனாவுக்குச் சொந்தக்காரன் தலைமையாசிரியரிடம் மெல்ல வந்தான்.

'' சார் ! என்னுடைய பேனாவைக் கொடுங்கள் சார் !'' என்று பயந்து கொண்டே கேட்டான்.

,, எந்தப் பேனா ?'' தலைமையாசிரியர் உரக்கக் கேட்டார்.

'' பச்சை நிறப் பார்க்கர் பேனா சார்!'' என்றான் நடுங்கிக் கொண்டே......

'' இந்தா கையை நீட்டு!'' என்றதும், பேனாதான் தரப் போகிறார் என்றெண்ணிய அந்த மாணவன் தன் கையை ஆசையோடு நீட்டினான். உடனே 'பட்பட்' டெனப் பிரம்படிகள் கைகளைச் சிவக்க வைத்தன.

'' ஐயோ ! அப்பா! ...... சார் ! சார் ! நான் செய்தது தப்பு சார் ! பேனாவை அவன் திருடவில்லை! .... நான்தான் அவன் மேசை அறையில் அவனுக்குத் தெரியாமல் வச்சுட்டேன் சார் ! என்னை விட்டு விடுங்கள் சார் !......'' என்று கெஞ்சிக் கூத்தாடினான்.

தலைமையாசிரியர், தன் ஆத்திரம் தீருமளவும் அவனை அடித்துத் துரத்தினார். 'பொறாமைக்குக் கிடைத்த பரிசு இதுதானோ?' என்றெண்ணிய அவன், விட்டால் போதும் என்று ஓட்டம் பிடித்தான்!

அந்த ஏழைச் சிறுவன் அந்த ஆண்டு பள்ளி இறுதி வகுப்பிலிருந்து தேர்ச்சி பெற்றுவிட்டான் ! ஆசிரியர்கள் அவனைப் புகழ்ந்தார்கள். தலைமையாசிரியர் அவனைப் பாராட்டினார். நண்பர்கள் அனைவரும் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். பெற்றோர்களோ பெருமிதம் அடைந்தனர். பேனாவின் மூலம் அனைவருக்கும் அறிமுகமாகி விட்ட அந்தச் செல்வச் சிறுவனை அனைவரும் இகழ்ந்தனர். பொறாமையால் விளையும் கேட்டை, எண்ணி எண்ணி அவன் வருந்தினான்.

'' நாம் அக்கறையாகப் படிக்காமல் வீணாக ஒருவன் மீது பழி சுமத்தினோம். அவனைக் கெட்டவனாக்கத் திட்டமிட்டோம். நல்லவன் நல்லவன்தான் ; கெட்டவன் கெட்டவன்தான். பொன்னை யாராவது பித்தளை என்று சொன்னால் நம்புவார்களா ? கடைசியில் நாம்தான் பித்தளையாகி விட்டோம்......? '' என்று அந்த ஏழைச் சிறுவனை எதிர்த்த மாணவர்கள் அனைவரும் மனம் வருந்தினார்கள். உடனே அவனிடம் போய்த் தங்கள் செயலுக்கு மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்கள்.

நல்ல மாணவன் என்பதால், தலைமையாசிரியரே சிபாரிசு செய்து ஒரு பெரிய கம்பெனியில் அவனை வேலைக்கு அமர்த்தினார். உழைக்க அஞ்சாத அவன் எப்படியும் முன்னுக்கு வந்து விடுவான் என்று ஆசிரியர் மகிழ்ந்தார்.

காலம் ஓடியது.

வறுமையில் வாடிய அக்குடும்பம் வளமடைந்தது. ஓட்டைக் குடிசை, ஒரு ஓட்டு வீடாகியது. தாய், மகிழ்ச்சி கொண்டாள். நோய்வாய்ப்பட்ட தந்தை உடல் நலம் அடைந்தார்.

அவன் திறமையையும், உழைப்பையும் கண்ட கம்பெனி உரிமையாளர் அவனுக்குப் பெரிய பதவி கொடுத்தார். சம்பளமும் உயர்ந்தது. வறுமையில் வாடிய அவன் வாழ்க்கைத் தரம் இப்போது உயர்ந்துவிட்டது.

இதற்கெல்லாம் காரணம் என்ன ? நல்ல குணமும், ஒழுக்கமும்தான். எல்லாவற்றிற்கும் மேலாக அவனுக்குத் தன்னம்பிக்கையும், தளராத ஊக்கமும் இருந்தது. அதனால்தான் அவன் வறுமையை வெற்றி கொண்டான். அவன் சிறு வயது முதலே உத்தமனாக இருந்ததால் என்னவோ அவனுக்குப் பெயரும் உத்தமன் என்று அமைந்தது!



ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி, மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் : தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால் சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.




Criterion CO 2883



ஒரு லட்சம்
ரூபாய்
உங்களுக்கே!

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு வாங்குங்கள். வெற்றி உங்களுக்கே வரலாம்!

முதல் பரிசு: ரூ. 1,00,000
(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும்,
பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும்.
மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

57வது குலுக்கல் நாள் : 12-7-1973

பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.
2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

